நியூ ரூபி
ஆபரண மாளிகை
நகைசேமிப்புத் திட்டத்தில் இணைந்து அதிஷ்டசாலிகள் ஆகுங்கள். அதிஷ்டசாலி தொடர்ந்து பணம் கட்டத் தேவையில்லை.
7, rue Cail 75010 Paris Tel: 01 42 05 18 05

ASI Boucherie
அனைத்து இறைச்சி வகைகளையும் தரமானதாகப் பெற்றுக்கொள்ள...
195 rue du fbg st-denis, 75010 Paris
Tel: 01 42 05 23 78
M°: La Chapele Gare du Nord

பிரான்ஸ் பதிப்பு


# ஈழமுரசு®

முரசு 01 | 22 டிசம்பர் 2015 - 04 ஜனவரி 2016 | முழக்கம் 13

பிரான்ஸ்
செய்திகள்
அரச நிர்வாக
தகவல்கள் தமிழில்
www.ParisTamil.com
பரிஸ்தமிழ் ParisTamil.Com .கொம்

## தமிழ் மக்களின் நலன்களைப் பாதுகாக்க தமிழ் மக்கள் பேரவை உதயமாகியது





## கனவுலகில் முதுகு சொறிதல்



## காணாமல்போனவர்களின் உறவுகளின் சாட்சியங்களால் ஆப்பிழுத்த குரங்காகத் திணறும் ஆணைக்குழு



## போரும் ஊடகமும்

## காணாமல்போனோருக்கான நீதியைப் பெறப்புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் உதவுவார்களா..?



## பிரான்ஸ் நாடாளுமன்றத்தில் தமிழர் பிரச்சினை குறித்து கலந்துரையாடல்

## ஈழமுரசு மீதான தாக்குதல் தீவிர கவனம் பெற்றது



BHARATH
51,67 Rue Louis Blanc
75010 Paris - France
01 42 09 35 84
01 58 20 06 20
Spécialitées Indienne et Srilankaise
www.restaurantbharath.com
www.cafe-bharath.com

V.T Cash & Carry
www.vtcashcarry.com
11 rue cail, 75010 Paris,
Tel: 01 40 05 07 18 , Fax: 01 40 05 06 92
E-mail: vtsuperstore@organge.fr

Gopal and co Supermarche
72 rue Louis Blanc, 75010 Paris
M°: La chapelle ou Gare du Nord
Tél.: 01 46 07 11 10 | Fax: 01 46 07 13 03

EURO RESTO SERVICE
உணவு விடுதிகளுக்கான உபகரணங்கள், மற்றும் உங்கள் இல்ல, மண்டப வைபவங்களுக்கான பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் அனைத்து விதமான பிளாஸ்ரிக் பைகளும் மிகவும் மலிவாகவும் பெற்றுக் கொள்ளலாம்
33 bis, rue du Chatêau Landon. 75010 Paris
M°: STALINGRAD / LA CHAPELLE
Tél.: 01 40 36 00 09 / 06 68 67 15 55

Le Bourget
SABARI PALACE
நத்தார் – புதுவருடத்தை முன்னிட்டு
புத்தம் புதிய ஆடைகள்
ஆபரணங்கள்
பரிசுப் பொருட்கள்
30% முதல் 60% வரை அதிரடி மலிவு விலையில்
42 avenue Jean Jaures - 93350 Le Bourget
Tél.&Fax: 01.48.35.35.66 / 06.15.62.65.08

IMPORT EXPORT
லாச்சப்பல்
நிஷான்
சுப்பர் மார்சே
பல்பொருள் வாணிபம்
64, rue louis blanc, 75010 Paris
Tél./Fax: 01 44 72 06 03
M°: La Chapelle Gare du nord

VS CO Cash & Carry
www.vsco.com
197, rue du Fbg St.Denis - 75010 Paris
Tél.: 01 40 34 71 65
Fax: 01 53 26 72 04

கமிலஸ் மொழிபெயர்ப்பு
உங்கள் வேலையிடத்தில் பிரச்சனையா?
உங்களுக்கு அலுவலகப் பிரச்சனையா?
இடம் பெயர்ந்த சட்டரீதியான மொழிபெயர்ப்புச் சேவைகளும் உண்டு
திங்கள் முதல் வெள்ளி வரை
காலை 10:30 முதல் 13:00 வரை
பிற்பகல் 14:00 முதல் 18:00
சனிக்கிழமை பிற்பகல் 14:00 முதல் 18:00 வரை
முற்பதிவு (RDV) செய்யப்பட்டவர்களிற்கு மட்டும்
ஞாயிற்றுக்கிழமை மூடப்பட்டிருக்கும்
260 rue Faubourg St Martin - 75010 Paris
Metro: Stalingrad/Louis Blanc தொடர்புகளிற்கு : 06 51 91 08 85

NORD OPTICAL
லாச்சப்பலில் முதல் முறையாக கண் பார்வைக்குரிய
கண்ணாடி, லென்ஸ், என்பன இங்கு விற்பனை செய்யப்படும்.
வாடிக்கையாளரின் வசதிக்காக முத்துயல் (Mutuelle) சி.எம்.யு (C.M.U)
என்பன ஏற்றுக் கொள்ளப்படும்.





18, rue Demarquay, 75010 Paris
Gare du Nord (La Chapelle)
2 4 5 B D E
Horraires d'ouverture
Lundi au Samedi
10h à 19h30
தொடர்புகளுக்கு
TEL: 01.75.42.92.30

MT CASH & CARRY
CERGY EXO 95
பல்பொருள் அங்காடி





23 avenue Mondétour - 95800 Cergy st Christophe
Tél.: 01 34 24 20 01

SRI MAHAL
உங்கள் அனைத்து மளிகைத் தேவைகளுக்கும்.





197, rue du Fbg St.Denis
75010 PARIS
Tél : 01 46 07 83 12

Asnavi Coiffure
அஸ்னவி சலூான்
MAISION ALFORT - ALFORTVILLE (RER-D) அருகாமையில்
உங்களிற்கான முடிதிருத்துனர் நிலையம்
60 rue des Camélias
94140 Alfortville
06 51 60 90 44
07 51 23 90 82
06 50 35 48 85





VICHNESH SHOP
அனைத்து வகையான மளிகைப் பொருட்கள் மற்றும் அனைத்து நாடுகளுக்கான தொலைபேசி அட்டைகள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்
8 Esplanade de l europe
95100 Argenteuil
Tel: 01 39 81 35 60





Rapid Emballages
1 Bis rue du chemin Vert
93800 Epinay sur Seine
Tél / Fax : 01 39 83 68 81 Rép. : 01 58 34 04 22
Port: 06 66 79 56 89 / 06 16 81 22 00





S.P.Raju Jewellery
பழைய நகைகளுக்கு புதிய நகைகள் வழங்குகிறோம்!!!!
199 rue du Fbg St Denis,
75010 Paris
Tél: 01 58 20 17 33
13 rue cail, 75010 Paris
Tél: 01 46 07 43 42





Devi Textile & Tailors
சாரி பிளவுஸ் 30 நிமிடங்களில் தைத்துத் தரப்படும்
ஆண் பெண் இருபாலாருக்கும் அனைத்து விதமான ஆடைகளும் மற்றும் உங்கள் வசதிக்கு அமைவான தோல்பைகளும் உங்கள் எண்ணத்திற்கேற்ப வடிவமைத்துக் கொடுக்கப்படும்.
Tél: 09 51 01 85 59
Suresh: 07 81 29 86 50
29, Bld de la Chapelle
75010 Paris
M°: La Chapelle (ligne 2)





தன இலட்சுமி மஹால் (La Courneuve - France)
சுவர்ண மஹால்
SWARNA MAHAL
புதிய நகைச்சீட்டு - 2016 தை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.
31.12.2015 ற்கு முன்பு உங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுங்கள்.
மாதாந்தம் 100 € - 12 மாதங்கள்
பழைய நகைகளைக் கொடுத்து அதற்கு பெறுமதியான புதிய நகைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.
122 Av Paul Vaillant Couturier 93120 La Courneuve
Tél - 01 48 36 40 75 Port - 06 50 17 51 91 / 06 21 23 87 25
Email: swarnamahal93120@gmail.com





கபறினா இறைச்சிக்கடை
தினமும் உடன் இறைச்சி வகைகளையும், விசேடமாக ஆட்டிறைச்சிப் பங்கையும் பெற்றுக்கொள்ள...
BOUCHERIE GABARINA
62, Rue Louis Blanc
75010 Paris
Mo : La Chapelle Ou Gare du Nord
Tel : 01 40 34 05 35
Fax : 01 40 34 09 76
207, rue fbg st Denis
75010 Paris
Tel : 01 46 07 46 35
Fax : 01 46 07 41 30




ஈழமுரசு®
mediacentre ஊடகமையம்
முரசு 01 22 டிசம்பர் 2015 – 04 ஜனவரி 2016 முழக்கம் 13

“ஒரு விடுதலைப் போராட்டத்திற்கு எவ்வித காலவரம்பையும் நிர்ணயிக்க முடியாது. இறுதி இலட்சியத்தை அடையும் வரை போராட்டம் தொடர்ந்து நடைபெறும்.”

- தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன்



# தமிழ் மக்களின் நலன்களை பாதுகாக்க தமிழ் மக்கள் பேரவை உதயமாகியது

*(22.12.2015, செவ்வாய்க்கிழமை)*

தமிழ் மக்களின் உரிமை, அபிலாசைகள் மற்றும் நலன்களை வலியுறுத்தும் வகையில் வட மாகாண முதலமைச்சர், மதத் தலைவர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள், வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த சிவில் சமூகப் பிரதிநிதிகள் இணைந்து தமிழ் மக்கள் பேரவை என்ற அமைப்பை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை உருவாக்கியுள்ளனர். இந்த அமைப்பின் தலைவராக வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும் இணைத் தலைவர்களாக இதய சிகிச்சை வைத்திய நிபுணர் பு.லக்ஷ்மன், மட்டக்களப்பு சிவில் சமூக அமைப்பின் செயலாளர் த.வசந்தராஜா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஞாயிறு மாலை 5 மணியளவில் யாழ்.பொது நூலக கேட்போர் கூடத்தில் இந்த அமைப்பு அங்குரார்ப் பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. சமயத் தலைவர்களுடன் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் சார்பில் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் அதன் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் அதன் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், புளொட் அமைப்பின் சார்பில் க.சிவநேசன் (பவன்) ஆகியோர் கலந்து கொண்டனர்.

இது தொடர்பில் தமிழ் மக்கள் பேரவை விரிவான விளக்க ஊடக அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது...

*அறிமுகம்*

மதத் தலைவர்கள், வடக்கு மாகாண சபையின் மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் இணைந்து தமிழ் மக்களின் நலன்களைப் பாதுகாப்பதையும் வலியுறுத்துவதையும் நோக்காகக் கொண்டு உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பே தமிழ் மக்கள் பேரவையாகும்.

வடக்கு மாகாண சபை முதலமைச்சர் மாண்புமிகு சி.வி.விக்னேஸ்வரன் அவர்களைத் தலைவராகவும் வைத்திய நிபுணர் பு.லக்ஷ்மன், மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூகத்தின் செயலாளர் திரு.ரி. வசந்தராஜா ஆகியோரை இணைத் தலைமையாகவும் கொண்ட பேரவையானது மதத் தலைவர்களையும் தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களையும் சிவில் சமூகப் பிரதிநிதிகளையும் உறுப்பினர்களாகக் கொண்டமைந்த அமைப்பாகும்.

தமிழ் மக்களின் நலன்கள், உரிமைகள், அபிலாசைகள் என்பவற்றை அடையும் பொருட்டும் அவற்றை அடையாளப்படுத்தும் பொருட்டும் அமைக்கப்பட்ட தமிழ் மக்கள் பேரவையானது தேவையான கட்டமைப்புக்களுக்கும் துறைகளுக்கும் பொருத்தமான நிபுணர்களை இனங்கண்டு அவர்களை உள்ளடக்கியதான உபகுழுக்களை அமைத்துக்கொள்ளும். இந்த உப குழுக்கள் தமக்குக் குறித்தொதுக்கப்பட்ட இலக்குகளை குறிப்பிட்ட கால எல்லைக்குள் செய்து முடிக்கும் என்பதுடன் தேவையான சந்தர்ப்பங்களில் உப குழுக்களின் பணிகள் நீண்டு செல்லும் பொருட்டு நிலைத்தனவையாகவும் அமையும்.

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டுக் குழுவானது தேவைகளுக்கமைவாக பேரவையைக் கூட்டி தீர்மானங்கள் எடுக்கின்ற ஏற்பாடுகளைச் செய்து கொள்ளும்.

தமிழ் மக்களின் நலன்கள் தொடர்பில் உருவாக்கப்பட்டுள்ள தமிழ் மக்கள் பேரவையில் தற்போது இடம்பெற்றுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை என்பது முற்றுப்பெற்றதன்று. இன்னமும் சில அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள், பெண்கள் பிரதிநிதித்துவம் என்பன உள்வாங்கப்படவேண்டிய தேவையுள்ளது. இத் தேவையை நிறைவு செய்யும் பணியில் ஏற்பாட்டுக் குழு சம்பந்தப்பட்டவர்களுடன் சந்திப்புக்களை மேற்கொண்டு வருகிறது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இன்றையதினம் (19.12.2015) அமைக்கப்பட்டுள்ள தமிழ் மக்கள் பேரவையானது நேர்மையுடனும் அர்ப்பணிப்புடனும் செயற்படும் போது அதனால் தமிழ் மக்கள் காத்திரமான பெறுவனவுகளை அனுபவிப்பர் என்பது உண்மை.

*அமைப்பின் தேவைப்பாடு*

தமிழ் மக்கள் பேரவை என்ற அமைப்பு தமிழ் மக்களின் உரிமைகள், நலன்கள், அபிலாசைகள் என்பவற்றை வலியுறுத்தும் வகையில் உருவாக்கப்பட்டதாகும்.

தொடர்ச்சி 04ம் பக்கம்




கடந்த 19ம் திகதி சனிக்கிழமை பிரான்சின் தலைநகர் பரிசின் புறநகரான சவினி டி தொம்பில் நகரில் நடைபெற்ற தமிழ்ச்சோலையின் முத்தமிழ் விழா நிகழ்வில் இருந்து...



ஈழமுரசு

"உண்மையின் முன்னால்
நடுநிலைமை என்பது இல்லை"

"MEDIACENTRE"
JOURNAL TAMOUL
bimensuel **Gratuit**

MEDIACENTRE
BP 18
93701 Drancy Cedex,
France
Tel: 00 33 970 464 464
Port: 00 33 783 838 868

இணையத்தளம்
www.eelamurazu.com
ஆசிரியர்பீடத் தொடர்புகட்கு:
@: eelamurazu@gmail.com
விளம்பர விநியோகத் தொடர்புகட்கு:
@: eelamurazuadm@gmail.com

**Le Président:** P.Velupillai
**தலைவர்:** ப.வேலுப்பிள்ளை

**Redacteur:** K.Jeisanthar
**பொறுப்பாசிரியர்:** கி.ஜெய்சந்தர்

**ஆசிரியர் பீடம்**
எழுவான் (தென்தமிழீழம்)
வீரமணி (வடதமிழீழம்)
மதிமாறன் (தமிழகம்)
சுந்தரதன் (பிரான்ஸ்)
சோழகரிகாலன் (பிரான்ஸ்)
விவேகன் (பிரான்ஸ்)
அசுரன் (பிரான்ஸ்)
சுமந்திரன் (பிரான்ஸ்)
அருணன் (பிரான்ஸ்)
ஆதவன் (பிரான்ஸ்)
ச.ச.முத்து (பிரித்தானியா)
சேயோன் (பிரித்தானியா)
சேரமான் (ஐரோப்பா)
ஈசன் (கனடா)

**விளம்பரம் / விநியோகம்**
சுஜி (பிரான்ஸ்)
அருளப்பு (பிரான்ஸ்)
வேந்தன் (பிரான்ஸ்)
கஜி (பிரான்ஸ்)
கஜன் (பிரான்ஸ்)
மோகன் (பிரித்தானியா)

Impression:
IPS,
ZI de Iscles, 30 av. des Alpines,
13160 Châteaurenard

பிரித்தானியா:
Mohan: 00 44 742 988 5742
@: eelamurazu.uk@gmail.com

**சந்தா விபரம்**
(அஞ்சற் செலவு மட்டும்)
**வருட சந்தா**
பிரான்ஸ் 49€
ஐரோப்பா 59€
ஏனைய நாடுகள் 69€

**குறிப்பு:**
இவ்விதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு.
ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.

லாச்சப்பலில்
ஈழமுரசுடனான விளம்பரத் தொடர்புகளுக்கு
பாலன்:
29, rue Philippe de Girard,
75010 Paris
Port: 06 63 01 75 80

# தமிழ் மக்களின் நலன்களை....



அரசியல் என்ற எல்லை கடந்து தமிழ் மக்களின் நலன்பற்றிச் சிந்திக்க வேண்டிய காலகட்டத்தில் நாம் அனைவரும் இருக்கின்றோம் என்ற பேருண்மை இவ்விடத்தில் உணரப்பட வேண்டியதாகும். இலங்கை மண்ணில் தமிழ் மக்கள் சுதந்திரத்துடனும் உரிமையுடனும் வாழ்வதற்கான ஒரு நிரந்தரமான சூழமைவு ஏற்படுத்தப்படவேண்டும் என்பதை சிங்கள மக்களும் ஏற்றுக்கொள்வர் என்று நாம் நம்புகின்றோம். அதேவேளை தமிழ் மக்களுக்கான உரிமையை வழங்குவதென்பது இந்த நாட்டில் வாழும் எந்த இனத்திற்கும் பாதகமானது அல்ல என்ற நிதர்சனத்தையும் இதனோடு சம்பந்தப்பட்ட அனைவரும் முதலில் புரிந்து கொண்டாக வேண்டும்.

கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக தமிழினம் படுகின்ற துன்பங்கள், துயரங்கள் என்பன சிறுபான்மையின மக்கள் என்ற ஒரே காரணத்திற்கான அனுபவிப்பாக மட்டும் இருந்து விடவில்லை. மாறாக பல்லின மக்களின் இருப்பை - ஒன்றுக்கு மேற்பட்ட சமயங்களின் அனுஷ்டிப்பை - தமது மொழி தவிர்ந்த ஏனைய மொழிகளை அங்கீகரிக்க முடியாத வக்கிரங்களின் வெளிப்பாடாகவும் இருப்பதை நாம் கண்டு கொள்ள முடியும். எனவேதான் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு இன்னமும் தீர்வு கான முடியாத துர்ப்பாக்கியநிலை காணப்படுகிறது.

இத்தகைய தோல்விகளின் எதிர் விளைவுகள் காலத்திற்குக் காலம் தமிழின சங்கார வேள்வியாக அரங்கேறி வருகிறது. பேரினவாத உசுப்பேற்றல்கள் அதற்கான முரசுகளின் முழக்கங்களை மீண்டும் பேரினவாத சக்திகள் முழங்க, உருவேற்றம் உச்சமாகி அதன் உச்சமே 2009 இல் வன்னிப்பெரு நிலப்பரப்பில் நடந்த தமிழ் இனத்தின் சங்காரமாகும்.

இந்நிலையில் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது சர்வதேச சமூகத்தின் காத்திரமான வகிபங்குடன் மட்டுமே சாத்தியமாகும் என்ற நிஜம் வெளிப்படுகிறது. எனினும் அந்தத் தீர்வு என்பது நடந்து முடிந்த யுத்தத்தின் இழப்புகளுக்கான சமாளிப்புக்களாகவோ அல்லது இனப்பிரச்சினைக்கான தீர்வு தேவை என்று வலியுறுத்துகின்ற அரசியல் தரப்புகளை சாந்தப்படுத்துகின்ற சம்பிரதாயங்களாகவோ இருந்து விடக்கூடாது.

அத்தகையதொரு தற்காலிக ஏற்பாடுகள் தமிழ் மக்களின் எதிர்கால நிலைமைகளை மிகவும் மோசமானதாகவே ஆக்கிக்கொள்ளும். ஆகையால் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வு என்பது தமிழ் மக்களின் அபிலாசைகளை, அவர்களின் வாழ்வியலுக்கான உரிமைகளை, சுயநிர்ணயத்தின் பண்புகளை தாராளமாகக் கொடுப்பதாக இருத்தல் வேண்டும். இத்தகையதொரு நிலைமையில் தனிமனிதர்களின் தீர்மானங்களை, ஒரு சில அரசியல்வாதிகளின் ஒத்தோடலை நிரந்தர தீர்வாக்கிக் கொள்வது அர்த்தமற்றது.

ஆக, இழப்புக்களைச் சந்தித்தவர்கள் துன்பங்களைச் சுமந்து அதன் அனுபவிப்புக்களால் உருக்குலைந்து போயுள்ள போதிலும் ஒரு காத்திரமான தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் வாழுகின்ற தமிழ் மக்களின் அங்கீகாரம் பெற்ற தீர்வுகளே தேவையானவையாகும்.

எனினும் இத்தகைய தீர்வை வழங்குவதில் இதுவரை காலமும் ஆட்சிக்கு வந்த எந்த அரசுகளோ, பெரும்பான்மை இனம் சார்ந்த கட்சிகளோ முன்வரவில்லை. இத்தகையதொரு நிலைமையில் பொதுமுடிவை எடுப்பதில் அரசியல் என்ற எல்லை கடந்து ஒட்டுமொத்தத் தமிழினத்தின் பிரதிபலிப்பை நிர்ணயம் செய்யக் கூடியதான அமைப்பு தேவைப்படுகிறது. அந்த இலக்கை ஈடுசெய்யக்கூடியது என்ற நம்பிக்கையோடு மதபீடங்கள், அரசியல் தலைமைகள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் ஒன்றிணைந்த ஓர் அமைப்பாக தமிழ்மக்கள் பேரவை உருவாகியுள்ளது.

இலங்கையில் நிரந்தரமான அமைதியும் சமாதானமும் சாந்தியும் நிலைக்க வேண்டுமாயின் அது தமிழ் மக்களின் அபிலாசைகளை, உரிமைகளை வெறுப்பின்றி வழங்குவதன் மூலமே சாத்தியமாகும் என்ற மெய்மையில் தமிழ் மக்கள் பேரவை இந்த நாட்டிற்கும் அனைத்து இனத்திற்கும் உதவுவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது என்பதே உண்மை.

இங்கு அரசியல் நோக்கங்களோ இனத்துவ வக்கிரங்களோ பழி தீர்க்கும் எண்ணங்களோ அறவேயில்லை என்பது சத்தியமானது.

தமிழ் மக்கள் பேரவை தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற எல்லைகளுடன் மட்டும் தனது பணியை மட்டுப்படுத்தாமல் தமிழ் மக்களின் கலாசார பண்பாட்டு விழுமியங்களைப் பாதுகாத்தல், கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட சமூக மேம்பாட்டில் கரிசனை கொள்ளுதல், எங்கள் பொருளாதாரத்தை- வளப்பயன்பாடுகளை உச்சமாக்குதல் உள்ளிட்ட பல்வேறு மக்கள் நலப் பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளும் என்ற உத்தரவாதமும் இங்கு தரப்படுகிறது.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மரண அறிவித்தல்

பிறப்பு
02
-
07
-
1930







இறப்பு
07
-
12
-
2015

## திருமதி மேரி யொசப்பின் புவிராஜசிங்கி (டெய்சி)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்சை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மேரி யொசப்பின் புவிராஜசிங்கி (டெய்சி) MARY JOSEPHINE PUVIRAJASINGHE (DAISY) அவர்கள் கடந்த 07.12.2015 திங்கட்கிழமை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்றவர்களான JAMES MANUELPILLAI - ROSE BEATRICE ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்ற MICHAEL JACOB JUSTIN PUVIRAJASINGHE அவர்களின் அன்பு மனைவியும் GEORGE (RAVI), EMILTON, SHEREEN, JUDE, SHIRANI, காலஞ்சென்ற BENITA, மற்றும் LUCKY (LAKSHMAN) ஆகியோரின் அன்புத் தாயாரும் CHASIKALA, RAHINI, காலஞ்சென்ற RANJAN, மற்றும் SAUNDARAM, NISHA ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான BABO, NAYSUM, MARSILLA, ANTON மற்றும் BABBY, IDA, JERAD ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான BASTIAMPILLAI, BASTIAN, CHRISTOPHER, RAJARATNAM, NOEL மற்றும் JULIANA, THILAKA ஆகியோரின் அன்பு மைத்துனியும் KINGSTAN, RANDY, STEPHEN, MARINE, BRAYAN, CATHY, BRENDA, SANJAY, SIVAGINI, MYSTICAA, ANOJA, DERRON, UGEENA, MITHUSHA, BERSHA, JEENETH, CINDY, SANITA. FRANCIS ஆகியோரின் அன்புப் பேத்தியும் AARON, NEIL, LYAH MARIA, JOSHUA, KAYDEN, SHAINICE, LORYS, KAILYSS ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

**நல்லடக்க ஆராதனை கடந்த (16.12.2015) புதன்கிழமை 15.00 மணிக்கு**
NOTRE DAME DE L'ASSOMPTION, 77550 MOISSY CRAMAYEL **தேவாலயத்தில்**
**நடைபெற்று பின்னர்** MOISSY CRAMAYEL (Nouveau Cimetière) **இல் நல்லடக்கம் நடைபெற்றது.**

| | | |
|---|---|---|
| **தொடர்பு:** | RAVI | - 01 64 88 83 95 (FRANCE) |
| | SHEREEN | - 01 64 88 52 22 (FRANCE) |
| | JUDE | - 06 51 65 11 39 (FRANCE) |
| | EMILTON | - 01 43 83 20 94 (FRANCE) |
| | SAUNDARAM | - 0044 20 82 04 61 38 (LONDON) |
| | LUCKY | - 0044 77 22 07 51 86 (LONDON) |

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல் : குடும்பத்தினர்.

ஈழமுரசு

# தமிழ் மக்கள் பேரவை நம்பிக்கையின் துளிர்

வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் கடந்த வாரம் உருவான தமிழ் மக்கள் பேரவை சிங்களப் பேரினவாதிகளுக்கு மட்டுமல்ல, தமிழ் மக்களை ஏமாற்றி தங்கள் சுய இலாபங்களை அடைந்த தமிழ்க் கட்சிகளுக்கும் அவர்களின் தலைமைகளுக்கும் பேரதிர்ச்சியைக் கொடுத்திருக்கின்றது. சமூக வலைத் தளங்களிலும், அவர்கள் சார்பான இணையத் தளங்கள் மற்றும் ஊடகங்களிலும் எழுதப்பட்டு வருகின்ற தரக் குறைவான வார்த்தைப் பிரயோககங்களே அவர்களின் அச்சத்தை அறிந்துகொள்ளப் போதுமானதாக இருக்கின்றது.

தமிழ் மக்களின் பிரச்சனையை அரசியல் ரீதியாக நகர்த்திச் செல்வதற்காக இந்திய இராணுவத்துடன் கடுமையான போர் இடம்பெற்றுக்கொண்டிருந்த 1989ம் ஆண்டு காலப்பகுதியில் விடுதலைப் புலிகள் அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பித்திருந்தார்கள். விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி என்ற பெயரில் தோற்றம்பெற்ற அக்கட்சி, தேர்தல்களில் பங்கேற்காதபோதும், சிறீலங்காவின் ஓர் அங்கீகரிக்கப்பட்ட கட்சியாக அது பதிவு செய்யப்பட்டிருந்தது. ஆனால் அரசியல் வழியில் சிறீலங்காவிடம் இருந்து எதனையும் பெற்றுவிடமுடியாது என்ற யதார்த்த நிலையில் அக்கட்சியின் தேவையும் இல்லாமல் போனதால், விடுதலைப் புலிகளே அக்கட்சியின் செயற்பாடுகளைக் கைவிட்டுவிட்டனர். 2012 இல் ஆவணங்கள் எவையும் சமர்க்கப்படவில்லை என்று கூறி சிறீலங்கா தேர்தல் ஆணையகமும் கட்சியின் பதிவை இரத்துசெய்துவிட்டது என்பது வேறுகதை.

2002ம் ஆண்டு சர்வதேச நாடுகளின் மத்தியத்துவத்துடன் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், தமிழ் மக்களின் அபிலாசைகளையும், தமிழ் மக்களின் மக்களாட்சியின் மீதான நம்பிக்கையையும் உலக சமூகத்திற்கு வெளிப்படுத்தும் வகையிலான அரசியல் கட்சி ஒன்றின் தேவை எழுந்தபோது உதிரிகளாக இருந்த சில தமிழ்க் கட்சிகளையும், முன்னாள் போராட்ட இயக்கங்களையும் ஓரணியில் கொண்டுவந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விடுதலைப் புலிகள் உருவாக்கினார்கள்.

விடுதலைப் புலிகளால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆரம்பிக்கப்படவில்லை என்று முழுப்பூசணிக்காயை சோற்றில் மறைப்பதுபோல் இப்போது சம்பந்தர் பொய் உரைத்தாலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்திற்கு விடுதலைப் புலிகள்தான் காரணம் என்பது வெள்ளிடைமலை. அதனால்தான் கூட்டமைப்பின் சார்பில் தேர்தல்களில் நின்றவர்களையெல்லாம் மக்கள் தங்கள் வாக்குகளால் பெரும் வெற்றிபெறவும் வைத்தார்கள். இப்போதும் அதற்கு ஆதரவு வழங்குகின்றார்கள்.

விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் இருந்த காலத்தில் தமிழ் மக்களின் தேவைகளைப் பிரதிபலிப்பவர்களாகவும் தமிழ்த் தேசியத்தைப் பிரதிபலிப்பவர்களாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்தவர்கள் செயற்பட்டனர். ஆனால், 2009 மே பாரிய இன அழிப்புப் போரின் முடிவிற்குப் பின்னர் சிங்கள பௌத்த பேரினவாதத்தை திருப்திப்படுத்துபவர்களாகவும், வல்லாதிக்க சக்திகளின் விருப்பங்களுக்கு தலையாட்டும் பொம்மைகளாகவும் கூட்டமைப்பின் தலைமையும் அதிலிருந்த சிலரும் மாறத் தொடங்கியதன் பின்னர் தேசியத்தை நேசித்த சக்திகள் ஒவ்வொன்றாக கூட்டமைப்பில் இருந்து விலகவேண்டிய நிலை ஏற்பட்டது. அல்லது அவ்வாறானதொரு நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்படுத்தப்பட்டது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்ட கூட்டமைப்பின் தலைமைகள் தங்களது எண்ணம்போல் செயற்படத்தொடங்கினர்.

2013ம் ஆண்டு வடமாகாண சபைக்கான தேர்தல் வந்தபோது சிறீலங்காவின் முன்னாள் நீதிபதிகளில் ஒருவரான சி.வி.விக்னேஸ்வரன் அவர்களை கொண்டுவந்து நிறுத்தினார்கள். தமிழர்களுக்கும், சிங்களவர்களுக்கும் நடுநிலையாக செயற்படக்கூடியவர் என்பதால் இரு தரப்பும் ஏற்றுக்கொள்ளக் கூடியவர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இவரைத் தேர்வு செய்ததற்கு விளக்கமும் அளித்திருந்தது. ஆரம்பத்தில் கூட்டமைப்பின் எண்ணம் போலவே செயற்பட்ட இவர், சில மாதங்களிலேயே உண்மை நிலையைப் புரிந்துகொண்டு தன்னைச் சுதாகரித்துக்கொண்டார்.

இனப்படுகொலையில் இருந்து உயிர் தப்பிய மக்களினதும், காணாமல்போனவர்களின் உறவுகளினதும் கண்ணீர்க் கதைகளையும் கேட்ட இவர், இன அழிப்புக்குள் தமிழ்ச் சமூகம் எவ்வாறெல்லாம் பாதிக்கப்பட்டு அழிகின்றது என்ற உண்மையை நேரடியாகவே அறிந்துகொண்டார். ஒரு நீதிபதியாக இருந்த இவர், நிச்சயமாக கூட்டமைப்பின் நிலைப்பாட்டையும், தமிழ் மக்களின் நிலையையும் நீதித் தராசில் வைத்து எடைபோட்டு புரிந்துகொண்டிருப்பார். கூட்டமைப்பில் இருந்தவர்களின் போலி முகத்தைக் கண்டுகொண்டிருப்பார். சிங்கள ஆட்சியாளர்கள் எவர் வந்தாலும் தமிழ் மக்களுக்கு நீதியும் நியாயமும் கிடைக்காது என்ற பேருண்மையை புரிந்துகொண்டதால்தான், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மைத்திரிபால சிறீசேனவிற்கு ஆதரவாக நின்றபோதும் அக்கட்சியில் இருந்த இவர் அதற்கு எதிராக குரலெழுப்பி, கூட்டமைப்பின் தலைமைக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தினார்.

தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்டது இனப்படுகொலை அல்ல அதற்கு ஆதாரம் இல்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் அவரின் எடுபிடிகளும் நாடு நடாகச் சென்று பிரச்சாரம் செய்தபோது, வடமாகாண சபையில் நடந்தது இனப்படுகொலையே என்று துணிந்து தீர்மானம் நிறைவேற்றினார். முதலமைச்சரின் நடவடிக்கைகள் தங்கள் இருப்பிற்கே ஆபத்தை ஏற்படுத்தி விடுமோ என்று அஞ்சிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை அவரை கட்சியில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்தது. ஆனால், அது 'ஆப்பை இழுத்த குரங்கின் கதையாக' மாறிவிடுமோ என்ற அச்சமே கூட்டமைப்பின் தலைமை இதுவரை அவரை கட்சியில் இருந்து விலக்காகததற்குக் காரணம். ஒரு கட்டத்தில் அவர் கட்சியில் இருந்து விலகி வேறொரு கட்சியில் சேர்ந்துவிட்டால் தமிழ் மக்களும் அவர் பின்னே சென்றுவிடுவாரோ என்ற அச்சம் கூட கூட்டமைப்பினர் மத்தியில் எழுந்திருந்தது. இந்நிலையில் தான் அண்மையில் சிறீலங்காவிற்கான இந்திய உயர்ஸ்தானிகர் வை.கே.சின்ஹா மற்றும் இந்திய துணைத் தூதுவர் ஏ.நடராஜன் ஆகியோர் யாழ்ப்பாணத்தில் உள்ள வடமாகாண முதலமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு நேரில் சென்று சந்திப்பொன்றை நடத்தியிருந்தனர். தமிழக மீனவர் பிரச்சனை குறித்த சந்திப்பு இதுவெனக் கூறப்பட்டபோதும், முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கூட்டமைப்பில் இருந்து விலகி இன்னொரு கட்சியுடன் இணைவதைத் தடுப்பதே முக்கிய நோக்கமாக இருந்துள்ளது. கட்சி தாவல் எதனையும் செய்யவேண்டாம் என முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம் அவர்கள் நேரில் கோரியிருக்கின்றனர். இது கோரிக்கை என கூறப்படுகின்றபோதும், ஓர் அச்சுறுத்தலாகவே தமிழ் மக்களால் பார்க்கப்படுகின்றது. தங்கள் எண்ணம்போல் செயற்படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பலவீனப்படுவதை இந்தியாவே விரும்பவில்லை என்பதையே இது காட்டுகின்றது.

எனினும், கூட்டமைப்பினால் தமிழ் மக்களுக்கு எந்தவொரு தீர்வைப் பெற்றுத்தரவோ அல்லது செயற்பாட்டை முன்னெடுக்கவோ முடியாது என்ற நிலையில் தான், தமிழ் மக்களின் உரிமை, அபிலாசைகள் மற்றும் நலன்களை வலியுறுத்தும் வகையில் வடக்கு மாகாண முதலமைச்சர் தலைமையில், மதத் தலைவர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள், வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த சிவில் சமூகப் பிரதிநிதிகளை இணைந்து தமிழ் மக்கள் பேரவை என்ற அமைப்பை உருவாக்கியுள்ளனர். இதில் கூட்டமைப்பின் தலைமையினால் தற்போது புறமொதுக்கப்பட்டவர்களும், புறமொதுக்கப்பட்டு வருபவர்களும் இணைந்திருப்பது வரவேற்கத்தக்கது.

அரசியல் தீர்வினை முன்வைப்பதற்கும் - போருக்குப் பிந்திய தமிழ் சமூகத்தை கட்டியெழுப்புவதற்கும் - சிவில் சமூகப் பிரதிநிதிகளுடனான ஓர் உறுதியான செயற்றிட்ட முன்னெடுப்பே இந்தப் பேரவை என்று முதலமைச்சர் விக்னேஸ்வரன் இந்தப் பேரவையின் தோற்றம் குறித்து வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டிருக்கின்றார்.

யாரை நம்புவது என்று தமிழ் மக்களின் எதிர்பார்ப்பிற்கு ஒரு நம்பிக்கையின் துளிராக இந்தத் தமிழ் மக்கள் பேரவை பிறந்திருக்கின்றது. இந்தப் பேரவையின் வருகையை நாம் வரவேற்கும் அதேவேளை, இந்தப் பேரவையின் செயற்பாடுகளை விரிவுபடுத்தவும் தமிழ் மக்களின் பிரச்சனைக்கு நிரந்தரமான ஒரு தீர்வைத் தேடவும் புலம்பெயர்ந்த நாடுகள் எங்கும் செயற்பட்டு வரும் தமிழ் மக்கள் பேரவைகள் மற்றும் தேசியக் கட்டமைப்புக்கள் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும் என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பு.

## இனப்படுகொலை இராணுவத்தை நவீனமயமாக்க

# இந்தியா உதவி - பிரித்தானியா நிதியுதவி!

இனப்படுகொலையில் ஈடுபட்ட சிறீலங்கா இராணுவத்தை நவீனமயப்படுத்தும் முயற்சிகள் சிறீலங்கா அரசினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தியா உள்ளிட்ட மேம்பட்ட நாடுகளின் உதவியுடன் தங்கள் நாட்டு இராணுவம் நவீனமயமாக்கப்படும் என்று சிறீலங்காவின் பிரதமர் ரணில்விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். சிறீலங்கா இராணுவத்தைச் சேர்ந்த சில படைப் பிரிவினரின் பயிற்சி நிறைவு அணிவகுப்பு, அந்நாட்டின் தியாதலாவா நகரில் கடந்த 20ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில் ரணில் விக்ரமசிங்க கலந்துகொண்டு உரையாற்றினார். அப்போது அவர் கூறுகையில், ஆசியக் கண்டத்தில் இந்தியா, ஜப்பான் நாடுகளுக்கு அடுத்தபடியாக பழைமையானது சிறீலங்கா இராணுவம். மேலும், கடந்த 30 ஆண்டுகளாக உள்நாட்டுப் போரில் ஈடுபட்டு, அதில் வெற்றி பெற்ற நமது இராணுவம், அனைத்து பெருமைகளுக்கும், புகழுக்கும் தகுதியானது. பாதுகாப்புத் துறையில் அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட வளர்ந்த நாடுகளுடன் நல்லுறவு பேணுவதும், ஒருங்கிணைந்து செயல்படுவதும் மிகவும் அவசியம். அதேபோல், இந்தியா, சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகளுடனும் இணைந்து செயல்படுவது முக்கியம். வரும் 2025ம் ஆண்டுக்குள் சிறீலங்கா இராணுவத்தை நவீனமயமாக்குவது அவசியம். அதற்கான நடவடிக்கைகள் இந்தியா உள்ளிட்ட நாடுகளின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் என்றார் அவர்.

இதற்கிடையே, இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜ் விரைவில் சிறீலங்காவிற்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். இந்திய நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். பாகிஸ்தானில் அண்மையில் நடைபெற்ற மாநாட்டில் பங்கேற்கச் சென்றிருந்த அவர், அந்நாட்டு பிரதமர் நவாஸ் ஷெரீஃப், வெளியுறவுத் துறை அமைச்சர் சர்தாஜ் அஜீஸ் ஆகியோரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியது குறித்து இந்தியப் நாடாளுமன்றத்தில் விளக்கம் அளித்தார். அப்போது, உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளுக்கும் பதிலளித்தபோது, பாகிஸ்தானுடன் மட்டுமன்றி, இந்தப் பிராந்தியத்தில் உள்ள அனைத்து



நாடுகளுடனும் இந்தியா பேச்சுவார்த்தை நடத்தும். சிறீலங்கா அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு

தொடர்ச்சி 22ம் பக்கம்

## சிறீலங்கா - கொரியா ஒப்பந்தம்

சிறீலங்கா அரசாங்க இரசாயன பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் இலத்திரனியல் விஞ்ஞான ஆய்வு செயற்பாடுகள் மற்றும் டிஎன்ஏ ஆய்வு என்பவற்றை அபிவிருத்தி செய்வதற்காக 3.2 அமெரிக்க டொலர் நிதியை கொரிய அரசு வழங்குவதற்கான ஒப்பந்தமொன்றில் சிறீலங்கா மற்றும் கொரிய அரசு கைச்சாத்திட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் கீழ் இரு நிறுவனங்களுக்கிடையில் தொழில்நுட்ப அபிவிருத்தி, நீதி விஞ்ஞான பகுப்பாய்வு செயற்பாட்டுபரி

மாற்றம், குறித்த துறையில் புதிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல் என்பன நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ச தலைமையில் நடைபெற்ற இந்த ஒப்பந்தக் கைச்சாத்திடல் நிகழ்வில் அரச இரசாயன பகுப்பாய்வாளர் சகுந்தலா தென்னகோன் மற்றும் கொரிய அரசின் நீதி விஞ்ஞான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி சியோ ஜியோ ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

## பசிலின் விமானப் பயணங்களுக்கு 15.16 மில்லியன் ரூபா செலவு

மன்னராட்சிக் காலம் போல், மகிந்தவின் குடும்ப ஆட்சிக் காலத்தில் இலங்கைத் தீவில் அவர்கள் போட்ட ஆட்டமும் அராஜகமும் கொஞ்ச நஞ்சமல்ல. அவர்களை நிரந்தரமாக ஆட்சியில் இருந்து அகற்றும் திட்டத்துடன் ஊழல் விசாரணைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதற்காக மகிந்த முதல் அவரது சகோதரர்கள், உறவினர்கள், நண்பர்கள் எனப் பலரும் தற்போது விசாரணைகளை



எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், சிறீலங்காவின் முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் சகோதரருமான பசில் ராஜபக்சவின் உள்ளக விமானப் பயணங்களுக்காக 15.16 மில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டது தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. பசில் ராஜபக்ச சிறீலங்கா விமானப் படைக்குச் சொந்தமான உலங்குவானூர்திகளையே பயன்படுத்தி உள்ளதாகவும், சில வேளைகளில், 10 கிலோ மீற்றர் தூரங்களுக்காகக் கூட அவர் உலங்குவானூர்திகளைப் பயன்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான கட்டணம் 15.16 மில்லியன் ரூபாய் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பாரிய நிதி மோசடி தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அமைச்சரின் இந்தப் பயணங்களுக்கான கட்டணங்களை செலுத்துவதற்கு திவிநெகும நிதியத்தின் பணம் பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. இந்த நிதி மோசடி தொடர்பில் பசில் ராஜபக்ச அழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படலாம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அருண்டவன் கண்ணுக்கு ஆகாயம் எல்லாம் பேய்..!

தமிழீழ விடுதலைக்கு விதையான தமிழகத்தைச் சேர்ந்த மாவீரர்கள்



ஈழமுரசு இதழ் கடந்த மாவீரர் தினத்தை முன்னிட்டு சிறப்பிதழ் ஒன்றை வெளியிட்டதை வாசகர்கள் அனைவரும் அறிந்திருப்பார்கள். மாவீரர் தினத்தை முன்னிட்டு ஈழமுரசு சிறப்பிதழாக வருவது ஒன்றும் ஆச்சரியப்படத்தக்க விடயம் அல்லத்தான். ஆனால் இம்முறை வெளிவந்த சிறப்பிதழில் தமிழீழ விடுதலைக்காக தங்கள் உயிர்களை அர்ப்பணித்த தமிழக மாவீரர்களின் விபரங்களை முதல் தடவையாக ஈழமுரசு வெளியிட்டிருந்தது சிலருக்கும் புருவத்தை உயர வைத்திருந்தது.

ஐயையோ...! காட்டிக் கொடுத்துவிட்டார்கள், இரகசியத்தை உடைத்துவிட்டார்கள் என்று புலம்புபவர்கள் ஒருபுறமிருக்க, ஈழமுரசு மீதான தங்கள் வன்மத்தைத் தீர்த்துக்கொள்ளும் சக்திகளுக்கு மெல்வதற்கு அவல் கிடைத்த மகிழ்வில் மென்று துப்பத் தொடங்கிவிட்டார்கள்.

மெத்தப்படித்த அதிமேதாவிகளும் அவர்கள் எழுதும் குப்பைகளைப் போட்டு இணைய ஊடகம் நடத்தும் 'ஜம்பவான்களும்' இந்த விடயத்தை ஊதிப் பெருதாக்கித் தங்கள் வித்துவத்தனத்தைக் காட்ட வெளிக்கிட்டுவிட்டனர். ஆனால் அருண்டவன் கண்ணுக்கு ஆகாயம் எல்லாம் பேய் என்பதுபோல் இவர்களின் அறிவிலித்தனம்தான் இதில் வெளிப்பட்டுள்ளது.

ஈழமுரசு எந்தவொரு மாவீரர் தகவலையும் ஆதாரம் இல்லாமல் வெளியிடுவதில்லை என்பதை வாசகர்களே நன்கு அறிவார்கள். விடுதலைப் புலிகளால் வெளியிடப்பட்ட ஒளிவீச்சு காணொளிகளில் மாவீரர்கள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டதாக பதியப்பட்டுள்ள விபரப் பகுதியை எடுத்துப் பாருங்கள், அதில் வீரச்சாவைத் தழுவிய தமிழகத்தைச் சேர்ந்த மாவீரர்களின் விபரங்களுடன் அவர்களின் நிழற்படங்களையும் வெளியிட்டிருக்கின்றார்கள். விடுதலைப் புலிகளால் வெளியிடப்பட்ட மாவீரர் விபரக் கையேட்டை எடுத்துப் பாருங்கள், அதில் இந்த மாவீரர்களின் விபரங்கள் அவர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதை உறுதிப்படுத்தியே பதியப்பட்டுள்ளன. இதில் எந்தவொரு தகவலையும் ஈழமுரசு சுயமாக வெளியிடவில்லை. விடுதலைப் புலிகளின் வெளியீடுகளை ஆதாரமாகக் கொண்டே அவை தொகுத்து வெளியிடப்பட்டுள்ளன. இன்னும் தேடலை அதிகம் மேற்கொண்டிருந்தால், மேலும் பல தமிழீழ விடுதலைக்காக தங்கள் உயிர்களை அர்ப்பணித்த தமிழகச் சேர்ந்த மாவீரர்களை அடையாளம் கண்டிருக்க முடியும்.

கட்டுரைகளையும், ஆய்வுகளையும் மேற்கொள்ளும் அதிமேதாவிகள் கட்டுரைகளை எழுதுவதற்கு முன்பாகவும், ஆய்வுகளை மேற்கொள்வதற்கு முன்பாகவும் தமிழீழ விடுதலைப் புலிகளால் வெளியிடப்பட்ட ஆவணங்களையும் ஒருமுறை படித்து, பார்த்து, கேட்டு உங்கள் மெய்யறிவை வளர்த்துக்கொண்டு ஆய்வுகளை மேற்கொண்டால் நன்றாகவும், நம்பத் தகுந்ததாகவும் இருக்கும்.

இதனைவிட, ஈழமுரசு இந்த விபரங்களை வெளியிட்டதால்தான் இந்தியாவிற்கு விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தமிழக இளைஞர், யுவதிகள் இருந்ததும் அவர்கள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டதும் தெரியவந்துவிட்டது என்றும் பெரும் குண்டைத் தூக்கிப் போட்டிருகின்றார்கள். விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தமிழக இளைஞர், யுவதிகள் இருந்தமையும், அவர்களில் சிலர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டமையும் தெரிந்துகொள்ள முடியாதளவிற்கு அடிமுட்டாள்களாகவா இந்தியப் புலனாய்வுத்துறை இருக்கின்றது! விடுதலைப் புலிகளின் இரகசியங்களையே அறிந்துகொள்ளத் துடிக்கும் இந்தியப் புலனாய்வுத்துறை, விடுதலைப் புலிகளால் வெளியிடப்படும் ஆவணங்களையும் வெளியீடுகளையும் பார்வையிடாமல் கண்ணை மூடிக்கொண்டா இருக்கின்றது..? எத்தனை சிறு



பிள்ளைத் தனமானவர்களின் சிந்தனையாக இது இருக்கின்றது.

ஈழத் தமிழ் மக்களுக்கு நேர்ந்த இன்னலைக் கேட்டும், தமிழர்களை இனப்படுகொலையில் இருந்து காப்பாற்றுவதற்காகவும் அப்துல் ரவூப், முத்துக்குமாரன் என எத்தனை எத்தனை தமிழக உறவுகள் தங்கள் உடல்களையே கொடும் தீக்கு இரையாக்கி, தங்கள் உயிர்களையே அர்ப்பணித்து அந்த இனப்படுகொலையை தடுக்க முயன்றிருக்கின்றார்கள் என்றால், தமிழீழ விடுதலையை நேசிக்கும் இலட்சக் கணக்கான தமிழக மக்களில் எத்தனை பேர் ஈழ விடுதலையை நேசித்து தங்கள் உயிர்களையே அந்த நாட்டின் விடுதலைக்காக அர்ப்பணிக்க துணிந்திருப்பார்கள். தமிழீழ விடுதலைக்காக தங்கள் உயிர்களை அர்ப்பணித்த அத்தனை தமிழக மாவீரர்களும் ஈழத் தமிழ் மக்களுக்கு கிடைத்த சேகுவேராக்கள். அவர்களின் அர்ப்பணிப்பை விடுதலைப் புலிகளே மறைக்க முயலவில்லை. நாங்கள் யார் மறைப்பதற்கு..?

- ஊடக மையம்

# ரஜனியின் நிலையில் மகிந்த! பறிபோனது நாமலின் கனவு

நாட்டுக்கு நல்லது செய்தால் சிறைக்குத் தான் செல்ல நேரிடும் என்று தெரிவித்துள்ள சிறீலங்காவின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, 'சிவாஜி' படத்தைப் பார்த்து



இதை அறிந்து கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். தெஹிவளையில் இடம்பெற்ற சமய நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். நாட்டுக்கு நல்லது செய்பவர்கள் இறுதியில் சிறைக்கு செல்ல வேண்டி நேருகின்றது. அண்மையில் நான் ஒரு தமிழ்த் திரைப்படம் பார்த்தேன். அதில் கதாநாயகன் சிறையில் இருப்பார். அங்கு ஒரு உரையாடல் இடம்பெறும். அதில், கதாநாயகனைப் பார்த்து, நீ கொலை செய்து விட்டாயா? அல்லது திருடி விட்டாயா? ஏன் சிறைக்குள் வந்தாய் என்று கேட்பார். அப்போது கதாநாயகன் நான் நாட்டுக்கு நல்லது செய்தேன் என்று சொல்வார். அதுதான் இப்போது நடக்கின்றது என்று மகிந்த குறிப்பிட்டார்.

இதேவேளை, தந்தைக்குப் பின் நாட்டின் நிரந்தர அதிபராகும் கனவில் இருந்த மகிந்தவின் மகனும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்சவின் கனவு கலைந்துபோனதை சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர் ஒருவரே அம்பலப்படுத்தியுள்ளார். மகிந்த ராஜபக்சவுடன் இணைந்திருந்து தற்போது மகிந்தவின் தோல்வியையடுத்து அவருக்கு எதிராகக் குரலெழுப்பி வரும் அமைச்சர் டிலான் பெரேராவே இதனைத் தெரிவித்துள்ளார்.

தனது தந்தை மேலும் 15 வருடங்களுக்கு ஜனாதிபதியாக அதிகாரத்தில் இருந்தால் அதன் பின்னர் நாட்டின் தலைவராக தானே வருவதற்கு நாமல் நினைத்திருந்ததாக அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார். இது சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் கனவல்ல என்றும் சுட்டிக்காட்டிய அவர், 2004ம் ஆண்டு சபாநாயகர் ஒருவரை கூட நியமிக்க முடியாத அரசாங்கமே தம்மிடம் இருந்ததாகவும், பின்னர் மகிந்த ராஜபக்ச ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒப்பந்தம் ஒன்றைப் போட்டு 13 நாடாளுமன்ற உறுப்பினர்களை பெற்றுக் கொண்டதாகவும் தெரிவித்தார். கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பாரிய நிதிமோசடிகள் தொடர்பில்



விசாரணை செய்து வரும் ஜனாதிபதி ஆணைக்குழு முன் கடந்த 17ம் திகதி வியாழக்கிழமை மகிந்த ராஜபக்ச முன்னிலையானதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போது, டிலான் பெரேராவின் இக்கருத்துக்கள் குறித்து ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியபோது, நாடாளுமன்ற உறுப்பினரும் தனது புதல்வருமான நாமல்ராஜபக்ச சம்பந்தப்பட்டிருக்கும் விடயங்கள் தொடர்பில் அவரிடமே

தொடர்ச்சி 22ம் பக்கம்

# கனவுலகில் முதுகு சொறிதல்

**கலாநிதி சேரமான்**

வடதமிழீழ முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களின் தலைமையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் உருவாகி வரும் புதிய அணி இராஜவரோதயம் சம்பந்தர் அவர்களை ஆப்பிழுத்த குரங்கின் நிலைக்குத் தள்ளி விட்டிருப்பதை அண்மைக் கால நிகழ்வுகள் உணர்த்தி நிற்கின்றன.

2009 மே 18இற்குப் பின்னரான சூழமையில் தானே ஈழத்தமிழர்களின் தனியொரு தலைவனாகத் திகழும் தகுதிக்குரியவர் என்று இறுமாந்திருந்த சம்பந்தரின் ஏதேச்சாதிகாரக் கனவு வடதமிழீழ முதலமைச்சரின் அரசியல் எழுச்சியால் மெல்ல மெல்லக் கலைக்கப்பட்டு வருகின்றது. என்னதான் வடதமிழீழ முதலமைச்சர் மீது காழ்ப்புணர்ச்சி கொண்டிருந்தாலும், அவரை எதிர்த்து அரசியல் செய்வது தமது தலையைத் தாமே சுவற்றில் மோதிக் கொள்வதற்கு ஒப்பானதாகவே அமையும் என்ற யதார்த்தத்தையும், இதுகாறும் சம்பந்தருக்குப் பரிவட்டம் கட்டியவர்களும் உணரத் தொடங்கியிருக்கின்றார்கள். சம்பந்தர் காட்டிய வழியில் சென்று தாம் ஆட்சிபீடமேற்றிய மைத்திரி-ரணில் அரசாங்கம் உருப்படியாக எதனையும் சாதிக்கப் போவதில்லை என்ற யதார்த்தத்தைத் தமிழீழ தாயக மக்களும் புரிந்து கொள்ளத் தொடங்கியிருப்பது இதற்கொரு காரணம் எனலாம்.

அரசியல் கைதிகளின் விடுதலை, ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களை விடுவித்தல், நயினாதீவிற்கு நாகதீப என்ற சிங்களப் பெயர் சூட்டியமை போன்ற விடயங்களில் ரணில்-மைத்திரி அரசாங்கம் கைக்கொள்ளும் அணுகுமுறை சம்பந்தரின் நல்லிணக்க அரசியலால் எந்தப் பயனும் கிட்டப் போவதில்லை என்ற யதார்த்தத்தையே தமிழீழ தாயக மக்களுக்கு உணர்த்தியிருக்கின்றது. மறுபுறத்தில் இனவழிப்புக்கான நீதி, பன்னாட்டு நீதி விசாரணை, அரசியல் கைதிகளின் விடுதலை, ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களை விடுவித்தல், தமிழீழ தாயகத்தை விட்டு சிங்களப் படைகளை வெளியேற்றுதல் போன்ற விடயங்களில் வடதமிழீழ முதலமைச்சர் எடுத்திருக்கும் உறுதியான நிலைப்பாடு அவரை ஈழத்தமிழினத்தின் நம்பிக்கை நட்சத்திரமாக மிளிர வைத்துள்ளது. இன்று வடதமிழீழத்திற்கு மட்டும் முதலமைச்சராகத் திகழும் விக்னேஸ்வரன் அவர்கள் எதிர்காலத்தில் தென்தமிழீழத்திற்குமான முதலமைச்சராகவும் பரிணமிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பே இப்பொழுது பலரிடையே காணப்படுகின்றது.

ஆக, இப்பொழுது கடைப்பிடிக்கும் உறுதியான நிலைப்பாட்டை வடதமிழீழ முதலமைச்சர் தொடர்ந்தும் கைக்கொள்வாராக இருந்தால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும், தமிழ் மக்களையும் நல்லிணக்கத்தின் பெயரில் அடிபணிவு நிலைக்கு இட்டுச் செல்வதற்கு சம்பந்தரும், அவரது பட்டத்து வாரிசான மதியாபரணம் ஏபிரகாம் சுமந்திரனும் எடுக்கும் முயற்சிகள் மண்கவ்வவும் என்றே நாம் கருதலாம். இதுதான் இன்றைய யதார்த்தம்.

ஆனால் இவ் யதார்த்தத்தை கனவுலகில் சஞ்சாரம் செய்து தமிழ்த் தேசிய அரசியலில் சவாரி செய்ய முற்படும் சிலர் உணர்வதாகத் தெரியவில்லை.


தான் வகுத்த அடிபணிவு அரசியல் பாதையில் பயணிப்பதற்குத் தமிழீழ விடுதலைப் புலிகளின் அனைத்துலகத் தொடர்பகமும், அனைத்துலக தமிழர் ஒருங்கிணைப்புக் குழுக்களும், ஏனைய புலம்பெயர் தமிழ்த் தேசிய அமைப்புக்களும் மறுத்த நிலையில், அவற்றைப் பிளவுபடுத்திச் சிதைத்துச் சின்னாபின்னமாக்கும் நோக்கத்துடன் கே.பி அவர்களால் உருவாக்கப்பட்டதே நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் என்ற அமைப்பாகும்.

இதன் தலைவராக விளங்கும் விசுவநாதன் உருத்திரகுமாரன் அவர்களுக்கு நெடுநாளாகவே ஓர் ஆசை இருந்தது. தேசத்தின் குரல் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்திற்குப் பின்னர் தானே தமிழீழ விடுதலைப் புலிகளின் மதியுரைஞராக வேண்டும் என்பதுதான் அந்த ஆசை. பாலா அண்ணையின் உடல்நலம் பாதிக்கப்பட்ட பின்புலத்தில் 2003ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்த பொழுது அந்தப் பதவி தனக்குக் கிட்டும் என்று உருத்திரகுமாரன் கனவு கண்டார். தென்சூடானிய மக்களுக்கு அமெரிக்காவின் ஆதரவுடன் இடைக்கால நிர்வாக அதிகாரம் கிட்டியது போன்று தமிழீழ மக்களுக்கும் அமெரிக்காவின் ஆதரவுடன் இடைக்கால நிர்வாகத்தைத் தன்னால் பெற்றுத் தர முடியும் என்று தமிழீழத் தேசியத் தலைவருக்கு வாக்குறுதியளித்து அதன் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளின் மதியுரைஞராகத் தான் உயர முடியும் என்று உருத்திரகுமாரன் கற்பனையில் மிதந்தார். ஆனால் பாலா அண்ணையின் உடல்நிலை தேறி மீண்டும் சில மாதங்களில் அரசியல் அரங்கில் அவர் களமிறங்கிய பொழுது உருத்திரகுமாரனின் கனவு கலைந்து போனது.

ஆனாலும் உருத்திரகுமாரன் விடுவதாயில்லை. பாலா அண்ணையின் மறைவுக்குப் பின்னர் முதலில் பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களுடன் ஒட்டியுறவாட முற்பட்டும், அதன் பின்னர் பா.நடேசன் அவர்களுடன் நட்புறவை ஏற்படுத்த முயற்சித்தும் தமிழீழ விடுதலைப் புலிகளின் மதியுரைஞராவதற்குக் கடும் பிரயத்தனம் எடுத்தார். ஆனால் அவை எவையும் கைகூடவில்லை. இவ்வாறு மாறி மாறித் தான் கண்ட கனவுகள் அனைத்தும் கலைக்கப்பட்டுத் துன்பக் கடலில் மூழ்கியிருந்த உருத்திரகுமாரனுக்கு, கே.பி மேற்கொண்ட நாடுகடந்த தமிழீழ அரசாங்கப் பிரகடனமும், அவரது கைது நாடகமும் வரப்பிரசாதமாக அமைந்தது.

அத்தோடு பாலா அண்ணையின் இடத்திற்கு வரவேண்டும் என்று தான் கண்ட கனவுகளைக்

தொடர்ச்சி 16ம் பக்கம்



தமிழீழத் தேசியத் தலைவரின் தொடர்பை இழந்த நிலையில், வழிகாட்ட மீகாமனின்றி நடுக்கடலில் தத்தளிக்கும் கப்பல் போன்று தவித்த ஈழத் தமிழர்களின் அபிமானத்திற்கு உரியவராக விக்னேஸ்வரன் அவர்கள் பரிணமித்து உள்ளார்.





### 2 இலட்சம் கண்ணி வெடிகள் அகற்றம்

இலங்கையில் போர் நடைபெற்ற பகுதிகளிலிருந்து 2 இலட்சம் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளதாக தன்னார்வத் தொண்டு நிறுவனம் தெரிவித்துள்ளது. இலங்கையில் போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் புதைக்கப்பட்டுள்ள கண்ணி வெடிகளை அகற்றும் பணியில் 'ஹலோ டிரஸ்ட்' என்ற பிரித்தானியத் தொண்டு நிறுவனம் ஈடுபட்டு வருகிறது. அந்த அமைப்பின் தலைவர் டேமியன் ஓபிரையன் இது குறித்துக் கூறியதாவது, இலங்கையில், போர் காரணமாக மக்கள் வெளியேறிய 90 சதவீத குடியிருப்புப் பகுதிகளில் இருந்து கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன. அந்தப் பகுதிகளிலிருந்து இதுவரை 2 இலட்சம் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன. இன்னும் வனப்பகுதிகள், வயல்வெளிகளில் கண்ணிவெடிகள் அகற்றப்படவில்லை. வரும் 2020ம் ஆண்டுக்குள் இலங்கையை கண்ணிவெடியில்லா நாடாக்குவதே எங்கள் இலக்கு என்றார் அவர்.

### வெளிநாட்டு தூதரகங்கள் சில மூடுகிறது சிறீலங்கா!

தனது ஆட்சியில் நாட்டுக்கு நாடு தூதரகங்களை அமைத்து தனக்கு வேண்டப்பட்டவர்களை பதவியில் அமர்த்தி அழகுபார்த்தார் மகிந்த. இப்போது அவற்றுக்கு வேட்டுவைத்து வரும் மைத்திரி அரசு, சில நாடுகளில் இயங்கி வரும் சிறீலங்காவிற்கான தூதரகங்கள் மற்றும் உயர்ஸ்தானிகராலயங்கள் மூடமுடிவு செய்துள்ளது. இதுகுறித்து சிறீலங்கா வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர நாடாளுமன்றில் தெரிவித்துள்ளதாவது, தேவையற்ற வகையில் அமைக்கப்பட்டுள்ள தூதரகங்களை குறைப்பதனாலும் மாற்று வழிகளை பயன்படுத்துவதனாலும் செலவுகளை குறைக்க முடியும் என நம்புகின்றோம் என்று தெரிவித்துள்ளார்.

### நோர்வே வெளிவிவகார அமைச்சர் இலங்கை பயணம்

நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் போர்கெ பிரன்டே ஜனவரி மாத முதல் வாரத்தில் இலங்கைக்கு பயணம் செய்யவுள்ளார். சிறீலங்கா – நோர்வே நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்திக் கொள்வது குறித்து இந்தப் பயணத்தின் போது கூடுதல் கவனம் செலுத்தப்பட உள்ளது. சிறீலங்கா வர்த்தக சம்மேளனத்திற்கும் நோர்வே தூதரகத்திற்கும் இடையில் எதிர்வரும் ஜனவரி மாதம் 7ம் திகதி சந்திப்பு ஒன்று நடத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த விசேட பேச்சுவார்த்தையிலும் நோர்வே வெளிவிவகார அமைச்சர் பங்கேற்க உள்ளார். இலங்கையில் நோர்வே முதலீட்டாளர்கள் முதலீடு செய்ய ஆர்வம் காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. 2014ம் ஆண்டில் சிறீலங்காவிற்கும் நோர்வேக்கும் இடையில் 30 மில்லியன் அமெரக்க டொலர் பெறுமதியான வர்த்தக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### வடக்கிலுள்ள விடுதிகளின் விபரம் திரட்ட நடவடிக்கை

வடக்கு மாகாணத்தில் தற்காலிக, நிரந்தர விடுதிகள் உரிய அனுமதி பெறப்படாத சூழலில் இயங்கி வருவது அவதானிக்கப்பட்டுள்ளதை அடுத்து உரிய அனுமதி பெறப்படாத சூழலில் உருவாக்கப்பட்ட விடுதிகளின் விபரங்களை வடமாகாண பிரதேச செயலகங்கள், உள்ளூராட்சி சபைகள் ஊடாக திரட்டுவதற்கு வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் நடவடிக்கை எடுத்துள்ளார். முதலமைச்சர் தலைமையில் இடம்பெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் வடக்கில் விடுதிகள் பொருத்தமற்ற இடங்களில் அமைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

பரிஸ்தமிழ் www.ParisTamil.Com .கொம்
பிரான்ஸ் செய்திகள்
பிரான்ஸ் நிர்வாக தகவல்கள் — தமிழில்
WWW.PARISTAMIL.COM

# வடக்கில் 5 ஆண்டுகளில் மதத் தலங்கள் அதிகரிப்பு

# புதிதாக 18 விகாரைகள்!

பாரிய இன அழிப்புப் போருக்குப் பின்னரான கடந்த 5 ஆண்டுகளில் வடக்கு மாகாணத்தில் ஏராளமான மதத் தலங்கள் கட்டியமைக்கப்பட்டுள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. குறிப்பாக புதிதாக 18 பௌத்த விகாரைகள் வட பகுதியில் அமைக்கப்பட்டுள்ளன. 2009ம் ஆண்டில் வடக்கு மாகாணத்தில் 29 விகாரைகள் அமைக்கப்பட்டிருந்த நிலையில், 2014ம் ஆண்டு



அந்த எண்ணிக்கை 47 ஆக அதிகரித்துக் காணப்படுவதாக வட மாகாண புள்ளிவிபரக் கையேட்டின் விபரங்கள் தெரிவிக்கின்றன.

இதோ வடமாகாணத்தில் அதிகரித்துள்ள மதத் தலங்களின் பட்டியல்...

| | மதத் தலங்கள் | 2009 | 2014 |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | இந்து ஆலங்கள் | 2373 | 2541 |
| | கிறிஸ்தவ தேவாலயம் | 221 | 260 |
| | மசூதிகள் | 11 | 18 |
| | விகாரைகள் | 4 | 4 |
| வவுனியா | இந்து ஆலங்கள் | 300 | 411 |
| | கிறிஸ்தவ தேவாலயம் | 41 | 41 |
| | மசூதிகள் | 18 | 20 |
| | விகாரைகள் | 22 | 23 |
| கிளிநொச்சி | இந்து ஆலங்கள் | 309 | 488 |
| | கிறிஸ்தவ தேவாலயம் | 81 | 129 |
| | மசூதிகள் | 0 | 9 |
| | விகாரைகள் | 0 | 1 |
| மன்னார் | இந்து ஆலங்கள் | 133 | 229 |
| | கிறிஸ்தவ தேவாலயம் | 142 | 224 |
| | மசூதிகள் | 56 | 80 |
| | விகாரைகள் | 3 | 8 |
| முல்லைத்தீவு | இந்து ஆலங்கள் | 163 | 399 |
| | கிறிஸ்தவ தேவாலயம் | 37 | 66 |
| | மசூதிகள் | 4 | 5 |
| | விகாரைகள் | 0 | 11 |



## இன அழிப்பு

# முல்லையில் வாழ்ந்ததாக உரிமை கோரும் 271 சிங்களக் குடும்பங்கள்

முல்லைத்தீவு மாவட்டத்தில் 1981ம் ஆண்டு காலப்பகுதியில் வசித்தனர் என்று கூறும் ஒரு தொகுதி சிங்களக் குடும்பங்கள் தம்மை மீள்குடியேற அனுமதிக்குமாறு மாவட்ட செயலகத்தில் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட மீள்குடியேற்றம் தொடர்பிலான கலந்துரையாடல் கடந்த திங்கட்கிழமை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. கலந்துரையாடல் வடக்கு மாகாண மீள்குடியேற்ற அமைச்சர் பசத்தியலிங்கம் தலைமையில் நடைபெற்றது. முல்லைத்தீவு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய மீள்குடியமர்வுகள் தொடர்பில் இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டது. அதன் போது மேற்குறிப்பிட்ட விடயமும் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் உள்ள கொக்கிளாய் கிழக்கு, கொக்கிளாய் மேற்கு ஆகிய கிராம சேவகர் பிரிவுகளிலேயே 1981ம் ஆண்டு காலப்பகுதியில் வசித்தனர் என்று குறித்த 271 குடும்பங்களும் கூறுகின்றன. நாட்டில் ஏற்பட்ட போர் காரணமாக தாம் இடம் பெயர்ந்து சென்றனர் என்றும், தற்போது மீள்குடியேற அனுமதிக்க வேண்டும் என்றும் முல்லைத்தீவு மாவட்ட செயலருக்கு அந்தக் குடும்பங்கள் விண்ணப்பித்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. முல்லைத்தீவு மாவட்டத்தின் மீள் குடியேற்றங்கள் குறித்து ஆராயப்படும் சந்தர்ப்பத்தில் இந்த விடயம் குறித்தும் கவனத்தில் எடுத்துக் கொள்வது என்று கலந்துரையாடலில் முடிவு செய்யப்பட்டது என்றும் கூறப்பட்டது.

ஏற்கனவே யாழ்குடா, வன்னி உட்பட பல பகுதிகளில் தாங்கள் முன்னர் வாழ்ந்ததாகக்கூறி சிங்களக் குடும்பங்கள் பல இராணுவ பாதுகாப்புடன் குடியேறியிருப்பது குறிப்பிடத்தக்கது.



# செய்திகளும் எழும் கேள்விகளும்

தெளிவாமகன்

**செய்தி:-** விரைவாக அமைதியை நோக்கிப் பயணிக்கும் நாடுகளின் வரிசையில் இலங்கையும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**எழும் கேள்வி:** இனப்படுகொலையான தமிழ் மக்களால் எழுந்த மயான அமைதியாக இருக்குமோ..?

★★★★

**செய்தி:-** படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நட்டஈடு வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று சிறீலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

**எழும் கேள்வி:** நீதியை எப்போது வழங்கும்..?

★★★★

**செய்தி:-** வெளிவிவகார கொள்கை விடயத்தில் இருதலைக்கொள்ளி எறும்பின் நிலையை மைத்திரி அரசாங்கம் கொண்டுள்ளதாக அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

**எழும் கேள்வி:** நீங்கள் சீனாவிற்கு மட்டும் ஆதரவு. அவர்கள் எல்லாருக்கும் ஆதரவென்றால் இப்படித்தானே இருக்கமுடியும்..?

★★★★

**செய்தி:-** சந்தேக நபர்களுக்கெதிரான விசாரணைகளின் போது காவல்துறை பாரபட்சமாக நடந்து கொள்வதாக பம்பலப்பிட்டி வர்த்தகர் முஹம்மது சியாமை கடத்திப் படுகொலை செய்த குற்றச்சாட்டில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள சிறீலங்காவின் முன்னாள் பிரதிக் காவல்துறை மா அதிபர் வாஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.



**எழும் கேள்வி:** நீங்கள் காட்டிய வழியில்தானே அவர்கள் செல்வார்கள்..?

★★★★

**செய்தி:-** ராஜபக்ச குழுவின் அடக்கு முறைகளை நாட்டில் நிறைவுக்கு கொண்டுவந்துள்ள போதிலும், நாடாளுமன்றத்தில் அதனை நிறைவுக்குக் கொண்டுவர முடியாமற் போய்விட்டதாக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

**எழும் கேள்வி:** ஓணானை மடியிலை கட்டிக்கொண்டிருந்தால் பிறகு என்ன செய்யுமாம்..?

★★★★

**செய்தி:-** கடவுளை மட்டுமே நம்புங்கள் என்று காணாமற் போனவர்களின் உறவினர்களுக்கு அறிவுரை கூறினார் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம.

**எழும் கேள்வி:** பிறகு யாரை ஏமாற்றுவதற்கு நீங்கள் இந்த விசாரணை நடத்துகின்றீர்கள்..?

★★★★

**செய்தி:-** குர்ஆனை தடைசெய்வதன் மூலமே இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை பாதுகாக்க முடியும் என சிங்கள பௌத்த மதவாத அமைப்பான பொதுபல சேனா தெரிவித்துள்ளது.

**எழும் கேள்வி:** ஏன்... மகாவம்சத்தை தடை செய்வதன் மூலம் ஏற்படுத்த முடியாதா..?

★★★★

**செய்தி:-** தமிழர் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்கள் இனி இடம்பெறாது எனவும் எதையும் சட்டதிட்டத்துக்கு உட்பட்டே செய்வோம் எனவும் சிறீலங்கா அமைச்சரவை ஊடகப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

**எழும் கேள்வி:** அப்ப சட்டத்திற்கு உட்பட்ட சிங்கள மீள் குடியேற்றமாக்கும்..?


★★★★

**செய்தி:-** வடக்கில் பாரியளவில் சொத்துக்கள அழிக்கப்பட்டமைக்கு தமிழீழ விடுதலைப் புலிகளே பொறுப்பு சொல்ல வேண்டுமென சிறீலங்கா அமைச்சர் சஜித் பிரேமதாச நாடாளுமன்றில் தெரிவித்தார்.

**எழும் கேள்வி:** இந்திய இராணுவம் ஒரு கையைக் கட்டிக்கொண்டு நின்றதென்றார்கள். சிறீலங்கா இராணுவம் என்ன இரண்டு கைகளையுமா கட்டிக்கொண்டு நின்றது..?

★★★★

**செய்தி:-** சிறீலங்கா ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனா வத்திக்கான் சென்று இரண்டாவது தடவையாக பொப் ஆண்டவர் பிரான்சிஸ் அவர்களை சந்தித்து ஆசி பெற்றுவிட்டு நாடு திரும்பியுள்ளார்.



**எழும் கேள்வி:** புத்த பகவானை இவர்கள் நம்பமாட்டார்களா..? மகிந்த இந்துக் கடவுளை (திருப்பதி) நம்பினார், மைத்திரி கிறிஸ்தவக் கடவுளை நம்புகின்றாரே..?

தாயகத்தில் இருந்து இளந்திரையன்

# காணாமல்போனவர்களின் உறவுகளின் சாட்சியங்களால்

# ஆப்பிழுத்த குரங்காகத் திணறும் ஆணைக்குழு

**காணமல் போனவர்கள் தொடர்பாக ஆணைக்குழு அமைத்து விசாரணை செய்யும் புதிய அரசாங்கம் அவர்களை தேடிக் கண்டறியுமோ அல்லது குற்றவாளிகளுக்கான தண்டனை வழங்குமோ இல்லையோ மக்கள் காணாமல் போனவர்களுக்கு என்ன நடந்தது என்று வெளிப்படையாக சொல்லும் நிலையினை உருவாக்கியுள்ளது. எனினும், இவ்வாறான இடைவெளி ஏற்பட்டுள்ளபோதும் ஆணைக்குழு முன்பாக துணிந்து சாட்சியமளித்த அனைவருக்குமான பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுமா என்பது தெரியவில்லை.**

காணமல் போனவர்களின் உறவினர்களின் கதறல்கள், ஏக்கங்கள், வேதனைகள், தவிப்புகள் போன்றவற்றினை அளவுக்கு அதிகமாக தாங்கிக் கொண்டு காணமல் போனவர்களை கண்டறியும் ஜனாதிபதியின் ஆணைக்குழுவின் விசாரணையை அதன் தலைவர் மக்ஸ்வேல் பரணகம முடித்துச் சென்றுள்ளார்.

இந்த விசாரணைகளின் பிரதிபலன்கள் காணமல் போனவர்களுடைய உறவுகளுக்கு கிடைக்குதோ இல்லையோ, இத்தனை காலமும் தமது உறவுகளை கடத்திச் சென்றவர்






களும், கைது செய்தவர்களும் யார் என்று தெரிந்தும் வெளியில் சொல்ல முடியாமல் மனதிற்குள் பூட்டி வைத்திருந்த இரகசியங்கள் எல்லாவற்றினையும் அவர்கள் போட்டுடைத்த மனத்திருப்தி ஏற்பட்டிருக்கும்.

மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற விசாரணையில் இவ்வாறான சுதந்திரம் அவர்களுக்கு கிடைத்திருக்கவில்லை. ஆணைக்குழுவின் சாட்சியங்கள் பதிவு செய்யப்படும் இடங்களுக்குள் இராணுவத்தினரும், ஈ.பி.டி.பி ஒட்டுக்குழுக்களும் கண்காணிப்பில் ஈடுபட்டு வந்தார்கள். இதனால் சாட்சியங்களை பதிவு செய்தவர்கள் வெளிப்படையான உண்மைகளை செல்லாமல் மறைத்திருந்தனர்.

ஆனால் இம்முறை நடைபெற்ற விசாரணையின் போது சாட்சியளித்தவர்கள் தமது உறவுகளை கடத்தி, கைது செய்தவர்கள் யார் என்பதை தெளிவாக பெயர் விபரங்களுடன் சாட்சியமாக பதிவு செய்துள்ளனர்.

பெரும்பாலனவர்களுடைய சாட்சியங்கள் ஊடகங்களுக்கு கூட தெரியக்கூடாது என்ற காரணத்தினால் இரகசியமான முறையிலும் சாட்சியங்களை அவர்கள் பதிவு செய்துள்ளனர்.

காணமல் போனவர்கள் தொடர்பாக ஆணைக்குழு அமைத்து விசாரணை செய்யும் புதிய அரசாங்கம் அவர்களை தேடிக் கண்டறியுமோ அல்லது குற்றவாளிகளுக்கான தண்டனை வழங்குமோ இல்லையோ மக்கள் காணாமல் போனவர்களுக்கு என்ன நடந்தது என்று வெளிப்படையாக சொல்லும் நிலையினை உருவாக்கியுள்ளது. எனினும், இவ்வாறான இடைவெளி ஏற்பட்டுள்ளபோதும் ஆணைக்குழு முன்பாக துணிந்து சாட்சியமளித்த அனைவருக்குமான பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுமா என்பது தெரியவில்லை.

யாழ்ப்பாணத்தில் விசாரணைகளை ஆரம்பித்திருந்த காணாமல் போனவர்களை கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்கழு இம்முறை 1,620 பேரை விசாரணைக்காக அழைத்திருந்தது. இவர்களில் இவ்வாறு அழைக்கப்பட்டவர்களிடம் யாழ்.மாவட்ட செயலகம், பருத்தித்துறை, சங்கானை மற்றும் தெல்லிப்பளை பிரதேச செயலகங்களில் வைத்து விசாரணைகளை மேற்கொண்டிருந்தது.

இவ்விசாரணைகளின் போது காணமல் போனவர்கள் தொடர்பாக 337 புதிய முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. இப் புதிய முறைப்பாடுகளில் 68 முறைப்பாடுகளும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட முறைப்பாடுகளில் பெரும்பானலவர்கள் இறுதி யுத்தத்தின் போது முள்ளிவாய்க்கால், இரணைப்பாலை, மாத்தளன் பகுதிகளில் வைத்து இராணுவத்திடம் சரணடைந்தவர்களே காணமல் போனார்கள் என்று சாட்சியமளித்துள்ளனர்.

மேலும் 2009 ஆம் ஆண்டிற்கு முன்னர் வெள்ளைவான், இராணுவ சுற்றிவளைப்பு, ஊரடங்கு என்பவற்றின் போதும், விசாரணைக்கு என்று படைமுகாங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டவர்களும் காணமல்போனார்கள் என்றும் சாட்சியமளித்திருந்தார்கள்.

சாட்சியமளித்த பலர் காணமல் போனவர்கள் உயிருடன் இருக்கின்றார்கள் என்பதற்கான ஆதாரங்கள் பலவற்றினை கொண்டு வந்திருந்தனர். குறிப்பாக பத்திரிகை, தொலைக் காட்சிகளில் வெளியிடப்பட்ட செய்திகளில் காணமல் போனவர்களைக் கண்டோம் என்று ஆதாரங்களுடன் சாட்சியளித்தாகள்.

இதுமட்டுமல்லாமல் சனல்-4 வெளியிட்ட ஆவணப் படத்திலும் காணாமல் போனவர்களை அவர்கள் கண்டதாகவும் தெரிவித்துள்ளார்கள். மேலும் சனல்-4 வில் குறிப்பிடப்பட்டிருந்தது போன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் இளைய மகன்

தொடர்ச்சி 22ம் பக்கம்

















### பெண்ணின் மார்புக்குள் போதைப்பொருள்!

60 வயதான பெண் ஒருவர் தன்னுடைய மார்பு கச்சைக்குள் மறைத்து வைத்திருந்த 200 கிராம் ஹெரோய்ன் போதைப் பொருளைக் கைப்பற்றியுள்ளதையடுத்து அவரை கைதுசெய்துள்ளதாக சிறீலங்காக் காவல்துறையினர் தெரிவித்தனர். கொக்கர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வைத்தே அவ் வயோதிபப் பெண்ணைக் கைது செய்துள்ளதாக தெரிவித்தனர்.

### யாழ்குடாவில் இப்படியும் பணப் பறிப்பு!

**மாட்டினர் இளைஞனும் மாணவனும்**

யுவதியொருவரின் படத்தை வரைகலை மாற்றம் செய்து இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யவுள்ளதாக மிரட்டி 30 ஆயிரம் ரூபாய் பணம் கோரிய சந்தேக நபரை எதிர்வரும் 16ம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட சாவகச்சேரி நீதவான், அதற்கு உடந்தையாகவிருந்த 17 வயது மாணவனை 1 இலட்சம் ரூபாய் பிணையில் செல்ல அனுமதியளித்தார். தென்மராட்சியைச் சேர்ந்த யுவதிக்கும் பருத்தித்துறையைச் சேர்ந்த இளைஞன் ஒருவருக்கும் செல்பேசி மூலம் பழக்கம் ஏற்பட்டுள்ளது. இருவரும் நேரில் சந்தித்த வேளையில், இளைஞன் யுவதியின் படம் ஒன்றை கேட்டுப் பெற்றுள்ளார். பெற்றுக்கொண்ட படத்தை வரைகலை மாற்ற முறையில் ஆபாசமாக இணையத்தில் வெளியிடப் போவதாகவும் அவ்வாறு செய்யாமல் இருக்க தனக்கு 30 ஆயிரம் ரூபாய் பணம் தரவேண்டும் என இளைஞன், யுவதியை மிரட்டியுள்ளார். இது தொடர்பில் யுவதியின் தாயார், கொடிகாமத்திலுள்ள சிறீலங்காக் காவல் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். பணம் தருவதாக இளைஞனுக்கு கூறுமாறு காவல்துறையினர் யுவதியிடம் கூறினர். இதனையடுத்து, பணத்தைப் பெற்றுக்கொள்வதற்காக பருத்தித்துறையிலுள்ள பேருந்து தரப்பிடத்துக்கு மாணவன் ஒருவன் வந்ததுடன் யுவதியை அழைத்துக் கொண்டு அருகிலுள்ள உணவகத்துக்குச் சென்றுள்ளார். காவல்துறையினரும் உணவருந்துபவர்கள் போல அங்கு சென்றுள்ளனர். அங்கு ஏற்கெனவே இருந்த இளைஞன், யுவதியிடம் பணத்தைப் பெற்றுக்கொள்ள முனைந்தபோது அங்கு நின்ற காவல்துறையினர், இளைஞன் மற்றும் மாணவன் ஆகியோரைக் கைது செய்தியிருந்தனர்.

### அமைதியை நோக்கிய நாடுகள் இலங்கை உள்ளடக்கம்

விரைவாக அமைதியை நோக்கிப் பயணிக்கும் நாடுகளின் வரிசையில் இலங்கையும் உள்ளடக்கப்பட்டுள்ளது. மனிதநேயக் காட்சி என்ற அமைப்பு இந்தப் பட்டியலை வெளியிட்டுள்ளது. இவ்வமைப்பினால் வெளியிடப்பட்டுள்ள 2015ம் ஆண்டுக்கான சர்வதேச அமைதி நாடுகள் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள நாடுகளின் வரிசையில் இலங்கையும் உள்ளடக்கப்பட்டுள்ளது. குறித்த பட்டியலின் பிரகாரம் இலங்கை, மொங்கோலியா, இஸ்ரேல், சாட் மற்றும் ஜோர்ஜியா ஆகிய நாடுகள் உள்நாட்டு யுத்த சூழ்நிலையிலிருந்து விடுபட்டு விரைவாக அமைதியான நிலைக்குத் திரும்பியிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் உலகின் அமைதியான நாடுகள் பட்டியலில் இலங்கைக்கு 114வது இடமே ஒதுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இலங்கையானது தொடர்ந்தும் மிக ஆபத்தை எதிர்கொண்டுள்ள அமைதி உருவாகும் நாடாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கிடையே தெற்காசியாவின் அமைதியான நாடுகள் வரிசையில் இலங்கைக்கு நான்காவது இடம் கிடைத்துள்ளது. பூட்டான், நேபாளம், பங்களாதேஷ் ஆகிய நாடுகள் முதல் மூன்று இடங்களையும் பெற்றுள்ளன.

# விரைந்து வரும் ஆபத்து!




– கந்தரதன்

இன்று தமிழர் தாயகத்தில் யுத்தம் நிறைவுக்கு வந்துள்ளபோதும், தமிழ் மக்களின் உயிர்கள் தொடர்ச்சியாக சத்தமில்லாமல் காவுகொள்ளப்பட்டு வருகின்றமையை எவரும் மறுக்கமுடியாது. தெரிந்தோ தெரியாமலோ தமிழ் மக்களின் உயிர்களும் உடமைகளும் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றன. இதற்கு எவரும் நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை. குறிப்பாக தமிழர் தாயகத்தில் இடம்பெற்றுவருகின்ற அகால மரணங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன. இதில் முக்கியமாக தொடருந்து விபத்து மரணங்களைக் குறிப்பிட முடியும்.

யாழ்.குடாவரை தொடருந்து செல்ல ஆரம்பித்த பின்னர் அங்கு தொடருந்தினால் ஏற்பட்டுள்ள அகால மரணங்கள் அதிகம். இதில் வயது குறைந்தவர்களே பலிக்கடாவாக்கப்பட்டுள்ளனர். அதிலும் குறிப்பாக பாதுகாப்பற்ற தொடருந்துக் கடவைகளில் இடம்பெறும் விபத்துக்களினாலேயே குறித்த உயிரிழப்புக்கள் இடம்பெற்றுள்ளன. இருப்பினும் பாதுகாப்பற்ற தொடருந்துக் கடவைகள் தமிழர் தாயகப் பகுதிகள் என்பதனால் அவை தொடர்ந்து பாதுகாப்பற்றே கிடக்கின்றன.

கிளிநொச்சி உதயநகர் பகுதியில் கடந்தவாரம் தொடருந்து மோதி வயோதிபர் ஒருவர் பட்டப்பகலில் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். கிளிநொச்சி ஏ – 9 பாதையிலிருந்து கிளிநொச்சி உதயநகர் மேற்கிற்குச் செல்லும் வழியில் பாதுகாப்பு கடவை பொருத்தப்படாத பகுதியிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இதன்போது சம்பவ இடத்திலேயே குறித்த வயோதிபர் பரிதாபகரமாக உயிரிழந்தார். இச் சம்பவத்தில் பலியான வயோதிபர் கிளிநொச்சி உதயநகர் கிழக்கைச்சேர்ந்த 76 வயதான ராமசாமி பழனியாண்டி எனவும் வடக்கின் தொடருந்து பாதுகாப்பான தொடருந்துக் கடவைகளை அமைக்குமாறு கோரி வடகிழக்கு ஜனநாயகத்திற்கும் நீதிக்குமான மக்கள் அமைப்பின் ஏற்பாட்டிலேயே கிளிநொச்சி தொடருந்து நிலையம் முன் மக்கள் ஒன்று திரண்டு குறித்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கிளிநொச்சிக்கு தொடருந்து போக்குவரத்தை ஆரம்பித்துவைத்த நாளன்றே கிளிநொச்சி தொண்டமான் நகர் பாதுகாப்பற்ற தொடருந்துக் கடவையால் பயணித்த வயோதிபர் தொடருந்து மோதிக் கொல்லப்பட்டதனைத் தொடர்ந்து தற்போது வரை பாதுகாப்பான தொடருந்துக் கடவைகளை உரிய தரப்பினர் ஏற்படுத்தாமல் ஏனோ தானோ என்று விட்டுள்ளமையால் பொதுமக்கள் மீது தொடருந்து மோதி அநியாயமாகக் கொல்லப்பட்டு வருகின்றார்கள் என போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் தெரிவித்தனர்.

கிளிநொச்சியிலுள்ள பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகளின் முன்பாக தொடருந்துகள் மணிக்கணக்கில் தரித்து நிற்பதாலும் பொதுமக்கள் பயணிக்கமுடியாமல் தரித்து நிற்கவேண்டிய சந்தர்ப்பங்களும் இடம்பெற்றுவருகின்றன.

**எத்தனையோ கடும் யுத்தங்களுக்கெல்லாம் முகம்கொடுத்த மக்கள் அவற்றில் இருந்து தப்பி நின்று, இன்று இந்த விரைந்து வரும் ஆபத்தில் சிக்கி சின்னாபின்னமாகி மரணித்துப்போகின்றனர்.**

கடந்த வாரம் கிளிநொச்சி நகர் கனகபுரம் பிரதான வீதியைக் குறுக்கறுத்துச் சென்ற தொடருந்து திடீரென முன்னறிவிப்பேதுமின்றி வீதியைக் குறுக்கறுத்து நின்றுள்ளமையால் போக்குவரத்துத் தடைப்பட்டதுடன் போக்கு வரத்து நெரிசலும் ஏற்பட்டது. இதனால் கனகபுரம் வீதியின் போக்குவரத்துத் தடைப்பட்டிருந்தது. இதில் அன்றாட கடமைகளின் நிமித்தம் சென்றவர்கள் விசனத்துக்குள்ளாகினர். இதேவேளை குறித்த கடவையிலும் பல



பாதைகளில் இடம்பெற்ற 19 ஆவது பலி எனவும் தெரிய வருகிறது. குறித்த சடலத்தை காவல்துறையினர் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டுசெல்ல தொடர்பு கொண்ட போது கிளிநொச்சி வைத்தியசாலை ஊழியர்களின் அசமந்த போக்கால், இறந்தவரின் உடல் பல மணிநேரம் புகையிரத நிலையத்தில் வைக்கப்பட்டிருந்தது எனவும் தெரியவருகிறது. கிளிநொச்சி நகரத்திலும் வடக்கின் தொடருந்து மார்க்கத்திலும் பாதுகாப்பற்ற தொடருந்து கடவையில் தொடருந்துமோதி பலர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதைத் தவிர கிளிநொச்சியில் பாதுகாப்பற்ற பல தொடருந்து கடவைகள் இன்னமும் பாதுகாப்பு கதவுகள் பொருத்தப்படாத நிலையில் காணப்படுகின்றன எனவும் அப்பகுதி மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர். இந்நிலையில், கிளிநொச்சியில் பாதுகாப்பான புகையிரதக் கடவைகளை விரைவாக அமைத்து மனித உயிர்களைக் காப்பாற்ற உதவுமாறு கோரி கடந்த (18.12.2015) வெள்ளிக்கிழமை கிளிநொச்சி தொடருந்து நிலையம் முன்பாக மக்கள் போராட்டம் ஒன்றை நடத்தினர். கிளிநொச்சியில் பாதுகாப்பான தொடருந்து கடவைகளை அமைக்கப்படாதமையால் அக்கடவையினூடாகப் போக்குவரத்துச் செய்த பொதுமக்கள் 17 பேர் கிளிநொச்சியில் இதுவரை தொடருந்து மோதிக்கொல்லப்பட்டுள்ளார்கள்.

இதனைக் கண்டித்தே கிளிநொச்சியில் உடனடியாக கடவைகளை உடனடியாக உரிய தொடருந்துத் திணைக்களத்தினர் கவனம் செலுத்தி காலதாமதமின்றி பாதுகாப்பான புகையிரதக்கடவைகளை ஏற்படுத்துமாறு கோரி வடகிழக்கு ஜனநாயகத்திற்கும் நீதிக்குமான மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் கோரிக்கை மனுவும் கையளிக்கப்பட்டது. இப்போராட்டத்தில் மக்கள் நலன் சார் பொது அமைப்புக்களையும் பொது மக்களையும் கலந்துகொண்டு மனித உயிர்களைக் காக்க ஆதரவு வழங்குமாறு வடகிழக்கு ஜனநாயகத்திற்கும் நீதிக்குமான மக்கள் அமைப்பு கோரி அழைப்பு விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பாதுகாப்பற்ற தொடருந்துக் கடவை



விபத்துக்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் குறித்த பகுதிகளில் பல கால்நடைகள் தொடருந்துகளில் மோதி பலியாகியுள்ள சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

இதேவேளை வட பகுதித் தொடருந்துப் பயணம் தொடர்பாக பொதுமக்களிடம் கேட்டபோது, இரவு நேரங்களில் குறித்த தொடருந்துப் பயணம் தமக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும், கொள்ளைச் சம்பவங்கள் அதிகம் ஏற்படுவதாகவும் தெரிவித்தனர். பாதுகாப்பற்ற கடவைகளில் ஏற்படுகின்ற மரணம் என்பது, அதிகாரிகளின் அசமந்தப்போக்கின் காரணமாகவே இடம்பெறுவதாகவும் இதனை நினைத்தால் தடுக்கமுடியும் எனவும் பாதிக்கப்பட்ட பொதுமக்களின் சார்பில் தெரிவிக்கப்படுகின்றது.

இவைகூட சிறிலங்கா அரசின் திட்டமிட்ட இனப்படுகொலையாகவே பார்க்கப்படுகின்றது. எத்தனையோ கடும் யுத்தங்களுக்கெல்லாம் முகம்கொடுத்த மக்கள் அவற்றில் இருந்து தப்பி நின்று, இன்று இந்த விரைந்து வரும் ஆபத்தில் சிக்கி சின்னாபின்னமாகி மரணித்துப்போகின்றனர்.

இனிமேலாவது இவர்கள் இதைக் கவனத்தில் எடுப்பார்களா? அப்பாவிகளின் உயிர்களைக்காப்பார்களா? விடை உரியவர்களின் மனங்களில்தான்.

சிந்தியுங்கள்! சிந்தித்து செயற்படுங்கள்!!

(சூறையாடல்கள் தொடரும்)

# காணாமல்போனோருக்கான நீதியைப் பெற புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் உதவுவார்களா..?

– தாயகத்தில் இருந்து காந்தரூபன் –

காலத்திற்குக் காலம் தமிழ் மக்களை ஏமாற்றிப் பழக்கப்பட்ட சிங்கள தேசம் இப்போதும் தமிழர்களை ஏமாற்றும் படலத்தை தொடர்ந்துகொண்டிருக்கின்றது. யுத்த காலத்தில் கடத்தப்பட்டு காணாமற் போன எமது பிள்ளைகளைத் தாருங்கள் என்று கதறுகின்ற உறவினர்களை அடக்கியாளும் தந்திரத்தை சிறீலங்கா அரசு பின்பற்றி வருகின்றது.

இந்த உறவினர்கள் மேற்கொண்டு சர்வதேச ரீதியான நடவடிக்கையில் இறங்காமல் தடுப்பதற்காக சிறீலங்கா ஜனாதிபதிகளால் அமைக்கப்பட்ட விசாரணைக் குழுக்கள் இன்றுவரை தமிழ் மக்களை ஏமாற்றிக்கொண்டிருக்கின்றன.






தமிழ் மக்களைக் காப்பாற்றவேண்டிய, தமிழ் மக்களின் உரிமைகளை மீட்கவேண்டிய பொறுப்பில் இருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடு தமிழ் மக்களை கவலையடையச் செய்துள்ளது. காணாமற்போனோரின் உறவினர்கள் இனியும் சிறீலங்கா அரசின் பொய் வேடத்தை நம்பத் தயாராக இல்லை என்பது இந்த முறை அமர்வுகளுடன் வெளிப்பட்டுவிட்டது.

தமிழர் தேசத்தில் காணாமற்போனோரின் உறவுகளைத் கதறி அழவைத்து நகைக்கிறது சிங்கள தேசம். புன்னகை பூத்த உதடுகளுடன் இருந்த தமிழர்களை இரு கைகளாலும் இரந்து வாழும் செயற்கை நிலைக்குத் தள்ளியது சிங்கள தேசமே என்பதில் எந்தவொரு தமிழரிடமும் மாற்றுக் கருத்து இல்லை. தமிழ் மக்களின் விவசாய நிலங்களையும் வாழிடங்களையும் ஆக்கிரமித்துள்ள சிங்களப் படைகள் இன்று அந்த மக்களைக் கையேந்தி வாழ வைத்திருக்கின்றது.

அதேபோன்று, கணவர்கள், பிள்ளைகளின் அனுசரணையுடன் வாழ்ந்தவர்களையும் கையேந்த வைத்திருக்கின்றது. கணவர்களை சிங்களப் படைகளும் ஒட்டுக் குழுக்களும் கடத்திச் சென்றமையால் மனைவியர் படும் வேதனைகள் சொல்லில் அடங்காது. பிள்ளைகளைக் கடத்திச் சென்றமையால் பெற்றோர், சகோதரர்கள், உறவினர்கள் படும் வேதனையும் சொல்லில் அடங்காது.

சிறீலங்கா அரசாலும் படைகளாலும் வழங்கப்பட்ட வேதனைகளும் ஏமாற்றங்களும் இழப்புகளும் சேர்ந்தே இன்று எமது விடுதலைப் போராட்டம் உலகின்கண் உயர்ந்து நிற்கின்றது.

உண்மையான சுதந்திரம் கோரிய தமிழர்களின் போராட்டம் சிங்கள தேசத்தால் பயங்கரவாதம் என்ற உருமறைப்புச் செய்யப்பட்டது. ஆனாலும் அந்த கரிய மூலாம் கரைந்து போக தமிழ் மக்களின் உண்மை முகம் இன்று வெளித்தெரிய ஆரம்பித்திருக்கின்றது. இந்த ஒளிபொருந்திய முகங்களையா நாங்கள் ஒளி இழக்கச் செய்தோம் என்று சில நாடுகள் தமக்குள் புளுங்கிக்கொண்டிருக்கின்றன.

ஆம், சுதந்திர தமிழீழம் அமைப்பதற்காக ஈழத்தில் நடத்தப்பட்ட போராட்டம் காரணமாக தமிழ் மக்கள் இன்று உலகத்தின் பார்வையை ஈர்க்கக் காரணமாகிவிட்டனர். தமிழீழ தேசியத் தலைவரின் தலைமையில் புலிகளால் நடத்தப்பட்ட இந்தப் போராட்டம் தமிழ் மக்களின் ஒருங்கிணைந்த போராட்டமாக பரிணாமம் பெற்றதாலேயே இன்று இந்தப் போராட்டம் சர்வதேசமயப்படுத்தப் பட்டிருக்கின்றது.

ஆனால், புலிகள் சர்வதேசப் பயங்கரவாதிகள் என்று கடுந்தொனியில் பிரச்சாரம் செய்த சிங்கள தேசம் அந்தப் பயங்கரவாதிகளை அழித்தல் என்ற பெயரில் அப்பாவித் தமிழ் மக்களை கொன்று குவித்தது. இதற்கு அப்பால் சந்தேக நபர்கள் என்ற ரீதியில் ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகள் கடத்தப்பட்டனர்.

இளைஞர்களுக்கு மேலாக, போராட்டத்தில் ஈடுபட்ட புலிகள் இயக்க உறுப்பினர்களும் இறுதி யுத்தத்தின்போது விசாரணை என்ற பெயரில் படையினரால் பிடித்துச் செல்லப்பட்டனர்.

இந்த இளைஞர், யுவதிகள் மற்றும் புலி உறுப்பினர்கள் தொடர்பாக இன்றுவரை எந்தவித தகவல்களும் கிடைக்காத நிலையில் அவர்களின் உறவினர்கள் கண்ணீரும் கம்பலையுமாக அலைகின்றனர். இந்த நிலையில் காணாமற்போனோரைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கு என்றுகூறி சிங்கள தேசம் விசாரணைக் குழுக்களை அமைத்து தமிழ் மக்களையும் சர்வதேசத்தையும் ஏமாற்ற முயல்கின்றது.

யுத்த காலத்தில் படையினராலும் துணை ஆயுதக் குழுக்கள் என்ற பெயரில் படையினருடன் சேர்ந்து இயங்கிய ஈ.பி.டி.பி மற்றும் கருணா குழு போன்றவற்றாலும் கடத்தப்பட்ட ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகள் இன்று எங்கே இருக்கிறார்கள் என்ற முகவரியே அற்றுப் போய்விட்டனர்.

தங்கள் உறவுகளை இழந்துள்ள உறவுகள் யுத்த காலத்தில் அமைதியாக இருந்தபோதிலும் யுத்தம் முடிவடைந்த பின்னர் போராட்டம், உண்ணாவிரதம் என்று கொதித்தெழுந்தனர். இவர்கள் வீதிக்கு வருவதை விரும்பாத அரசாங்கம் ஆணைக்குழுக்களை அமைக்கத் தொடங்கியது.

காணாமற்போனோரைக் கண்டறிவதற்காக பல ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்ட போதிலும், தற்போது மக்ஸ்வெல் பரணகம தலைமையில் அமைக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு காணாமற்போனோரின் உறவினர்களை ஏமாற்றும் வேலையை கனகச்சிதமாகவே செய்து வருகின்றது.

காணாமற்போனோரின் உறவினர்கள் வீதிக்கு வந்து போராட்டங்களை நடத்தியதால் சர்வதேச ரீதியாக சிறீலங்கா அரசுக்கு கடும் நெருக்கடிகள் ஏற்பட்டன. இந்த நெருக்கடிகளில் இருந்து தான் தப்புவதற்காகவே ஜனாதிபதி ஆணைக்குழு என்ற பெயரில் விசாரணைக் குழுக்கள் அமைக்கப்பட்டிக்கின்றன.

இந்த விசாரணைக்கு குழுக்கள் விசாரணை நடத்தும் விதம் தொடர்பாக காணாமற்போனோரின் உறவினர்கள் கடும் அதிருப்தி அடைந்துள்ளனர். தமிழீழ விடுதலைப் புலிகளை எப்படிக் குற்றவாளிகள் ஆக்கி படையினரை எப்படிக் காப்பாற்றலாம் என்ற ரீதியிலேயே இந்தக் குழுவின் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பாக ஓரிரு முறைப்பாடுகள் வந்தால் அந்த முறைப்பாடுகளுடனேயே ஆணைக்குழு நேரத்தைச் செலவிடுகின்றது. புலிகளுக்கு எதிராக முறைப்பாட்டை முன்வைப்பவர்களுக்கு அதிக நேரத்தை வழங்குகின்ற ஆணைக்குழு, அவர்கள் மூலமாக புலிகளுக்கு எதிரான கருத்துக்களை பதிவு செய்து ஆவணமாக்குகின்றன.

இந்த ஆவணம் விரைவில் வெளியிடப்படும் என்றும் அறியவருகின்றது. இதன் பிரதி ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவைக்கும் அனுப்பப்படும் என்று அறியவருகின்றது.

புலிகளுக்கு எதிரான சில கருத்துக்களுக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவம் படையினருக்கு எதிராக நூற்றுக்கணக்கானோர் கூறும் கருத்துக்களுக்கு கொடுக்கப்படுவதில்லை. இதில் இருந்தே இந்த ஆணைக்குழு தங்களை ஏமாற்றுவதற்காகவே அமைக்கப்பட்டது என்று மக்கள் உணரத் தொடங்கிவிட்டனர்.

தொடர்ச்சி 16ம் பக்கம்

## மன்னார் எலும்புகளை வெளிநாட்டில் பரிசோதிக்க அனுமதி!

மன்னார் – திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழியில் இருந்து கண்டெடுக்கப்பட்ட மனித எலும்புகளை வெளிநாடொன்றில் பரிசோதனை செய்வதற்கு மன்னார் மாவட்ட நீதிமன்றம் அனுமதி வழங்கியிருக்கின்றது. திருக்கேதீஸ்வரம் ஆலயத்திற்கு அருகில் இரண்டு வருடங்களுக்கு முன்னர் குடிநீர்க் குழாய் பதிப்பதற்காக வீதியோரத்தில் நிலத்தைத் தோண்டியபோது அங்கு மனித எலும்புகள் முதலில் கண்டெடுக்கப்பட்டிருந்தன. அதனைத் தொடர்ந்து, அந்தப் பகுதியை அகழ்ந்தபோது, அங்கு 88 பேருக்குரிய எலும்புத் தொகுதிகள் கண்டெடுக்கப்பட்டிருந்தன. இது தொடர்பில் விசாரணை நடத்திய சிறீலங்கா தரப்பு, முற்காலத்தில் இறந்தவர்களைப் புதைப்பதற்காகப் பயன்படுத்திய புதைகுழியே அதுவென தெரிவித்திருந்தது. ஆனால், போர் இடம்பெற்ற காலப்பகுதியில் காணாமல் போயிருந்த தமிழர்களே கொலை செய்யப்பட்டு அந்த இடத்தில் புதைக்கப்பட்டிருக்கலாம் என்று தமிழ் மக்கள் நீதிமன்றத்ததில் வாதிட்டுவந்தனர். இதனையடுத்தே அங்கு கண்டெடுக்கப்பட்ட மனித எலும்புகள் எந்தக்காலத்தைச் சேர்ந்தவை என்பதைக் கண்டறிவதற்கான பரிசோதனையை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

## சிறீலங்கா ஏற்றுமதி வீழ்ச்சி

சிறீலங்காவின் ஏற்றுமதி தொடர்ச்சியாக வீழ்ச்சி கண்டு வருவதாகக் கூறப்படுகின்றது. இறுதியாக ஏற்றுமதி 5.9 வீதத்தால் வீழ்ச்சியடைந்து 850 மில்லியன் அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது. இறப்பர் தயாரிப்புக்கள் மற்றும் தேயிலை ஏற்றுமதியில் ஏற்பட்ட சரிவே இந்த வீழ்ச்சிக்குக் காரணம் என சிறீலங்கா மத்திய வங்கி கூறியுள்ளது. இறக்குமதிக்கான செலவீனமும் 5.1 வீதத்தால் வீழ்ச்சி கண்டு 1,583 மில்லியன் அமெரிக்க டொலராக அமைந்துள்ளது. அத்துடன் வர்த்தகப் பற்றாக்குறையும் கடந்த செப்டெம்பர் மாதம் 4.1 வீதத்தால் குறைவடைந்துள்ளது. எவ்வாறாயினும் ஒட்டுமொத்த அடிப்படையில் முதல் ஒன்பது மாதங்களில் வர்த்தகப் பற்றாக்குறை 3.8 வீதத்தால் அதிகரித்து 6,145 மில்லியன் அமெரிக்க டொலராக காணப்படுகின்றது. குறிப்பாக கைத்தொழில்துறையில் அதிகளவில் 4.7 வீத வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. எனினும் ஏற்றுமதியில் 48 வீத பங்களிப்பை வழங்கியுள்ள ஆடைகளின் ஏற்றுமதி மூலமான வருமானம் செப்டெம்பர் மாதம் 1.8 வீதத்தால் உயர்வடைந்துள்ளதாக மத்திய வங்கி கூறியுள்ளது.

இதேவேளை, மத்திய வங்கியின் திறைசேரி முறிகள் விற்பனை செய்யப்பட்டமையே நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு காரணமெனவும், ஆகையால் இதற்கான முழுப்பொறுப்பையும் மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனே ஏற்கவேண்டுமெனவும் சிறீலங்காவின் முன்னாள் அமைச்சர் பந்துல குணவர்தன குற்றம்சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ட்ரான்ஸ்பரன்ஸி இன்டர்நெசனல் அறிக்கைப்படி, திறைசேரி முறி விற்பனை உள்ளக மோசடியென குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், இந்த விடயத்தில் என்ன இடம்பெற்றதென்பதை பொதுமக்களும் அறிந்துக்கொள்ளவேண்டுமெனவும், நியாயமான விசாரணைகளை முன்னெடுப்பதற்காக மத்திய வங்கியின் ஆளுநர் தற்காலிகமாகவேனும் பதவிவிலக வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, தற்போது முன்னெடுத்துச்செல்லப்படும் பொருளாதாரம் தொடருமானால் டொலரின் பெறுமதிக்கு எதிரான சிறீலங்கா ரூபாயின் பெறுமதி, 150 ரூபாவரை உயரும் அபாயமுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.



# பிரான்ஸ் நாடாளுமன்றத்தில் தமிழர் பிரச்சினை குறித்த கலந்துரையாடல்

## ஈழமுரசு மீதான தாக்குதல் தீவிர கவனம் பெற்றது

கடந்த 9ம் திகதி, பிரான்சின் நாடாளுமன்றத்தின் சந்திப்பு அறையில் பல புலம்பெயர் தமிழர் அமைப்புகள் மற்றும் ஊடகங்களுடன், பிரான்ஸ் கொம்யூனிட்ஸ்ட் கட்சியின் பொதுச் செயலரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திருமதி Marie-George Buffet ஒரு சந்திப்பை மேற்கொண்டார். இந்தச் சந்திப்பில் பலவிதமான கருத்துக்கள் மற்றும், கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. அதற்கான தீர்வை சிபாரிசு செய்வதாகவும் Marie-George Buffet உறுதியளித்துள்ளார்

இந்தக் கருத்தரங்கில், முக்கியமான பங்கினை, பிரான்ஸ் தமிழீழ மக்கள் பேரவையினரே மேற்கொண்டிருந்தனர். முதற்கட்டக் கருத்துக்களையும், கோரிக்கைகளையும், முன்வைத்தனர்.

- போர்க்குற்ற விசாரணைகளில், அமெரிக்காவின் தீர்ப்பையே, ஐரோப்பிய அரசுகளும் பின்பற்றி உள்ளன. ஜெனீவாவில் சிறீலங்கா அளித்த உறுதி மொழிகளை, அப்படியே, தலைகீழாக மாற்றியுள்ளது. தமிழ்க் கிரமாங்கள் நகரங்கள், சிங்களப் பெயர் மாற்றங்களிற்கு உள்ளாகின்றன.
- தமிழர்களின் நிலங்கள் இன்னமும் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழேயே தடை செய்யப்பட்ட பகுதிகளாக, சிறீலங்கா அரசாங்கத்தால் வைக்கப்பட்டுள்ளன. இதனால் தங்கள் சுயதொழில் வாய்பை இழந்த, தமிழ் மக்கள், அரசாங்கத்தில் தங்கியிருப்பவர்களாக, அவர்களின் கீழேயே இருப்பவர்களாக, மாற்றப்பட்டுள்ளனர்.
- தமிழர்கள் நிலங்கள் முற்றாகவே அவர்களால் இழக்கப்டுகின்றன. மெது மெதுவாகத் தமிழர்களின் நிலங்கள் சிங்கள மயமாக்கப்படுகின்றன. தமிழர் பகுதிகள் எங்கும், காளான்கள் போல் புத்த தாதுகோபங்கள் கட்டப்ப்ட்டு வருகின்றன.



- தமிழ் மக்களின் சனத்தொகையில், மூன்றிலொரு பங்கு மக்கள் புலம்பெயர் தேசங்களில் வாழ்கின்றனர். அவர்கள் பங்குபற்றாமல், தமிழ் மக்களிற்குச் சிறீலங்கா அரசாங்கம் எந்தவொரு தீர்வையும் வழங்க முடியாது. ஆனால் இந்தப் புலம்பெயர் அமைப்புக்களையோ, அல்லது புலம்பெயர் தமிழ் மக்களையோ, அங்கீகரித்தோ அல்லது இணைத்தோ, ஒரு அரசியல் வேலைத் திட்டத்தை மேற்கொள்வதற்குச் சிறீலங்கா அரசாங்கம் தயாரக இல்லை. உண்மையான தீர்வை வழங்கவேண்டுமானால், புலம்பெயர் தமிழ் மக்கள் மீதான தடைகளை எடுப்பதுடன், அவர்களையும் இணைத்து, அவர்கள் அங்கு சுதந்திரமாகச் சென்றுவரும் சூழ்நிலையயையும், அரசியல் வேலைத்திட்டங்களை மேற்கொள்ளும் சூழ்நிலையையும் ஏற்படுத்தல் வேண்டும்.
- தொடர்ந்தும் கடத்தல்களும் காணமற்போதல்களும் சிறீலங்காவில் நடந்து வருகின்றன.
- தமிழர்களின் அடிப்படை உரிமைகளை வாதிடுவதற்கான கதவுகள் தொடர்ந்தும் மூடப்பட்டே உள்ளன.
- சிறீலங்காவின் நிலைப்பாடுகளை மாற்றும் நடவடிக்கையில் பிரான்ஸ் தகுந்த அழுத்தத்தை வழங்கவேண்டும்.

பேன்ற விடயங்கள் தமிழீழ மக்கள் பேரவையின் சார்பில் முன்வைக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து பிரான்ஸ் தமிழ் பெண்கள் அமைப்பின் சார்பிலும், பல கோரிக்கைகள் மற்றும், விளக்கங்கள் வழங்கப்பட்டன.

- இராஜபக்ச அரசாங்கம் மேற்கொண்ட இனவழிப்பினையே மைத்ரி அரசாங்கமும் தொடர்ந்து வருகின்றது. வேறு வடிவங்களில் மிகக்கொடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அரசாங்கம் மாற்றப்பட்டாலும், அதன் நடைமுறை மாற்றப்படாமல், தமிழர்களிற்கெதிரான அரசாங்கமாகவே நடந்து வருகின்றது.
- தமிழரின் கிராமங்கள் சிங்களப் பெயர் சூட்டப்பட்டு, அவை சிங்கள நகரங்களாகத் தமிழர்களிடம் இருந்து பறிக்கப்படுகின்றன. கோவில்கள் இடிக்கப்பட்டு அவை புத்த தாதுகோபுரங்களாகக் கட்டப்பட்டு வருகின்றன.
- அங்கு நடந்த குற்றங்கள் எதுவும் தண்டிக்கப்படாமல் உள்ளன.
- பாலச்சந்திரன் எனும் ஒரு பாலகன், தேசியத் தலைவரின் பிள்ளை என்ற காரணத்திற்காகவே, இராணுவத்தால் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டுள்ளார். ஆனால் இந்தக் குற்றங்கள் யாராலும் விசாரணை செய்யப்படாமலேயே உள்ளன.
- எல்லை கடந்து பிரான்சிலும், சிறீலங்காவின் வன்முறைகள் தொடர்ந்துள்ளன. தொடர்ச்சியாக இயங்கிவந்த பத்திரிகையொன்று, அதன் ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்பட்டு நிறுத்தப்பட்டுள்ளது. ஒரு ஊடகவியலாளரின் மீது தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதன் குற்றவாளி நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டும், சுதந்திரமாகத் திரிந்து, மேலும் பல அச்சுறுத்தல்களையும் தாக்குதல்களையும் செய்து வருகின்றார்.
- தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவின் பொறுப்பாளர் பரமலிங்கம் அவர்கள் மீதும் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. திரு பரிதி அவர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இதற்கான நீதிகள் எதுவும் இதுவரை வழங்கப்படவில்லை. பிரான்சின் சட்டம் நீதியை இன்னும் வழங்காமல் உள்ளது.
- பெண்கள் மீதான அடக்குமுறைகளும், வன்கொடுமைகள் தொடர்ந்து வருகின்றது.

போன்ற குற்றச்சாட்டுக்களும் கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து ஓர் ஊடவியலாளர் கோரிக்கைகளை முன்வைத்தார்.

- ஈழமுரசுப் பத்திரிகை மற்றும், ஊடக இல்லத்தின் மீது நடாத்தப்பட்ட உயிரச்சுறுத்தலையும், ஒரு ஊடகவியலாளர் மீது தாக்குதல் முயற்சி, மற்றும் ஒருவர் மீது உயிரச்சுறுத்தல் ஆகியவை நடாத்தப்பட்டது. இந்தப் பயங்கரவாதக் குற்றவாளி நீதிமன்றத்தினால் ஒரு வருடத் தண்டனையளிக்கப்பட்டும், அவர் சுதந்திரமகவே திரிகின்றார்.
- சுதந்திரமாக பல அச்சுறுத்தல்களையும் அடாவடிகளையும் இந்தக் குற்றவாளி மேற்கொண்டு வருகின்றார். ஊடகத்துறையினர் மீதும் தொடர்ச்சியான தீண்டல்களை நடாத்திவருகின்றார். தமிழரின் விடுதலைக்காகப் போராடுபவர்கள் மீதான தொடர்ச்சியான வன்முறைகள், தாக்குதல்கள் இவராலும் இவர் தொடர்பானவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
- இந்த நிலையில் ஊடகங்களின் மீது விடுக்கப்பட்ட, கருத்துச் சுதந்திரத்தின் மீது விடுக்கப்பட்ட, இந்த வன்முறையைத் தடுப்பதற்கும், கருத்துச் சுதந்திரத்தைக் காப்பதற்கும் பிரான்சின் நீதியானது தீவிரப்படுத்தப்பட்டு கடுமையான தண்டனைகள் வழங்கவேண்டும்.

எனவும் கோரிக்கை விடுத்தார்.

பலரின் கருத்துக்களையும் செவிமடுத்த Marie-George Buffet தனது இறுதிக் கருத்துக்களையும் தன் முயற்சிகளையும் விளக்கினார்.

- சிறீலங்காவானது தனது முகத்தினை மாற்றி, சர்வதேசத்தால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய ஒரு உருவகத்தினை ஏற்படுத்தி உள்ளது. ஆனலும் மிகவும் அமைதியாகச் சத்தமில்லாமல் தமிழர்கள் மீதான இனவழிப்பு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.
- சிறீலங்காவின் மீது, போர்க்குற்ற விசாரணைகள், மற்றும் இனவழிப்புக் குற்றங்களை நாம் என்றுமே எம் மனதில் வைத்துப் போராடி வரவேண்டும். ஆனால் சர்வதேசத்தையோ, அல்லது ஐரேப்பா மற்றும் பிரான்சிடமோ இன்றும் நாம் ஆறு வருடங்கள் கடந்த நிலையில் இதனையே கேட்டுக் கொண்டிருப்பதை விட, இன்றைய சூழ்நிலையில் சிறீலங்கா அரசை எந்தெந்த வகையில் நாம் வற்புறுத்த முடியும், என்பதை நாம் முன்வைக்க வேண்டும். இன்றைய மக்களிற்கான தேவைகளை அவர்களிடம் இருந்து வலியுறுத்த வேண்டும்.
- நான் இனப்படுகொலை முயற்சியையோ அல்லது போர்க்குற்றங்களையோ மறந்து விடவேண்டும் என்று சொல்லவில்லை. ஆனாலும் இன்று சர்வதேசங்களை நாம் எவ்வாறு கையாளவேண்டும் என்பதையும், அவர்களிடம் இருந்து எதனைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்பதனையும் நாங்கள் புரிந்து கெள்ளவேண்டும்.
- பிரான்ஸ் தற்போது சிறீலங்காவுடனான எந்தவிதமான இருதரப்பு உடன்படிக்கைகள் எதனையும் தயார்ப்படுத்தவில்லை. அப்படியான முயற்சி எடுக்கப்படும்போது, சிறீலங்காவின் குற்றங்களின் விசாரணையின் மீதான அழுத்தத்தையும், சிறீலங்கா மீதான தடைகளையும் நான் நாடாளுமன்றத்தில் முன்வைப்பேன்.



- பரிசில் நிகழ்ந்த படுகொலை மற்றும் தாக்குதல்களிற்கான நீதி கிடைப்பதற்கான முயற்சிகளை நாம் மேற்கொள்வோம். இதற்காக நீதியமைச்சருடனும், உள்துறை அமைச்சருடனும் நான் பேசி அழுத்தங்களை ஏற்படுத்துவேன்.
- முக்கியமாக ஈழமுரசுப் பத்திரிகை மீதான வன்முறைத் தாக்குதல்கள் மேற்கொண்டவர்கள் மீது, மிகவும் கடுமையான தண்டனையை வழங்குவதற்கான கோரிக்கையை நான் உள்துறை அமைச்சரிடம் நேரடியாகப் பேசுவேன். பிரான்சில் அவசரகாலத் தடைச்சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும், நிலையில் நான் வாராவாரம் உள்துறை அமைச்சரைச் சந்திக்கும் போது நிச்சயமாகப் பத்திரிகை மீதான வன்முறை பற்றிப் பேசுவேன்.
- வெளிவிகார அமைச்சர், உள்துறை அமைச்சர் மற்றும் நீதியமைச்சர் ஆகியோருடனான சந்திப்பில், பிரான்சில், புலம்பெயர் சமூகம் மீது நடாத்தப்பட்டு வரும் வன்முறைகளிற்கு, உடனடியான தீர்வுகள் வழங்குவதற்கான முன்னெடுப்பை நான் வலியுறுத்துவேன்.

எனத் தனது இறுதிப் பதிலை அளித்ததுடன் சந்திப்பானது முடிவிற்கு வந்தது.

**சோழ.கரிகாலன்**

# வர்த்தகம் மூலதனம்

ஜெகன்

## சர்வதேச நாணய நிதியத்தில் நுழைந்தது சீன நாணயம்!

சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ.எம்.எப்.) நாணய கையிருப்பில் சீன நாணயமான யுவானுக்கும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ஐஎம்எப் பிற நாடுகளுக்குக் கடன் மற்றும் நிதியுதவி அளிப்பதற்காக பண இருப்பை பல தரப்பட்ட நாணய வடிவில் வைத்துக் கொள்ளும். தற்போது இப்பட்டியலில் அமெரிக்க டொலர், பிரித்தானிய ஸ்டேர்லிங்



பவுண்ஸ், ஐரோப்பிய ஈரோ, ஜப்பானின் யென் உள்ளிட்ட நாணயங்கள் இடம்பெற்றுள்ளன. இதில் சீனாவின் யுவானும் நீண்ட முயற்சிக்குப் பிறகு இணைய உள்ளது. இதனால் சீன நாணயத்தின் மதிப்பு டொலர், ஈரோ போன்ற நாணயங்களுக்கு நிகராக உயரும். மேலும், சர்வதேச சந்தையில் டொலரின் ஆதிக்கம் அதிகளவில் குறையும் வாய்ப்புகளும் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## அசோக் லேலண்ட் ஐவரி கோஸ்ட் நாட்டுடன் பெரும் ஒப்பந்தம்

இந்தியாவின் ஹிந்துஜா குழுமத்தைச் சேர்ந்த அசோக் லேலண்ட் நிறுவனம் வாகனங்களைத் தயாரித்து வழங்குவதற்காக, மேற்கு ஆபிரிக்க நாடான ஐவரி கோஸ்ட் அரசிடமிருந்து 1,300 கோடி ரூபா (இந்திய) மதிப்பிலான வர்த்தக ஆணையைப் பெற்றுள்ளது.

இதுகுறித்து, அசோக் லேலண்ட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் வினோத் தாசரி கூறியதாவது: அடுத்து வரும் 12 மாதங்களுக்குள் பாரவண்டி, பேருந்து உள்ளிட்ட 3,600 வாகனங்களைத் தயாரித்து வழங்குவதற்காக 1,300 கோடி ரூபா மதிப்பிலான வர்த்தக ஆணை பெறப்பட்டுள்ளது. அசோக் லேலண்ட் நிறுவனம் பெற்றுள்ள மிகப் பெரிய மதிப்பிலான பணி ஆணை இது. இதற்காக, ஐவரி கோஸ்ட் அரசுடன் செய்து கொண்ட இந்த ஒப்பந்தம், மேற்கு ஆபிரிக்கப் பகுதியில் வர்த்தக உறவை மேலும் வலுப்படுத்துவதற்கு வழிவகுத்துள்ளது என்று தெரிவித்தார்.

## இளைஞர்களின் புதிய கலாசசாரம் சரத்தின் கலாச்சாரம் அழிகிறது

தமிழர்கள் மட்டுமல்ல இந்தியாவில் மலையாளிகள், தெலுங்கர்கள், கன்னடர்கள் உட்பட உலகின் பல நாடுகளிலும் பல கோடி மக்கள் சரம் (லுங்கி) அணிகின்றார்கள். ஆனால் தற்போது இந்த சரத்தின் மீது இருந்த இளைஞர்களின் மோகம் குறைந்து அரைக்காற்சட்டை, முக்கால் காற்சட்டை (ஜம்பர்) என இலகுவாக அணியக்கூடிய உடைகளை நோக்கி மாறத் தொடங்கியுள்ளதால் இந்தியாவில் சரம் உற்பத்தி வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. தயாரிக்கப்பட்ட ஏராளமான சரங்கள் தேங்கிக் கிடப்படதால், சர உற்பத்தியாளர்கள் பலர் வேலை வாய்ப்பை இழக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.



தமிழ்நாட்டில் இருந்து இலங்கை, பாகிஸ்தான், இந்தோனேசியா, மலேசியா சவூதி அரேபியா, ஓமன், மியான்மர், சோமாலியா நாடுகளுக்கும் சரங்கள் ஏற்றுமதி செய்யபட்டு வருகின்றன. தமிழ்நாட்டின் மொத்த உற்பத்தியில் 30 சதம் சரங்கள் சேலம், ஈரோடு, நாமக்கல் மாவட்டங்களில் தயாராகிறது. இதில் பள்ளிபாளையம், குமாரபாளையம் நகரங்கள் பெரும்பங்கு வகிக்கின்றன. கடந்த இரண்டு வருடங்களாகவே சரங்களின் உற்பத்தி மெல்ல சரிந்து வருகிறது. கடந்த ஆண்டு தமிழ்நாட்டில் கடுமையான மின் வெட்டு இருந்தது. இதனால் சரங்கள் உள்ளிட்ட ஆடை உற்பத்தி பாதியாக குறைந்தது. உற்பத்தி குறைவாக இருந்த போதிலும் விற்பனையும் மந்தமாகவே இருந்து வந்தது. சரங்கள் உற்பத்தியில் ஈடுபட்டு வந்த ஏராளமான தறிப்பட்டறை உரிமையாளர்கள் படிப்படியாக வேறு ரகங்களுக்கு மாறி வருகின்றனர். சரங்கள் உற்பத்தி சரிவுக்கு பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. கடந்த ஐந்து ஆண்டுகளாக இளைஞர்களிடையே முக்காற் காற்சட்டை மோகம் வேகமாக பரவி வருகிறது. சரங்களை விட முக்காற் காற்சட்டை இடுப்பை விட்டு நழுவுவதில்லை. நிற்க, நடக்க, ஓட, அமர சரங்களை விட முக்காற் காற்சட்டை அணிவது அவர்களுக்கு இலகுவாகவும், வசதியாகவும் இருக்கிறது என்று கூறப்படுகின்றது.

# போரும் ஊடகமும்

புதிய தொடர்

மகா.தமிழ்ப் பிரபாகரன்
ஊடகவியலாளர்/ஆவணப்பட இயக்குநர்

"மக்களை மையமாக வைத்துப் பார்த்தால் இலங்கை போர் பிரதேசம் மிகவும் கொடூரமானது. உலகெங்கும் பல போர் பிரதேசங்களில் நான் பணியாற்றியுள்ளேன். இராணுவச் சண்டையில் படைச் சிப்பாய்கள் கொல்லப்படும் நிகழ்வு வழக்கமானது. அப்படி இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர் புலிகளும் கொல்லப்பட்டனர். ஆனால் இலங்கை இராணுவம் புலிகளை அழித்தொழிக்க வேண்டும் என்று அப்பட்டமாக ஆயிரக்கணக்கான தமிழர்கள் திட்டமிட்ட தாக்குதலில் கொன்றொழிக்கப்பட்டனர். கொடூரமாக ஒவ்வொரு தினமும் குழந்தைகள், பெண்கள், ஆண்கள் என கொல்லப்பட் டனர். மருத்துவமனைகள் தாக்கப்பட்டன. தொடர்ச் சியாக குண்டுமழையும் செல் தாக்குதல்களும் நடந்தன. ஆனால் இலங்கை இராணுவம் அப்படி எதுவும் நடக்கவில்லை, 'நடக்கவில்லை' என பொய் சொன்னது. மக்கள் மேல் எந்த அக்கறையையும் இலங்கை இராணுவம் காட்டவில்லை. பல இளைஞர்கள் பாதுகாப்பு வலயத்திலிருந்து புலிகள் என பிடித்துச் செல்லப்பட்டனர். அப்படி சித்ரவதை முகாம்களுக்கு கொண்டு செல்லப்பட்டவர்கள் பற்றிய எந்தக் கணக்கும் கிடையாது. மிக பயங்கரமான நிலை அது" என்று எடுத்துக்கூறும் பத்திரிகையாளர் "எந்த முரண்பாடுகளுக்கும் அரசியல் தீர்வே இறுதியானது" என்கிறார்.

அவர் 2012 சிரியாவின் உள்நாட்டு போரின் போது வான்வழித்தாக்குதலில் கொல்லப்பட்ட மேரி கொல்வின். பல போர்க்களங்களை கண்ட கொல்வினை போர் பத்திரிகையாளர்கள் உலகம் அவ்வளவு எளிதில் மறந்துவிட முடியாது.

வன்னியின் மீது ஒட்டுமொத்தமாக பொருளதார தடை விதிக்கப்பட்ட காலக்கட்டம் அது. அதாவது ஏப்ரல் 2001.

அமெரிக்காவைச் சேர்ந்த பத்திரிகையாளர் மேரி கொல்வின், புலிகள் நிர்வகிக்கும் பகுதிக்குள் இரகசியமாக நுழைகிறார். வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் எவரும் நுழையக் கூடாது புலித்தலைவர்களின் கருத்



துகள் வெளிவரக்கூடாது என்ற தடையையும் இலங்கை அரசாங்கம் விதித்திருந்தது.

"உணவுத்தட்டுப்பாடு, மின்சாரம் - தொலைத் தொடர்பு இணைப்பு இல்லை, மருந்து குறைபாடு, எரிபொருள் கிடையாது, தண்ணீர் பிரச்சினை இதனிடையே வன்னிக் கிராமங்களுக்குள் சென்று வந்தேன். எனது பணியை முடித்து விட்டு உள்ளூர் தமிழர்களின் உதவியுடன் மன்னாரை அடைந்து அங்கிருந்து வவுனியாவை அடைவதாக திட்டம்" என தனது கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் இருந்து அவர் எல்லையைக் கடக்கையில் இராணுவத்தின் தோட்டா அவரின் கண்களை துளைத்தன. 'பத்திரிகையாளர்! அமெரிக்கன்' என்ற பின்பும் இலங்கை இராணுவம் கடுமையான பிடியை கொல்வின் மேல் கையாண்டது.

அந்த உயிருக்கு போராடும் தருணத்திலும் கொல்வினை ஒரு பெண் கரும்புலியாக எண்ணி "எங்கு பயிற்சி எடுத்தாய்? உன்னோடு எத்தனை பேர்? உன் வாகனம் எங்கே?" எனக் கேட்டுள்ளார் ஒரு இராணுவ அதிகாரி. இலங்கை அரசாங்கம் மேரி கொல்வின் வன்னியில் நுழைந்ததற்கு இரகசிய திட்டம் இருப்பதாகவே தெரிவித்தது. ஆனால் கொல்வின் தனது எழுத்துகளில் 'எனக்கு பத்திரிகையாளர் என்ற பணியை தவிர வேறு எந்த ரகசிய திட்டமும் இல்லை' என தெரிவித்துள்ளார். ஆனால் இந்தத் தாக்குதலுக்கு எந்தவித மன்னிப்பையும் இலங்கை அரசு கேட்கவில்லை, இதில் தான் தனது ஒரு கண்ணை இழந்தார் கொல்வின். அவரின் வலது கண்ணில் உள்ள கரும்பட்டை அடையாளம் இப்படி ஏற்பட்டதே.

தனது ஒற்றைப் பார்வையை இழந்த பிறகும் தொடர்ந்து அவர் வெவ்வேறு போர் அபாய சூழல்களில் பணியாற்றிக் கொண்டே இருந்தார்.



அப்படி பிப்ரவரி 2012 யில் சிரியாவில் பணியாற்றிக் கொண்டிருந்த பொழுதே வான் வழித் தாக்குதலில் கொல்லப்பட்டார். கொல்வின் மற்ற போர் பத்திரிகையாளர்கள் போலன்றி 'போர், மக்கள் வாழ்வை சீர்குலைக்கும் நாசத்தனம்' என்ற மனிதாபிமான பார்வையோடும் வல்லரசு நாடுகளின் பார்வையிலிருந்து வேறுபட்டுமே தனது ஊடக பணியை ஒரு பெரும் வாழ்வாகவே தொடர்ந்தார்.

'தமிழீழச் சமூகம் என்ற மேற்பரப்பை நாம் சற்று சுரண்டிப்பார்த்தால் அதன் கீழ் பிரதேசவாதம், மதம், சாதி வட்டார வழக்கு, உரசல்கள், ஊர்களுக்கு இடையிலான அடிபிடிகள் எனப்பலவற்றைக் காணலாம்.

ஆனால் சிங்களப் பேரினவாதம் இவற்றையெல்லாம் கணக்கிலெடுக்காது தமிழ் மக்களை ஒட்டுமொத்தமாக வலுவிழக்கச் செய்து தமிழர் தாயகம் அனைத்தும் சிங்கள பௌத்தத்தின் வரலாற்று உரிமைக்கு உட்பட்ட இடங்கள் என்ற கருத்தை நிலைநாட்ட அயராது உழைத்து வருகிறது' என 2004 ஆண்டு எழுதிய 'காலத்தின் தேவை அரசியல் வேலை' என்ற தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார் தராக்கி சிவராம்.

சர்வதேச அளவில் தமிழர் பிரச்னைகளையும் இலங்கை அரசியல் சூழலையும் எழுதக்கூடிய மிகச் சிறந்த பத்திரிகையாளராக தராக்கி இருந்தார். அப்படி ஒருவரை கொழும்பில் கடத்தப்பட்டு இலங்கை நாடாளமன்ற உயர் பாதுகாப்பு வலயத்திலேயே கொன்று வீசியது சிங்கள அரச பயங்கரவாதம். அவரின் எழுத்துக்களுக்காகவே அவர் கொல்லப்பட்டார், அத்தனை அச்சுறுத்தல்களுக்கு இடையேயும் சாதாரணமாகவே தனது செய்திகளுக்காக வலம் வந்ததை கொலை செய்ய உபயோகப்படுத்திக் கொண்டது வெள்ளை வேன் பயங்கரவாதம்.

இலங்கை சண்டே லீடர் ஆசிரியரான லசந்தா தனது வாழ்வின் இறுதி கட்டுரையில் மார்ட்டின் நீமொல்லரின் வரிகள் குறிப்பிடப்பட்டிருந்த்து.

முதலில் அவர்கள் சோசலிஸ்டுகளை தேடி வந்தார்கள் ! அவர்களுக்காக நான் எதுவும் பேசவில்லை !! ஏனெனில் நான் சோசலிஸ்ட் அல்ல !!!

பின்னர் அவர்கள் தொழிற்சங்கவாதிகளை தேடி வந்தார்கள் ! அவர்களுக்காக நான் எதுவும் பேசவில்லை !! ஏனெனில் நான் தொழிற்சங்கவாதி அல்ல!!!

பின்னர் அவர்கள் யூதர்களை தேடி வந்தார்கள்! நான் அவர்களுக்காக எதுவும் பேசவில்லை!! ஏனெனில் நான் யூதனும் அல்ல. இறுதியாக அவர்கள் என்னை தேடி வந்தார்கள் ! அப்பொழுது எனக்காக பேச எவருமே இல்லை. இலங்கையின் அன்றைய உயிர்பாதுகாப்பற்ற நிலையை குறிப்பிட்ட வரிகளோடு அவரின் ஊடக பயணம் கொலையால் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. இப்படி நாளும் அச்சுறுத்தல்களோடு ஊடக பயணத்தை தொடர்ந்த தொடர்ந்து கொண்டிருக்கும் ஊடகவியலாளர்களின் அனுபவங்களையும் செய்தி சேகரிப்புகளையும் சற்று திரும்பி பார்ப்போம்...

# விமான நிலையம் போன்று

## தொடருந்து நிலையங்களிலும் சோதனை

தலிஸ் (Thalys) தொடருந்துப் பயங்கரவாதத் தாக்குதல், மற்றும் பரிஸ், சன்துனிப் பயங்கரவாதத் தாக்குதல்களை அடுத்து, புரூக்செல்ஸ், ஆம்ஸ்டர்டாம், கேல்ன், ஆகிய நகரங்களிற்குச் செல்லும், தலிஸ TGV தொடருந்திற்குச் செல்பவர்கள் மிகக் கடுமையான சோதனைகளிற்கு உள்ளாக்கப்பட உள்ளார்கள்.




கண்காணிப்புக் கருவிகள், மற்றும் கதிரியக்கக் காணொளிக்கருவி XRAY) பொருத்தப்பட்ட Portiques de sécurité எனப்படும் பாதுகாப்புக் கதவினூடாகவே, பயணிகள் செல்ல அனுமதிக்கப்படுவார்கள். விமானநிலையம் போல், அவர்களின் பயணப் பொதிகளும் கதிரியக்க காணொளி மூலம் சோதனை செய்யப்படும். இந்த நடவடிக்கை வியாழக்கிழமை முதல், கார் து நோர்தில் ஆரம்பமாகின்றது என SNCF தெரிவித்துள்ளது. பரிசிலும் லில்லிலுமாக, நான்கு பாதுகாப்புக் கதவுகள் முதலில் பொருத்தப்படுகின்றன. இவற்றுடன் இராணுவத்தினரும், அங்கு கடமையில் ஈடுபடுவார்கள். சோதனை நடவடிக்கையில் இவர்கள் இணைந்து இயங்குவார்கள்.

இந்த நடவடிக்கை மெது மெதுவாக அனைத்துப் பெருநகரத் தொடருந்து நிலையங்களிலும் செயற்படுத்தப்படும் என SNCF தெரிவித்துள்ளது. ஆனாலும் இந்தக் கண்காணிப்புக் கருவிகள், உலோகத்திலான பொருட்களை மட்டுமே கண்டறியும். விமான நிலையங்களைப் போல் வெடிகுண்டுகளையும் வெடிபொருட்களையும் கண்டறியும் சக்தியற்றது. இத்தோடு பல்வேறு கலவையான, கனிமங்களால் செய்யப்படும் ஆயுதங்களையும், இந்தக் கருவியால் கண்டுபிடிக்க முடியாது எனவும், இந்தப் பாதுகாப்பு வாயில்களின் நிர்மாண நிறுவனங்கள் கருத்துத் தெரிவித்துள்ளன.

எப்படியிருப்பினும், இறுதி நேரத்தில், தொடருந்தில் ஏறுவதற்காக ஓடி வரும் பயணிகள், முன்புபோல் நேரடியாகத் தொடருந்திற்குச் செல்ல முடியாது. பாதுகாப்புச் சோதனைகள் முடிந்தே உள்ளே செல்ல முடியும். அதனால் விமான நிலையம் செல்வது போல், போதுமான அளவு அவகாசத்துடன் குறிப்பிட்ட நேரத்தின் முன்னரே, தொடருந்து நிலையம் செல்வது அவசியம்.

# பரிசின் அழகிய கிராமத்திற்கு வரலாற்றுப் பெயர்மாற்றம்




தமிழ் மக்களிடம் நன்கு பிரபல்யமானதும் ஆசிய மக்களின் அதிக பயன்பாட்டில் உள்ளதும் 2ம் மற்றும் 11 ஆம் மெட்ரோ வழித்தடத்தில் இருக்கும், Belleville (தமிழில் அழகிய கிராமம் என்றும் சொல்லலாம்) மெட்ரோ நிலையமானது பெயர்மாற்றம் அடைய உள்ளது. இந்தப் பெயர் மாற்றக் கோரிக்கையை சோசலிசக் கட்சியைச் சேர்ந்த பரிஸ் 20 இன் நகரபிதா Frédérique Calandra முன்வைத்துள்ளார். இதற்கு ஆதரவாக கொம்யூனிஸ்ட் இடதுசாரி முன்னணிக் குழுமமும் நகரபிதாவிற்குத் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர். இந்தப் பகுதியில் மாகாண சபைத் தேர்தலின், இரண்டாம் கட்டத் தேர்தலில் சோசலிசக் கட்சியே அதிக வாக்குகளைப் பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

பெல்வில்நிலையம் Belleville Commune de Paris 1871 எனப்பெயர் மாற்றம் அடைய உள்ளது. இந்தப் பெயர் பெரும் சரித்திரப் பின்னணியைக் கொண்டது. தோல்வியடைந்து, ஜேர்மனியிடம் சரணடைந்து, அவர்களுடன் சரணாகதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுவிட்டு, வேர்செய் கோட்டைக்குள் முடங்கிய அரசாங்கத்தை எதிர்த்து, 1817 ஆம் ஆண்டு வசந்தகாலத்தில், புரட்சியிலும், போராட்டத்திலும், இறங்கிப், பரிஸ் நகரத்தைக் கைப்பற்றிய மக்களிற்கான கௌரவமாகவே இந்தப் பெயர் மாற்றம் நடைபெற உள்ளது.

பரிசினை, வேர்செய்யில் இருந்து பிரித்து வைத்திருந்த, பரிஸ் நகரக் குழுகாயம் (Commune de Paris), மூன்று மாதங்களே சக்திவாய்ந்ததாக அதிகாரத்தில் இருந்தாலும், அதற்குள் பெரும் மாறுதல்களைக் கொண்டு வந்தன. இவையே பின்னர், சட்டங்களாகவும் கொண்டுவரப்பட்டன. அதில் முக்கியமாக, அரசையும் தேவாலயத்தைப் பிரித்தெடுத்தமை, பாடசாலைகள் இலசமாக்கப்பட்டமை போன்றவை குறிப்பிடத்தக்கது.

AdobVe TViers, இந்தக் குழுகாயம் மீது, தாக்குதல் நடாத்தி, பெரும் அழிவை ஏற்படுத்தினார். 'இரத்த வாரங்கள்' என வர்ணிக்கப்படும், 1871 மே 21 முதல் 28 இற்குள், பரிஸ் குழுகாயத்தின் கடைசி அரண், பெல்வில்லில் முறியடிக்கப்பட்டது. இதில் வேர்செய்யின் கொடூரத் தப்பாக்கிக் குண்டுகளிற்கு, ஏழாயிரம் பரிஸ் மக்கள் பெல்வில்லில் பலியாகியிருந்தனர்.

இப்படி வீழ்ந்துபட்டவர்களின் நினைவாகவே, இந்தப் பெயர் மாற்றம் கொண்டுவரப்படுகின்றது. இந்தப் பெயர் மாற்றத்தினைப் பரிசின் மாநகர முதல்வர், உறுதி செய்துள்ளார்.

# படுகொலைக் களமுனையின் ஒரு நேரடிச் சாட்சியம் இவர்!

பத்தக்லோனினுள் முதன் முதலில் உள்நுழைந்தகாவற்துறை அதிகாரி தனது கொடூர அனுபவத்தை வெளியிட்டுள்ளார். தன் அடையாளத்தைத் தெரிவிக்காத இந்தக் காவற்துறை அதிகாரி, தாக்குதல் நடந்து ஒரு மாதம் கழிந்துள்ள நிலையில் இந்தச் செவ்வியை வழங்கி உள்ளார். காவற்துறை ஆணையாளர் (commis-saire- commissioner) தர அதிகாரியான இவர், தற்கொலைக் குண்டுதாரிகளுடன் நேரடியாக, நேருக்கு நேர் மோதி உள்ளார்.

"இது அச்சத்துடனான, விபரிக்க முடியாத ஒரு தருணம்" என அந்தக் கணத்தை நினைவு கூர்ந்துள்ளார். முதற் தற்கொலைக் குண்டுதாரியைச் சுட்டுக் கொன்ற இவரையும், இவரது சக அதிகாரியையும், மற்றைய பயங்கரவாதிகள் மோசமாகத் தாக்கத் தொடங்கி உள்ளனர்.

எக்காரணம் கொண்டும் பின்வாங்க நான் தயாராக இல்லை. அந்த இரவே நான் கொல்லப்பட்டுவிடப் போவதாகவே உணர்ந்தேன் என்று கூறும் இந்த அதிகாரியிடம், அந்தச் சமயம், ஒரு சேவைத் துப்பாக்கியும் குண்டு துளைக்காத ஆடையும் மட்டுமே இருந்துள்ளது. இவர்கள் ஒரு மறைவிடத்தைத் தேரந்தெடுத்துத் தொடர் தாக்குதலை நடாத்தி உள்ளனர்.

நான் என் துணைவியின் தொலைபேசிக்கு ஒரு செய்தியை (Message) பதிவு செய்திருந்தேன். இதிலிருந்து நான் தப்பவோ பின்வாங்கவோ போவதில்லை எனவும், எனது இறுதிக் கணத்தையும் தெரிவித்தேன். என்னை இனிமேல், அவள் பார்க்கப்போவதில்லை என்பதனையும், தெரிவித்தேன். இந்தச் செய்தி ஒரு பத்து விநாடிகள் மட்டுமே நீடித்தது. அந்தச் சமயத்தில் காவற்துறையின் தேடுதல் மற்றும் அதிரடி நடவடிக்கைப் பிரிவினரான BRI களத்தில் இறங்கினார்கள். தாக்குதல் நடந்து கொண்டிருந்தபோது உள்ளே பெருந்தொகை மக்கள் நிலத்தில் வீழந்து கிடந்தனர். அத்தனை பேரும் இறந்துவிட்டதாக எண்ணி ஒரு கணம் பெரும் அச்சமடைந்தேன். ஆனால் அதன் பின்னர் பெருமளவான மக்கள் உயிருடன் மீட்கப்பட்டனர்.

தாக்குதல் நடந்து ஒரு மாதத்திற்குள், இந்தக் காவற்துறை ஆணையாளர், உளவியல் ஆற்றுப்படுத்தல் வைத்தியரிடம் சிகிச்சை கூடப் பெறாமல், மிக விரைவாகவே, சேவையை மீளத் தொடங்கி உள்ளார். இவரது மனோத்திடம், அனைத்தையும் தாண்டித் தன்னைச் சேவையில் ஈடுபட வைத்துள்ளது.

ஆனால் இந்தக் கொடூர அனுபவம் பற்றி, தனது சகாக்களுடனும், அணியினருடனும், நிறைவே கதைத்துள்ளார். உறவினர்க்கும் அணியினர்க்கும் நீண்ட கடிதம் ஒன்றையும் எழுதியுள்ளார். அதில் எனது அணியினரை இந்த ஆபத்தில் இறக்கியதை என்னால் ஜீரணிக்க முடியாமலேயே உள்ளது. நான்வாழ்க்கையை வேறுவிதமாக உணரத்தொடங்கி உள்ளேன். என்றாலும் எங்களின் நடவடிக்கையினால், அன்று உயிருடன் மீட்கப்பட்ட மக்களைப் பார்த்து நான்மனத்திருப்தியடைந்தேன்.அதுவேஎனக்கு மனஆறுதலைத்தந்தது என எழுதியுள்ளார்.

இது இவ்வாறிருக்க, பத்தக்லோனில் தாக்குதல் நடந்தபோது இசை நிகழ்ச்சி நடத்திக்கொண்டிருந்த Eagles of Death Metal இசைக்குழுவினர், முற்றுமுழுவதுமாகப் பெரும் பாதிப்பிற்கும் அதிர்ச்சிக்கும் உள்ளாகியிருந்தனர். இவர்கள் மீண்டும் எழுந்து வந்து, இசைநிகழ்வு ஒன்றை நடாத்த உள்ளனர். 16ம் திகதி பெப்ரவரி மாதம் 2016 ஆம் ஆண்டு, ஒலிம்பியாவில் (Olympia) பெரும்இசைநிகழ்ச்சி ஒன்றை நடாத்த உள்ளனர் என, அவர்களின் தயாரிப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது. பத்தக்லோன் தாக்குதலிற்குப் பின்னர், தங்களது ஐரோப்பியச் சுற்றினையே இக்குழுவினர் இரத்துச் செய்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பயங்கரவாதத் தாக்குதலில் இருந்து தப்புவது எப்படி?

## எப்படிப் பாதுகாப்பைத் தேடிக்கொள்வது?

## விளக்கப்படம் வெளியிடப்பட்டுள்ளது

நவம்பர் 13 இன் பயங்கரவாததத் தாக்குதல், பிரான்ஸ் முழுவதையும், எல்லா விதத்திலும் உலுக்கிப்போட்டுள்ளது. ஒரு பயங்கரவாதத்தாக்குதலின் போது, அதிலிருந்து எப்படித் தப்பிப்பது, எப்படிப் பாதுகாப்பைத் தேடிக்கொள்வது, என்பவற்றை விளக்கும் ஒரு விளக்கப்படத்தை அரசாங்கம் வெளியிட்டுள்ளது.

'பாதுகாப்புப் படையினர் வருவதற்கு முன்னர், இந்த நடைமுறைகள், உங்கள் உயிர்களைப் பாதுகாத்துக் கொள்ளக்கூடும்' என்ற அறிவித்தலுடன் இந்த விளக்கப்படம் வெளியிடப்பட்டள்ளது.

**1. தப்பித்துக் கொள்ளுதல்**

எல்லாவற்றிற்கும் முதலாக, ஆபத்து எங்கிருக்கின்றது, என்பதைக் கண்டறிந்து, அதிலிருந்து கூடியவரை தொலைவில் செல்லவேண்டும். இந்தச் சுட்டியில், பத்தக்லோனில் ஒரு கரப்பிணிப்பெண் யன்னாலால் குதித்துத் தப்பமுயல்வதையும், பின்னர் ஒருவரால் காப்பாற்றப்படுவதையும் குறிப்பிட்டு உள்ளனர். ஆனாலும் ஆபத்திலிருந்து தப்புவதற்காக, இன்னொரு ஆபத்தில் சிக்காமல் செல்லவேண்டும் என்றும், ஆபத்தான பகுதிகளிற்குள் செல்லாமல் தவிர்க்க வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தாலும், இயன்றவரை மற்றவர்களிற்கு உதவும்படியும் கோரப்பட்டுள்ளது.

**2. ஒளிந்து கொள்ளுதல்**

தப்பி ஓட முடியாவிட்டால், பாதுகாப்பாக ஒளிந்து கொள்ளல் வேண்டும். ஒளிந்து கொள்ளும் இடத்திற்கு ஒரு தடுப்பை ஏற்படுத்துவதுடன் உடனடியாகச் செல்பேசியின் அனைத்து ஒலிகளையும் நிறுத்தல் வேண்டும். இதற்கும், பத்தக்லோனில் தப்பியவர்களின், சாட்சியத்தை வரைபடமாக்கி உள்ளனர். கதவுகளிற்கு அருகில் ஒளிவதைத் தவிர்த்து, திடமான ஒரு பகுதியின் பின்னால் ஒளிந்துகொள்ள முயல வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் பரவலான துப்பாக்கிச் சூடுகளில் இருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும்.

**3. அவசர உதவிகளிற்கும் காவற்துறையினருக்கும் அறிவித்தல்**

பாதுகாப்பான இடத்தில் ஒளிந்து கொண்டதும், 17 இற்கு அல்லது 112 இற்கு உடனடியாக அழைப்பை மேற்கொண்டு, நிலைமையைத் தெரிவிக்கவேண்டும். காவற்துறையினர் வரும்போது, அவர்களை நோக்கித் திடீரென ஓடாமல், கைகளை உயர்த்திக் கொண்டு, செல்லவேண்டும். காவற்துறையினரின் அதிரடிப்படையான டீகுஐ இனரால், இந்த நடைமுறை சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலமே பொதுமக்களையும் தீவிரவாதிகளையும் ஓரளவு இனங்காண முடியும். இதனையே பத்தக்லோனிலும் அதிரடிப்படையினர் மேற்கொண்டனர். இதன் மூலம் ஒவ்வொருவரையும், அவர்கள் பணயக்கைதிகள் தானா, என்பதைக் காவற்துறையினர் பரிசோதிக்க முடியும்.

இந்த விளக்கப்படம் அனைத்துப் பொது இடங்களிலும் ஒட்டப்படுவதுடன், 3Dகாணொளிகளாகவும், பிரச்சாரப்படுத்தப்படுகின்றது.



# மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 24 - 08 - 1958 |  | 17 - 12 - 2015 |

## திருமதி தேவராஜா பாக்கியராணி (ராணி)

(யாழ். புங்குடுதீவு - புத்தளம் சிலாபம்)

**யாழ். புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், புத்தளம் சிலாபத்தை வதிவிடமாகவும் கொண்ட தேவராஜா பாக்கியராணி அவர்கள் 17-12-2015 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.**

அன்னார், காலஞ்சென்றவர்களான சவிரிமுத்து அருளம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னையா றோசம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகளும், தேவராஜா அவர்களின் அன்பு மனைவியும், டினேஸ்(நோர்வே), டிலீப்(லண்டன்), டிஷேந்தன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், காஸ்மீர், பெனடிக், அமலா, புனிதம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், யசோ(நோர்வே) அவர்களின் பாசமிகு மாமியாரும், ஆனந்தன்(கனடா), செல்வராஜா, ராஜன், பவானி, நிலானி, சாந்தா, தங்கராஜா, இம்மானுவல், இந்திராணி, செல்வி ஆகியோரின் அன்பு மைத்துனியும், நிசாந், நிரோஜ், வினோத், விநோதினி, சிந்து, நியோமி, அனோஜ், தர்மிகா, நிம்சி, கஜா, யனா, அபி, சலோமி ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும், றொசான், றொசானி, வினு, விசாந், ஸ்றெபான், சுசானே, லக்ஸன், லக்ஷி, வால்டர், சங்கீதா ஆகியோரின் அன்பு அத்தையும், றெபேக்கா, டானியல், டெபோரா, ஜெய்சன் ஆகியோரின் பாசமிகு பேத்தியும் ஆவார்.

**அன்னாரின் திருவுடல் 22-12-2015 செவ்வாய்க்கிழமை அன்று மு.ப 10:00 மணியளவில் சிலாபம் பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.**

**இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

*தகவல்:*
திரு.சோதி (பிரான்ஸ்)
திரு.வால்டர்












# கனவுலகில்....

கலைத்து விட்டுத் தமிழீழத் தேசியத் தலைவரின் இடத்தில் அமர்ந்து கொள்ளும் கனவில் உருத்திர குமாரன் சஞ்சரிக்கத் தொடங்கினார். தனது கற்பனையின் உச்ச கட்டமாக தமிழீழ நாடாளுமன்றம் என்றும், தமிழீழ அமைச்சரவை என்றும் பல்வேறு கோமாளிக் கூத்துக்களை அரங்கேற்றி இறுதியில் தனக்குத் தானே தமிழீழத்தின் பிரதம மந்திரிப் பதவி வழங்கி உருத்திர குமாரன் முடிசூடிக் கொண்டார்.

ஆரம்பத்தில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தை உருவாக்கும் பிரகடனத்தை கே.பி மேற்கொண்ட பொழுது, அதன் கவர்ச்சிகரமான பெயரால் மயங்கிப் போய் அதன் பின்னால் சென்றவர்கள் பலர். எத்தனையோ பேர் பல நூறு ஈரோக்களையும், டொலர்களையும், பவுண்சுகளையும் கட்டுப் பணமாகச் செலுத்தித் தேர்தலில் குதித்தார்கள். வெற்றியும் பெற்றார்கள். ஆனால் அதன் பின்னர் தான் அவர்களுக்குப் புரிந்தது நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் ஒரு செல்லாக்காசு என்பது.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் அகால மரணமெய்தி சில ஆண்டுகள் கடந்து விட்டன. ஆறரை ஆண்டுகளுக்கு முன்னர் அதில் ஏதோ இருப்பதாக எண்ணி அதன் பின்னால் சென்ற பலர் அது வெடித்துப் பஞ்சாகப் பறக்கும் ஓர் இலவம் பழம் என்பதை உணர்ந்து விட்டார்கள்.

ஆரம்பத்தில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தைக் கட்டியெழுப்புவதற்காகத் தமது நேரத்தையும், உழைப்பையும் அர்ப்பணித்து செயற்பட்ட பலர் கறிவேப்பிலை போன்று உருத்திரகுமாரனால் தூக்கியெறியப்பட்டு விட்டார்கள். இப்பொழுது நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் என்பது உருத்திரகுமாரனுக்கு ஜால்ரா போடுபவர்களின் கூடாரமாக மாறிவிட்டது.

தென்சூடானில் தூதரகம் அமைப்பாகக் கூறிச் சிறுமிகளுடன் பாலியல் முறைகேட்டில் உருத்திர குமாரனின் அடிவருடிகள் ஈடுபட்டு ஒட்டுமொத்த ஈழத்தமிழினத்திற்கும் இழுக்கை ஏற்படுத்தியது உருத்திரகுமாரனால் தூக்கியெறியப்பட்ட அவரது முன்னாள் துணைப் பிரதமர் (!) கலாநிதி ராம் சிவலிங்கம் அவர்களால் ஏற்கனவே போட்டுடைக்கப்பட்ட ஒன்று.

இப்பொழுது இளம்பெண்கள் பலர் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் என்று கேள்வியுற்றதும் 'தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்' என்ற கதையாகத் தொலைதூரத்திற்கு ஓடும் அளவிற்கு உருத்திரகுமாரனைச் சுற்றியிருக்கும் அவரது அமைச்சர்களினதும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனக்கூறிக் கொள்வோரினதும் ஒழுக்க நடத்தைகள் அமைந்திருக்கின்றன.

ஆக, அகால மரணமெய்தி வெறும் சடலமாக மாறியிருக்கும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தை வர்ணப்பூச்சுக்களால் அலங்கரித்து மம்மி அரசியல் செய்யும் முயற்சியிலேயே இப்பொழுது உருத்திர குமாரன் இறங்கியுள்ளார்.

தமிழீழ சுதந்திர சாசனம் எழுதுகின்றோம், பன்னாட்டு விசாரணைக்குக் கையெழுத்துத் திரட்டுகின்றோம் என்றெல்லாம் உருத்திரகுமாரனும் அவரது அடிவருடிகளும் மேற்கொண்ட செப்படி வித்தைகள் எல்லாம் இப்பொழுது பிசுபிசுத்துப் போன நிலையில் தனது இருப்பை மக்களுக்கு நினைவூட்டிக் கொள்வதற்காக அடிக்கடி அறிக்கைகளை வெளியிடுவதையே தனது தேசியப் பணியாக எண்ணி உருத்திரகுமாரன் அறிக்கை வெளியிடுகின்றார்.

யாரும் உருத்திரகுமாரனைப் பற்றியோ, அன்றி அவரால் வெளியிடும் அறிக்கைகளைப் பற்றியோ அலட்டிக் கொள்வதில்லை. நாமும் சிறிது காலம் உருத்திரகுமாரனின் விடயத்தில் முகத்தைத் திருப்பிக் கொண்டுதான் இருந்தோம். நாம் மட்டுமல்ல, எமது மக்களும் சரி, உலக இராசதந்திரிகளும் சரி, எவருமே உருத்திரகுமாரனையோ, அவரது தலைமையிலான கும்பலையோ ஒரு பொருட்டாக எடுத்தது கிடையாது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையில் தமிழீழ தாயகத்தில் தமிழீழ நடைமுறை அரசு இயங்கிய பொழுது கொழும்புக்குப் பயணம் மேற்கொள்ளும் ஒவ்வொரு வெளிநாட்டு இராசதந்திரிகளும் கிளிநொச்சி சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்திப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். இந்நிலை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் 'மறைந்திருக்கும்' இன்றைய சூழமைவிலும் தொடர்கின்றது. ஆட்கள் தான் மாறியிருக்கின்றார்களே தவிர காட்சிகள் மாறவில்லை. கொழும்பில் சிங்கள ஆட்சியாளர்களைச் சந்திக்கும் வெளிநாட்டு இராசதந்திரிகள், அடுத்த படியாக யாழ்ப்பாணம் சென்று வடதமிழீழ முதலமைச்சரையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சந்திக்கும் நடைமுறையைப் பின்பற்றுகின்றார்கள்.

தமிழீழ நடைமுறை அரசு இயங்கிய பொழுது இன்னுமொரு மேலதிக நடைமுறை வெளிநாட்டு இராசதந்திரிகளால் கடைப்பிடிக்கப்பட்டது. கிளிநொச்சி செல்லும் ஒவ்வொரு இராசதந்திரியும், அதன் முன்னரோ பின்னரோ இலண்டன் சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் பாலா அண்ணையையும் சந்திப்பார்கள். தமிழீழத் தேசியத் தலைவரையும், பாலா அண்ணையையும் ஒன்றாகக் கிளிநொச்சியில் சந்திக்கும் பொழுது மட்டுமே இலண்டன் செல்வதை அவர்கள் தவிர்த்துக் கொள்வார்கள். இதற்குக் காரணம் அங்கீகரிக்கப்படாத தமிழீழத்தின் அங்கீகரிக்கப்பட்ட இராசதந்திரியாக அன்று பாலா அண்ணையை உலகம் கருதியதுதான்.

இன்று உருத்திரகுமாரனையும் தமிழ் மக்களின்

**கனவுலகில் இருந்து மீள்வதற்கு உருத்திரகுமாரன் முற்பட்டாலும் சர்வேந்திரா விடுவதாயில்லை. அவரைத் தொடர்ந்து கற்பனையுலகில் அமிழ்த்தி வைத்து கே.பியின் தமிழினச் சிதைப்புக் கனவை நிறைவேற்றுவதில் சர்வேந்திரா தீவிரமாக உள்ளார்.**

தலைவர்களில் ஒருவராக, அல்லது குறைந்த பட்சம் புலம்பெயர் தமிழர்களின் தலைவராக உலகம் கருதியிருந்தால், யாழ்ப்பாணத்தில் வடதமிழீழ முதலமைச்சரையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களையும் சந்தித்ததும் நியூயோர்க் சென்று உருத்திர குமாரனையும் அவர்கள் சந்தித்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு எதுவுமே நடைபெறுவதில்லை. ஏனென்றால் உருத்திரகுமாரனை ஒரு பொருட்டாகத் தமிழர்கள் மட்டுமன்றி எவருமே கருதுவதில்லை.

அப்படிப்பட்ட உருத்திரகுமாரன் அண்மையில் தனது அரசவைக் கூட்டம் என்ற கேலிப்பட்டாளத்தை ஒன்றுகூட்டி உரையொன்றை நிகழ்த்தியிருக்கின்றார். அதில் யதார்த்த அரசியலின் பெயரில் எந்த விதத்திலும் தமிழ் மக்களுக்குப் பயன்தராத பாதையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பயணிப்பதாகவும், ஆனால் எதிர்நீச்சல் போட்டாலும் சரியான பாதையில் தானும், தனது நாடுகடந்த தமிழீழ அரசாங்கமும் பயணிப்பாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நிந்தித்தும், தன்னைப் புகழ்ந்தும் உருத்திரகுமாரன் சுயபுராணம் பாடியிருக்கின்றார். அதை நாம் உட்பட எவருமே கண்டு கொள்ளவில்லை என்பது வேறு விடயம்.

சம்பந்தரின் அடிபணிவு அரசியலுக்கு மாற்றீடாக வடதமிழீழ முதலமைச்சர் விக்னேஸ்வரன் திகழ்கின்றார் என்ற வகையில் சம்பந்தரைப் பற்றியோ, அன்றி அவரது பட்டத்து இளவரசரான சுமந்திரனைப் பற்றியோ யாரும் பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை என்பதும் வேறு விடயம்.

ஆனால் இங்கு வேடிக்கை என்னவென்றால் உருத்திரகுமாரன் பாடிய சுயபுராணத்தை எழுதிக் கொடுத்த அவரது மதிமந்திரியான தர்மலிங்கம் சர்வேந்திரா என்பவர் அதற்கு பொழிப்புரை வழங்கியிருப்பதுதான். ஏதோ உருத்திரகுமாரனின் உரையில் பல பூடகமான அரசியல் கருத்துக்கள் மறைந்திருப்பது போன்றும், அதற்கு விளக்கம் கொடுப்பதே தனது தலையாய கடமை போன்றும் சர்வேந்திரா பொழிப்புரை எழுதியுள்ளார்.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் என்ற கும்பலை கே.பி உருவாக்கியதே சர்வேந்திராவை நம்பியே தவிர உருத்திரகுமாரனை நம்பியல்ல. உருத்திரகுமாரன் கே.பியின் ஒரு கைப்பாவை. அவருக்குத் தனது கற்பனைகள் நிறைவேறுவது போன்ற மாயை இருந்தாலே போதும்.

ஆனால் சர்வேந்திரா அப்படியல்ல. நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் என்ற கும்பலின் பின் இயந்திரமாகத் திரைமறைவில் இருந்து இயங்குபவர் அவர். கனவுலகில் தமிழீழத்தின் சக்கரவர்த்தியாக மிதந்து, கானல்நீரில் கப்பலோட்டி, வெற்று மணலில் மாளிகைகள் எழுப்பும் உருத்திரகுமாரனுக்கு முதுகு சொறிவதே தனது தேசியப் பணி என்ற அர்ப்பணிப்போடு செயற்படுபவர் சர்வேந்திரா. உருத்திரகுமாரன் என்ற முன் இயந்திரம், நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் என்ற தொடருந்து வண்டியை அதன் இலக்கில் கொண்டு செல்லத் தவறினாலும், சர்வே (சர்வேந்திரா) என்ற பின் இயந்திரம் அதனைக் கே.பி அவர்கள் வகுத்த பாதையில் இட்டுச் செல்லும் என்று நீண்ட காலமாகப் பீற்றிக் கொள்பவர் சர்வேந்திரா.

அதனால்தான் என்னவோ, கனவுலகில் இருந்து மீள்வதற்கு உருத்திரகுமாரன் முற்பட்டாலும் சர்வேந்திரா விடுவதாயில்லை. அவரைத் தொடர்ந்து கற்பனையுலகில் அமிழ்த்தி வைத்து கே.பியின் தமிழினச் சிதைப்புக் கனவை நிறைவேற்றுவதில் சர்வேந்திரா தீவிரமாக உள்ளார்.

தமிழீழ மக்களினது மட்டுமன்றி, உலகெங்கும் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் அபிமானத்தைப் பெற்றவராக இன்று மிளிர்பவர் வடதமிழீழ முதலமைச்சர் விக்னேஸ்வரன். சம்பந்தரின் அடித்தொண்டு அரசியலுக்கு விக்னேஸ்வரன் முற்றுப்புள்ளி வைப்பார் என்ற எதிர்பார்ப்பும், நம்பிக்கையும் இன்று தமிழர்களிடையே ஏற்பட்டிருக்கின்றது. தமிழீழத் தேசியத் தலைவரின் தொடர்பை இழந்த நிலையில், வழிகாட்ட மீகாமனின்றி நடுக்கடலில் தத்தளிக்கும் கப்பல் போன்று தவித்த ஈழத்தமிழர்களின் அபிமானத்திற்கு உரியவராக விக்னேஸ்வரன் அவர்கள் பரிணமித்துள்ளார். தனது அரசியல் பிரவேசத்தின் பொழுது விக்னேஸ்வரன் எடுத்த சில முடிவுகளையிட்டும், வெளியிட்ட கருத்துக்களையிட்டும் அதிருப்தியடைந்த நாம் கூட இன்று அவர் எடுத்திருக்கும் நிலைப்பாட்டை வரவேற்கின்றோம்.

ஒரு புறத்தில் சம்பந்தன் என்ற கப்பல் மெல்ல மெல்ல மூழ்கத் தொடங்கியுள்ளது. மறுபுறத்தில் விக்னேஸ்வரன் என்ற நம்பிக்கை நட்சத்திரம் மிளிரத் தொடங்கியுள்ளது. இதே நிலை தொடர்ந்தால் ஏற்கனவே அகால மரணமெய்திய உருத்திரகுமாரனின் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் என்ற சடலம் உழுத்து நாற்றமெடுக்கத் தொடங்கி விடும்.

அந்த நிலை வரும் பொழுது சர்வேந்திராவையும், உருத்திரகுமாரனையும் தவிர வேறு எவரும் கனவுலகில் முதுகு சொறியப் போவதில்லை. இதனைப் புரிந்து கொண்டு வெளியில் வருவதற்கு நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பலர் தயாராகி வருகின்றார்கள். அனைத்துலக தமிழர் ஒருங்கிணைப்புக் குழுக்களுடனும், மக்களவைகளுடனும் இணைந்து செயற்படுவதற்கு நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தைச் சேர்ந்த ஒரு தொகுதியினர் முற்படுவது இதனால்தான்.

அவர்களின் இந்த முடிவு வரவேற்கத்தக்கது. அவர்களை அரவணைத்து செயற்படுவது தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்களின் கடப்பாடாகும்.

# காணாமல்போனோருக்கான.....

எது எப்படி இருக்கின்ற போதிலும் சிறீலங்கா அரசுக்கு முண்டு கொடுத்து நிற்கின்ற தமிழ் அரசியல்வாதிகள் இந்த ஆணைக்குழுவின் ஏமாற்று வித்தை தொடர்பாக கருத்து எதனையும் தெரிவிக்காமல் அமைதியாக இருந்து வருகின்றமை தொடர்பாக காணாமற்போனோரின் உறவினர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

தமிழ் மக்களைக் காப்பாற்றவேண்டிய, தமிழ் மக்களின் உரிமைகளை மீட்கவேண்டிய பொறுப்பில் இருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடு தமிழ் மக்களை கவலையடையச் செய்துள்ளது. காணாமற்போனோரின் உறவினர்கள் இனியும் சிறீலங்கா அரசின் பொய் வேடத்தை



அவர்கள் மூலமாக புலிகளுக்கு எதிரான கருத்துக்களை பதிவு செய்து ஆவணமாக்குகின்றன. இந்த ஆவணம் விரைவில் வெளியிடப்படும் என்றும் அறியவருகின்றது.

நம்பத் தயாராக இல்லை என்பது இந்த முறை அமர்வுகளுடன் வெளிப்பட்டுவிட்டது. தற்போது தமிழ் மக்களுக்கு உள்ள ஒரேயொரு தெரிவு சர்வதேச நீதிமன்றில் வழக்கு தொடர்வதுதான்.

இதுவரை நாங்கள் போராடியது போதும், போராட இனியும் எம்மிடம் சக்தி இல்லை என்று கூறுகின்ற காணாமற்போனோரின் உறவினர்கள், சிறீலங்கா அரசுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்து தமது பிள்ளைகளை மீட்க முடியுமா என்பது குறித்து சிந்திக்கத் தலைப்பட்டுள்ளனர். ஆனால், இதற்காக நிதியைப் பெறுவது என்பது அவர்களுக்கு பெரும் சிக்கலான நிலையைத் தோற்றுவித்துள்ளது.

இந்த இடத்தில்தான் புலம்பெயர் தேசத்து உறவுகளின் உதவி எதிர்பார்க்கப்படுகின்றது. புலம்பெயர் உறவுகள் முன்வந்து முதற்கட்டமாக தாயகத்தில் காணாமற்போன ஒருசிலர் தொடர்பாகவேனும் சர்வதேச நீதிமன்றில் வழக்குத் தொடர உதவவேண்டும். அவ்வாறு சர்வதேச நீதிமன்றில் வழக்கு தொடர ஏதேனும் சட்டச் சிக்கல்கள் எதிர்நோக்கப்படுமாயின் அதற்கான மாற்று வழிகள் தொடர்பாக சிந்திக்கவேண்டும். இதன் மூலமே சிறிலங்கா படைகளை சர்வதேச ரீதியாக தண்டிக்க முடியும். அப்படி ஒரு நிலை வந்தாலே தாயகத்தில் தமிழ் மக்களின் எதிர்கால இருப்பு உறுதிப்படுத்தப்படும்.

ஒரு கதை

## மத்தளம்

முன்னொரு காலத்தில் ஓர் ஊரில் பெண் ஒருவர் வசித்து வந்தார். அவர் தனது சிறு நிலத்தில் விளையும் தானியங்களை விற்று, தனது பத்து வயது மகனை வளர்த்து வந்தார். அம்மகனுக்கு விளையாட்டுப் பொருள்கள் என்று ஒன்றுமே இல்லை.



தாய் படும் துன்பத்தை அவன் உணர்ந்திருந்தான். கட்டாயப்படுத்தி, தாயை வற்புறுத்தி எதையும் வாங்கும் குணம் அவனுக்கு இல்லை. மிகவும் பொறுமை சாலியான அவன் தன் தாய்க்கு தன்னால் முடிந்த உதவிகளைச் செய்து வந்தான். அவனுக்கு மனதில் ஒரே ஒரு ஆசை மட்டும் இருந்தது. அது 'மத்தளம்' ஒன்று வாங்க வேண்டும் என்பதுதான். ஒருநாள் அவனது தாய் தானியம் விற்க, நகரத்திற்குச் சென்றார். செல்வதற்கு முன் தனது மகனிடம் கேட்டார், "கண்ணே! நான் கடைத் தெருவிலிருந்து உனக்கு என்ன வாங்கி வரட்டும்?"

"அம்மா! உங்களுக்குத் தெரியுமே? எனக்கு மத்தளம்தான் பிடிக்கும். ஆனால் உங்களால் வாங்கி வர முடியாதம்மா. ஒண்ணும் வேண்டாம்மா...?" என்றான் அந்தச் சிறுவன். தனது மகனின் நல்ல குணத்தைக் கண்டு ஆரத் தழுவிய தாய், அவனை முத்தமிட்டுவிட்டு நகரத்திற்குப் புறப்பட்டார். தன் இயலாமையை எண்ணியவாறே கண்ணீருடன் நடந்து சென்றார். வழியில் ஒரு வயதான மனிதர் தென்பட்டார்.

"நல்ல பெண்ணே! ஏன் அழுகிறாய்?"

என்று அவர் கேட்டவுடன் அந்தத் தாய் கண்ணீருடன் தனது மகனின் ஆசையையும் தனது இயலாமையையும் எடுத்துக் கூற, அம்முதியவர் ஒரு குச்சியை அவளிடம் கொடுத்தார்.

"இந்தாம்மா, இந்தக் குச்சியை உன் மகனிடம் கொடு. மந்திரம் கூட நடக்கலாம்" என்று வாழ்த்திவிட்டுச் சென்றார் அந்த மனிதர்.

தொடர்ச்சி 22ம் பக்கம்

## மகளிர் படையணியின் முதற் தாக்குதற் தளபதி

ஒரு விதை

இந்திய இராணுவக் காலப்பகுதி, அதுதான் மேஜர் சோதியாக்காவை நாம் கண்டு பழகி, வழிநடந்த, நேசித்த காலம். நெடிதுயர்ந்த பெண், வெள்ளையான நிமிர் தோற்றமான பெண். பல்வரிசை முழுமையாகக் காட்டிச்சிரிக்கும் மனந்திறந்த சிரிப்புடன் எம்மைப் பார்வையிட்ட அந்த இனியவர் அப்போ தலைமை மருத்துவராகக் காட்டில் வலம் வந்தவர். சோதியாக்கா வயித்துக்குத்து... சோதியக்கா கால்நோ... சோதியாக்கா காய்ச்சல்... சோதியாக்கா.... சோதியாக்கா. ஓம் எப்ப வருத்தம் வந்தாலும் அவவைக் கூப்பிட நேரம் காலம் இல்லை. சாப்பிட்டாலும் சரி, இயற்கைக் கடனை கழிக்கச் சென்றாலும் பின்னுக்கும் முன்னுக்கும் நாய்குட்டிகள் போல் நாம் இழுபட்டுத்திரிந்த அந்தக் காலம். கடமை நேரங்கள் எங்களது தேவைகள் அனைத்தையும் நிறைவேற்றிய சோதியாக்கா. நெல்லியடி ஈன்றெடுத்த புதல்வி. கல்வியும் கலையும் கற்றுத்தேர்ந்த உயர் கல்வி மாணவி. விடியல் – அதுதான் எம்மை பட்டைதீட்டி வைரங்கள் ஆக்கிய பட்டறை, இல்லை பாசறை எம்மை வளர்த்த பாசத்தாய்ப்பூமி என்பேன்.



போர் முறைக் கல்வியும் புதிய பயிற்சிகளும் தலைவர் அவர்களால் நேரடிப்பார்வையில் நிறைவேற்றிய காலம். சமையல் தொடக்கம் போர்ப்பயிற்சி வரையான பெண்களின் தனி நிர்வாகத் திறமை வளர்த்தெடுக்கப்பட்ட முதல் படியும் அங்கேதான். அதில் சிறப்பாக எல்லாப் போராளிகளாலும் கீழ்ப்படிவுடனும், அன்புடனும் நோக்கப்பட்ட ஒரே ஒரு தலைவி மேஜர் சோதியாக்கா. உணவுத் தேவைக்காகவும் வேறுதேவைகள் கருதியும் மைல் கணக்கா, நாள் கணக்கா, அளவு தண்ணி, அளவு சாப்பாட்டுடன் நடை... நடை தொலைதூரம்வரை நடை. வானம் தெரியும் வெட்டைகளைக் கடக்கும்போது இரவு எம்முடன் கலந்துவிடும். தொடுவானம் வரை தெரியும் நட்சத்திரங்கள் எமக்கு உற்சாகமூட்டும். காலைப் பனியும், உடலில் எமனைத்தின்ற களைப்பும் சேர்ந்திருக்கும். ஆனால் நொடிப் பொழுதில் கிசு கிசுத்து நாம் அடித்த பம்பலில் யாவும் தூசாகிப்போகும். சோதியாக்கா யார் யார் எப்படி எவ்விதம் கவனிக்கவேண்டும். அவர்கள் உடல்நிலை எப்படியென்று கவனித்துத் தந்த பிஸ்கற், குளுக்கோஸ் உணவாக மாறிவிடும் அங்கே. அவரது பரிவும், இரக்கமும் எம்மைக் கவனித்து அனுப்பும் விதமும் எனக்கு என் அம்மாவை ஞாபகமூட்டும். கண்டிப்பும் கறாரும் கொண்ட கட்டளையை அவர் தந்த போதெல்லாம் எனக்கு என் அப்பா ஞாபகம் வரும். கல கல என பஜார் அடித்து சிரித்த வேளை என் பள்ளித் தோழிகள் நினைவில் வந்தனர். கள்ளம் செய்து விட்டு அவர்முன் போகும்போது கிறிஸ்தவ பாதிரியாரை ஞாபகம் ஊட்டும் சோதியாக்கா... அதுதான் எங்கள் சோதியாக்கா.

தொடர்ச்சி 22ம் பக்கம்

ஒரு குறள்

அறத்துப்பால் – வான்சிறப்பு




விண்இன்று பொய்ப்பின் விரிநீர்
வியனுலகத்து
உள்நின் றுடற்றும் பசி.

கடல்நீர் சூழ்ந்த உலகமாயினும்,
மழைநீர் பொய்த்து விட்டால்
பசியின் கொடுமை வாட்டி
வதைக்கும்.

ஒரு நகைச்சுவை

## உன் போல் அழகும் என்போல் அறிவும்

ஒருமுறை பெர்னாட்ஷா அவர்களுக்கு விருது வழங்கும் நிகழ்ச்சி அங்கே அழகான ஹாலிவுட் நடிகையும் பங்கேற்றாராம். விருந்து முடியும் தருவாயில் நடிகை பெர்னாட்ஷாவை பார்த்து, நாம் இருவரும் திருமணம் செய்து கொண்டால் நமக்கு பிறக்கும் குழந்தை என்னை போல் அழகாகவும், உங்களை போன்று அறிவானதாகவும் இருக்கும்தானே, நாம் திருமணம் செய்து கொள்ளலாமா என்று கேட்டாராம்.



அதற்கு பெர்னாட்ஷா சொன்னாராம் "ஒருவேளை பிறக்கும் குழந்தை உன்னுடைய அறிவையும், என்னுடைய அழகையும் கொண்டதாக பிறந்தால் என்ன செய்வது..?"

அவ்வளவு தான்.... நடிகை துண்டைக் காணோம், துணியை காணோமுன்னு இடத்தை விட்டு வெளியேறினாராம்.

## அவசர வாகனம்

ஒரு படம்



உலகின் முதல் அவசர வாகனம் (அம்புலன்ஸ்) இதுதான்.

ஒரு பொன்மொழி

**உனது அறிவையும், ஆற்றலையும்
மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்.
அவற்றை நீ பகிர்ந்து கொள்ளாவிட்டால்,
அவை உன்னை அழித்துவிடும்!**
- சோக்ரட்டீஸ்

ஒரு வரலாறு

## உழைப்பவர்களுக்கே உண்ணும் உரிமை

சீன நாட்டின் ஜென் புத்த துறவி இக்குவோவிற்கு ஏராளமான சீடர்கள் இருந்தனர். எண்பது வயது ஆன அவர், நாள்தோறும் சீடர்களுடன் தோட்டத்திற்குச் சென்று மண்வெட்டியை எடுத்து, நிலத்தை ஒழுங்கு செய்வார். சிறு செடிகளுக்குக் குடத்தில் தண்ணீர் கொண்டு வந்து ஊற்றுவார். சீடர்கள் அவரிடம், "தோட்ட வேலையை நாங்களே செய்கிறோம். நீங்கள் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்!" என்றார்கள்.

ஆனால் அவர்கள் பேச்சை அவர் கேட்கவில்லை. "நாம் சொன்னாலும் அவர் கேட்பதில்லையே! என்ன செய்யலாம்?" என்று கேட்டான் ஒரு சீடன். "தோட்டத்தில் உள்ள மண்வெட்டி, கடப்பாரை, குடம் போன்றவற்றை நாம் எங்கேயாவது மறைத்து வைத்துவிடுவோம். அவை இல்லாவிடில் நம் குருவால் எந்த வேலையும் செய்ய முடியாது. ஓய்வு எடுத்துக்கொள்வார்" என்றான் இன்னொரு சீடன்.

திட்டப்படி கருவிகள் மறைத்து வைக்கப்பட்டன.

குரு வழக்கம் போல வேலை செய்வதற்காக தோட்டத்திற்குச் சென்றார். குடம், மண்வெட்டி ஆகியவை இல்லாததை அறிந்தார். அன்று, அவர் எதுவும் உண்ணவில்லை.

இதை அறிந்த சீடர்கள் வருந்தினார்கள். "நாம் செய்த செயலால்தான் குரு கோபம் கொண்டுள்ளார். மீண்டும் அந்தக் கருவிகளைத் தோட்டத்தில் வைத்து விடுவோம்" என்றான் ஒரு சீடன். மீண்டும் அந்தக் கருவிகள் தோட்டத்தில் வைக்கப்பட்டன. அன்று, தோட்டத்திற்கு வந்த குரு வழக்கம் போலத் தன் வேலைகளைச் செய்தார். இரவு நேரம் வந்தது. சீடர்களுடன் அமர்ந்து மகிழ்ச்சியாக உண்டார்.

"நீங்கள் துன்பப்படக்கூடாது என்ற நல்ல எண்ணத்தில்தான் கருவிகளை மறைத்து வைத்தோம். அதற்காக உங்கள் உடலை வருத்திக்கொண்டு உண்ணாவிரதம் இருக்கலாமா?" என்று கேட்டான் ஒரு சீடன்.

"உங்கள் மீதான கோபத்தில் நான் உண்ணாமல் இருக்கவில்லை. உழைப்பவர்களுக்கே உண்ணும் உரிமை உண்டு. வேலை இல்லாததால் உணவு உண்ணவில்லை" என்று அவர் கூறினார்.

ஒரு பழமொழி

**எல்லாப் பறவையும்தான் மீன் தின்னும். மீன் கொத்திக்கு மட்டும் கெட்ட பெயர்.**

ஒரு தகவல்

## நுண்ணோக்கியை கண்டுபிடித்த லீவன் ஹாக்



அறிவியல்துறை ஆராய்ச்சிக்குப் பெரிதும் பயன்படும் 'மைக்ராஸ்கோப்' எனப்படும் நுண்ணோக்கியைக் கண்டுபிடித்த லீவன்ஹாக் (Leeuwenhoek), 1632ம் ஆண்டு நெதர்லாந்து நாட்டில் பிறந்தார். படிப்பில் கவனமும், நாட்டமும் இல்லாத இவர், கடை ஒன்றில் வேலைக்குச் சேர்ந்தார். கடையில் இருந்து வீட்டுக்குத் திரும்பியதும் புத்தகங்கள் படிப்பதில் ஆர்வம் செலுத்தினார். ஆராய்ச்சி அறிவுடன் தன்னை வளர்த்துக்கொண்ட லீவன்ஹாக், நுண்ணோக்கி தயாரிக்கும் பணியை மேற்கொண்டார். லீவன்ஹாக் தான் கண்டுபிடித்த நுண்ணோக்கியை வைத்து கண்ணில் தெரியும் பொருட்களை எல்லாம் ஆராய்ச்சி செய்தார். ஒவ்வொரு முறையும் நுண்ணோக்கி மூலம் பார்க்கும்போது புதிய புதிய காட்சிகள் தெரிவதைக் கண்டு அதிசயித்தார். லீவன்ஹாக்கின் ஆராய்ச்சியைப் பாராட்டிய ரோயல் கழகத்தினர், அந்த ஆராய்ச்சியின் விவரத்தைத் தெரிவிக்குமாறு அவரிடம் கோரினார்கள். லீவன்ஹாக்கும் ரோயல் கழகத்தினருக்கு அதை அனுப்பி வைத்தார். ரோயல் கழகத்தினர் இவரது ஆராய்ச்சியைப் போற்றிப் புகழ்ந்தார்கள். மழை நீர்த்துளியைப் பற்றி ஆராய விரும்பிய லீவன்ஹாக், மழை நீர் தேங்கிய ஒரு தொட்டியில் இருந்து சிறிது நீரை எடுத்து நுண்ணோக்கி மூலம் ஆராய்ச்சி செய்தார். அதில் நுண்ணிய உயிரினங்கள் இருப்பதைக் கண்டறிந்தார். விழும் மழைத்துளியில் நுண்ணுயிர்கள் இல்லை என்பதையும் தொட்டியில்தான் அவை இருக்கின்றன என்பதையும் கண்டறிந்தார். தான் மேற்கொண்ட ஆராய்ச்சியினையும், கண்டறிந்த உண்மைகளையும் ரோயல் கழகத்துக்கு லீவன்ஹாக் அனுப்பிவைத்தார். லீவன் ஹாக்கின் அறிவுத்திறனைக் கண்ட ரோயல் கழகத்தினர் அவருக்குச் சிறப்பு உறுப்பினர் பதவியை வழங்கினார்கள். ஏழைக் குடும்பத்தில் பிறந்து பாடசாலைக் கல்வியில் ஆர்வம் இல்லாமல் இருந்த லீவன்ஹாக், தனது சொந்த முயற்சியாலும், தன்னம்பிக்கையினாலும் அறிவியல் மேதையாக உயர்ந்தார். அறிவியலுக்காகத் தனது வாழ்க்கையை அர்ப்பணித்த லீவன் ஹாக் தனது 91வது வயதில் 1723ம் ஆண்டு இயற்கை எய்தினார்.



# ASCES

## 25 ஆண்டுகளாக நடைபெறும் பதிவு செய்யப்பட்ட பாடசாலை

**E-mail : asces@free.fr Tél : 07 82 88 59 16**

Grande Section, CP, CE,CM,
Collège, Lycée வகுப்புகள்
Maths, Français, Physique,
Chimie, SVT, Histoire

எமது 4வது கிளை: Neuilly sur Marneல் வகுப்புகள்...
Chapelle Saint Marie, 3, rue de Berry, 93330 Neuilly sur Marne
(Bus: 127, 203, 214, 303 தரிப்பிடம் Arrêt: île de France
திறந்திருக்கும் நேரம்: புதன் - சனி - ஞாயிறு பி.ப 1:30 - 5:30 மணி

DILF, DELF, TCE Nationality பெறுவதற்கான
மொழிப்பரீட்சைக்குத் தயார் செய்யும்
புதிய பிரஞ்சு வகுப்புகள்
03-12-2015 வியாழன் வெள்ளி காலை 9:30 மணி
09-01-2016 சனி பி.ப 3:30 மணி DELF B1
09-01-2016 சனி, ஞாயிறு மாலை 4:00 மணி
05-12-2015 சனி, ஞாயிறு காலை 9:30 மணி
07-12-2015 திங்கள் - செவ்வாய் காலை 10:30மணி

திறமையான ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றன
BAC , BREVET பரீட்சைகளில் 100வீத சித்தி
Cambridge University ஆல் நடாத்தப்படும்
Starters, Movers, Flyers, Ket, Pet பரீட்சைக்கான வகுப்புகள்

எமது வெளியீடுகள்
நடைமுறை பிரஞ்சு – பிரஞ்சு இலக்கணம் பயில சிறந்தநூல்
பிரஞ்சு – தமிழ், தமிழ் – பிரஞ்சு அகராதி
பிரஞ்சு பேசுவோம் பகுதி 1 & 2 CD உடன்

LA COURNEUVE இல்
35, rue Maurice Lachâtre - 93120 La Courneuve

BOBIGNY
38, rue Gaston Crépin 93000 Bobigny

PARIS
3, place de Joinville 75019 Paris M° Crimée

**Bridal make up & cake icing**
மணப்பெண் அலங்காரம், கேக் அலங்காரம்
சனி காலை 9.30 மணி ஆரம்பம்
தைமாத வகுப்பிற்கான பதிவுகள் இப்போதே செய்யுங்கள்

புதன், சனி, ஞாயிறுகளில்
தமிழ், நடனம், சங்கீதம், வீணை, புல்லாங்குழல், மிருதங்கம், வயலின், ஓர்கன், கிட்டார் வகுப்புகள்
தையல் வகுப்புகள் ஆரம்பம்

# பாரிஸ் லாச்சப்பலில் புதியதோர் உதயம்

## Express station service




- எரிபொருள் நிரப்பு நிலையம்
- புத்தம் புதிய கைத்தொலைபேசிகள்
- தொலைபேசி உதிரிப்பாகங்கள்



25 boulevard de la Chapelle,
75010 Paris
E-mail: express-station@hotmail.com
Tél.: 01 40 18 07 44

WESTERN UNION · Ria Money Transfer · MoneyGram money transfer

விரைவாகவும் பாதுகாப்பாகவும் சர்வதேச ரீதியில் பணம் அனுப்பிக்கொள்ள
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதத்துடன் கூடிய சேவைக்கு நாட வேண்டிய ஒரே இடம்.

# கம்பியா இஸ்லாமிய நாடாகப் பிரகடனம்

கம்பியாவின் ஜனாதிபதியான யஹ்யா ஜம்மா தனது சிறிய நாட்டை ஒரு இஸ்லாமிய நாடாக பிரகடனம் செய்துள்ளார். இது தனது நாட்டின் பெரும்பான்மையான முஸ்லிம்களின் மதத்தின் அடிப்படையிலும், தமது கொலனித்துவ கடந்த காலத்தை ஒழிக்கும் நோக்கிலும் செய்யப்படுவதாக அவர் கூறியுள்ளார். ஆனால் அனைத்து குடிமக்களின் உரிமைகளும் மதிக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

பிரித்தானிய ஆதிக்கத்தில் இருந்த கம்பியா, 1965 இல் சுதந்திரம் பெற்றது. சுமார் 18.8 இலட்சம் மக்கள் தொகை கொண்ட அந்த நாட்டில், ஏறத்தாழ 90 சதவீதம் பேர் முஸ்லிம்கள். கிறிஸ்தவர்கள் சுமார் 8 சதவீதத்தினர். ஏனையோர் பழங்குடியினர். முன்னாள் இராணுவ அதிகாரியான யாஹியா ஜாமே, 1994ம் ஆண்டு ஆட்சியைக் கைப்பற்றி அதிபரானார். அதன் பிறகு தொடர்ந்து ஆட்சிபுரிந்து வருகிறார்.

கம்பியாவை இஸ்லாமிய தேசமாக அறிவித்திருப்பது அரசியல் சாசனத்துக்கு எதிரானது என்று முக்கிய எதிர்க்கட்சியான ஐக்கிய ஜனநாயகக் கட்சி கூறியுள்ளது. மக்கள் பிரச்னைகளிலிருந்து திசை திருப்ப இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. அதிபருக்கு எப்போதெல்லாம் பதவி பறி போகும் அச்சம் தோன்றுகிறதோ, அப்போதெல்லாம் வினோதமான அறிவிப்புகளை அவர் வெளியிடுவது வழக்கம் என்று அந்தக் கட்சியின் தலைவர் உசேனு தார்போ கூறினார்.

இதேவேளை, தனது 21 வருட ஆட்சிக்காலத்தில் அதிரடி அறிவிப்புகளுக்கு பேர் போனவராக யஹ்யா ஜம்மா பார்க்கப்படுகின்றார். பொதுநலவாய அமைப்பை நவீன கொலனித்துவம் என்று கூறி, அதிலிருந்து கம்பியா விலகுவதாக அவர் 2013இல் அறிவித்தார். தாம் பால்வினை (எயிட்ஸ்) நோய்க்கு மூலிகை மருந்தை கண்டுபிடித்துள்ளதாக 2007ல் அவர் குறிப்பிட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சிறைக் கைதிகளுக்கு கிராமி விருது!

தென்கிழக்கு ஆபிரிக்க நாடான மாலவியிலுள்ள சிறைக்கைதிகள் குழுவொன்றுக்கு, கிராமி விருதுக்கான பரிந்துரை கிடைத்துள்ளது. மாலவின் ஸொம்பா சிறைச்சாலையிலுள்ள ஆண், பெண் சிறைக்கைதிகள் இணைந்து தயாரித்த பாடலுக்கே, உலக இசைப் பிரிவில் பரிந்துரை வழங்கப்பட்டுள்ளது. மாலவியிலிருந்து, கிராமி விருதுகளுக்கான பரிந்துரை வழங்கப்பட்ட முதலாவது சந்தர்ப்பம்



இதுவென்பதோடு, அது, சிறைச்சாலையொன்றினூடாகக் கிடைத்தமை விசேடமானது. ஸொம்பா சிறைச்சாலைச் செயற்றிட்டம் என்ற பெயரில் உருவாக்கப்பட்ட செயற்றிட்டத்தில், 'இங்கு என்னிடம் எதுவும் இல்லை (I Have No Everything Here)' என்ற பாடல் தொகுதியொன்று வெளியிடப்பட்டது. இவ்வாண்டு ஜனவரியில் வெளியிடப்பட்ட இந்தத் தொகுதியில், 20 பாடல்கள் காணப்பட்டன. அவற்றில் 18 பாடல்கள், சிறைக் கைதிகளாலேயே எழுதப்பட்டவையாகும்.

எளிமையான இசைக்கருவிகளைக் கொண்டு உருவாக்கப்பட்ட இந்தப் பாடல்கள், இவ்வாறான அங்கிகாரத்தைப் பெற்றுள்ளமை, கவனத்தை ஈர்த்துள்ளது. இந்தக் கைதிகளில் பெரும்பாலானோர் பல்வேறு குற்றச்சாட்டுக்களுடன் ஆயுள் சிறைத்தண்டனையை எதிர்நோக்கி வருகின்றனர்.

# ஆப்கான் விமான நிலையத் தாக்குதலில் 50 பேர் பலி

ஆப்கானிஸ்தான் விமான நிலைய வளாகத்தில் தலிபான்கள் நிகழ்த்திய தற்கொலைத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 50 ஆக உயர்ந்தது. இதுகுறித்து ஆப்கன் பாதுகாப்புத் துறை அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, காந்தஹார் விமான நிலையத்தில் தலிபான்களுக்கும், பாதுகாப்புப் படையினருக்கும் இடையே நடந்த சண்டையில் பலியானவர்களின் எண்ணிக்கை 50 ஆக அதிகரித்துள்ளது. உயிரிழந்தவர்களில் 10 இராணுவத்தினரும், 2 காவல்துறையினரும் அடங்குவர். இந்தச் சம்பவத்தில் 37 பேர் காயமடைந்தனர் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

காந்தஹார் நகரில் அமைந்துள்ள சர்வதேச விமான நிலைய வளாகத்துக்குள் கடந்த 8ம் திகதி செவ்வாய்க்கிழமை புகுந்த தலிபான்கள், அங்கிருந்தவர்கள் மீது சரமாரியாகத் துப்பாக்கியால் சுட்டனர். இதனைத் தொடர்ந்து, அருகிலிருந்த இராணுவ முகாம்களில் இருந்த இராணுவத்தினர் அந்தப் பகுதியை சுற்றி வளைத்தனர். இராணுவத்தினருக்கும், தலிபான்களுக்கும் இடையே இரவு தொடங்கிய சண்டை 27 மணி நேரத்துக்கு பின்னரே முடிவுக்கு வந்திருந்தது.

# துருக்மெனிஸ்தான் எண்ணெய் விநியோகம்

## ஆப்கான், இந்தியா, பாகிஸ்தான் ஒப்பந்தம்

தெற்காசியாவில் எண்ணெய்த் தேவைக்கான விநியோகத்தை இலகுவாக்கும் மிகமுக்கியமான எண்ணெய்ப் பாதை சம்பந்தமான ஒப்பந்தத்தில், துருக்மெனிஸ்தானுடன் ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், இந்தியா ஆகிய நாடுகள் ஒப்பந்தமிட்டுள்ளன. இவ்வொப்பந்தத்தில் கைச்சாத்திட்ட நான்கு நாடுகளினதும் ஆங்கில முதல் எழுத்துக்களைக் கொண்டு, TAPI குழாய்வரிசை என அழைக்கப்படுகின்றது.



சுமார் 8 பில்லியன் டொலர்கள் செலவில் அமைக்கப்படவுள்ள இப்பாதை, 1,814 கிலோ மீற்றர் நீளமானதாகும். 2019ம் ஆண்டளவில் செயற்பட ஆரம்பிக்குமென அறிவிக்கப்படுகிறது. துர்க்மெனிஸ்தானின் பிரபல எரிவாயு வயலான கல்கினிசில் இருந்து, ஆப்கானிஸ்தானின் ஹெராத் மற்றும் காந்தகார் மாகாணங்கள் வழியாக பாகிஸ்தானுக்குள் நுழைந்து, அங்கிருந்து முல்தான், குவெட்டா வழியாக இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தின் பசில்காவை அடையும்.

இந்த திட்டத்தின் தொடக்க விழா துர்க்மெனிஸ்தானின் மேரி நகரில் கடந்த வாரம் நடந்தது. தெற்காசியாவில் அதிகரித்துவரும் எண்ணெய்த் தேவையைத் திருப்தி செய்யும் முகமாக இப்பாதை அமையுமெனவும், இப்பிராந்தியத்தை ஒற்றுமைப்படுத்த உதவுமெனவும், இவ்வொப்பந்




தத்தில் கைச்சாத்திட்ட ஆப்கானிஸ்தானின் ஜனாதிபதி அஷ்ரப் கானி, பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப், இந்திய உப ஜனாதிபதி மொஹமட் ஹமிட் அன்சாரி, துருக்மெனிஸ்தான் ஜனாதிபதி குர்பங்குலி பேர்டிமுகமேடொவ் ஆகியோர் நம்பிக்கை வெளியிட்டனர். எனினும், ஆப்கானிஸ்தானின் பாதுகாப்பு நிலைமை காரணமாக, இப்பாதை செல்லும் இடங்களில் பாதுகாப்பின் நிலை கேள்விக்குரியதாக உள்ளதாகத் தெரிவிக்கும் விமர்சகர்கள், இத்திட்டத்துக்கு யார் நிதியளிப்பது என்பது தொடர்பிலும் குழப்பநிலை காணப்படுவதாகத் தெரிவித்துள்ளனர்.

# ஹைட்ரஜன் குண்டு வெடிக்க தயார்!

## வடகொரியா அறிவிப்பால் உலக நாடுகள் அதிர்ச்சி

ஹைட்ரஜன் குண்டு வெடிக்க தயார் என்று வடகொரியாவின் ஆட்சியாளர் கிம் ஜாங் உன் வெளியிட்டுள்ள அறிவிப்பால், உலக நாடுகள் அதிர்ச்சி அடைந்துள்ளன. உலக நாடுகளின் கடும் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல்,



சர்வதேச ஒப்பந்தங்களையும் மீறி வடகொரியா அணுகுண்டு சோதனைகளை நடத்தி வந்துள்ளது. அணு ஆயுதங்களைச் சுமந்து செல்லும் ஏவுகணைகளையும் அந்த நாடு சோதித்து வருகிறது. இதற்காக அந்த நாட்டின் மீது அமெரிக்கா பொருளாதார தடைகளை விதித்துள்ளது. ஆனால் அந்த நாடு எதையும் கண்டுகொள்ளாமல், தனது அணு ஆயுத திட்டங்களை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இந்நிலையில், அந்த நாட்டின் சில கப்பல் நிறுவனங்கள் சட்டவிரோதமாக ஆயுதங்களை கடத்தி வந்து அந்த நாட்டுக்கு அளிப்பதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதன் காரணமாக வடகொரியாவுக்கு தேவையான இராணுவ தளவாடங்களை ஏற்றுமதி செய்ய அமெரிக்காவில் தடை விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் வடகொரியாவில் உள்ள 2 வங்கிகள், 3 கப்பல் நிறுவனங்களுடன்

தொடர்ச்சி 20ம் பக்கம்

### சிறந்த மனிதர் ஏஞ்சலா

2015ம் ஆண்டின் சிறந்த மனிதராக, ஜேர்மனி பிரதமர் ஏஞ்சலா மெர்க்கலை அமெரிக்காவில் இருந்து வெளியாகும் 'டைம்' ஆங்கிலப் பத்திரிகை தேர்வு செய்துள்ளது. சுமார் 30 ஆண்டுகளுக்கு பின், இந்த கௌரவத்தை பெறும் முதல் பெண்



என்ற பெருமை மெர்க்கலுக்கு கிடைத்துள்ளது. 1986ம் ஆண்டின் சிறந்த மனிதராக பிலிப்பின்ஸின் முதல் பெண் அதிபர் கோராஸன் அகினோவை, 'டைம்' பத்திரிகை தேர்வு செய்தது குறிப்பிடத்தக்கது. 61 வயதாகும் ஏஞ்சலா, ஈரான் அதிபர் ஹஸன் ரோஹானி, ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின் உள்ளிட்ட உலகின் பிரபலமான தலைவர்களையும், அரசியல்வாதிகளையும் பின்னுக்குத் தள்ளி முதலிடத்தைப் பிடித்துள்ளார். உக்ரைன் பிரச்னை, சிரியா அகதிகள் விவகாரம் உள்ளிட்டவற்றில் ஏஞ்சலாவின் செயல்பாடுகள், அவரது தலைமைப்பண்பு ஆகியவற்றுக்காக அவரை சிறந்த மனிதராக தேர்வு செய்ததாக 'டைம்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

### முன்னாள் பிரதமருக்கு 10 ஆண்டு சிறை

ஊழல் வழக்கில் கஜகஸ்தான் முன்னாள் பிரதமர் செரீக் அஹ்மதோவுக்கு 10 ஆண்டு சிறைத் தண்டனை விதித்து அந்நாட்டு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. எண்ணெய் வளம் மிக்க கஜகஸ்தானில் 2012 முதல் 2014ம் ஆண்டுவரை செரீக் அஹ்மதோவ் பிரதமராகப் பொறுப்பு வகித்துவந்தார். அவரது ஆட்சிக் காலத்தில் முறைகேடாக சொத்து சேர்த்ததாகவும், அதிகாரத்தைதவறாகப் பயன்படுத்தியதாகவும் அஹ்மதோவ் உள்பட 17 பேர் மீது அந்நாட்டு நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வந்தது. இந்நிலையில், செரீக் அஹ்மதோவுக்கு 10 ஆண்டு சிறைத் தண்டனை விதித்து நீதிமன்றம் கடந்த வாரம் தீர்ப்பளித்தது. கஜகஸ்தானில் மிக உயரிய பதவியை வகித்த ஒருவருக்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருப்பது இதுவே முதல் முறையாகும்.

### ட்விட்டருக்கு துருக்கியில் அபராதம்!

அங்காரா: ட்விட்டர் சமூக வலைதளத்தில் தீவிரவாதத்தை ஊக்குவிக்கும் வகையில் தகவல்கள் தொடர்ந்து வருவதால் அதற்கு துருக்கி அரசு 50,000 டொலர் அபராதம் விதித்துள்ளது. நாட்டில் தீவிரவாத கருத்துக்களை ட்விட்டர் ஊக்குவிக்கிறது. இதை தடுக்க வேண்டும் என்று பலமுறை சொல்லியும் அதை ட்விட்டர் நிர்வாகம் கேட்கவில்லை. தீவிரவாத ஆதரவுக் கருத்துகள் தொடர்ந்து வருவதால் இளைஞர்களும் பாதிக்கப்படுகின்றனர். நாட்டின் பாதுகாப்புக்கு குந்தகம் ஏற்படுகிறது என்று அரசு காரணம் கூறியுள்ளது. ஒரு நாடு ட்விட்டருக்கு அபராதம் விதித்திருப்பது இதுவே முதன் முறை எனக் கூறப்படுகின்றது.

## ரஷ்ய தீ விபத்தில் 21 பேர் பலி

ரஷ்யாவில் மருத்துவமனை ஒன்றில் கடந்த 12ம் திகதி இரவு ஏற்பட்ட தீவிபத்தில் 21பேர் உயிரிழந்தனர். தெற்கு ரஷ்யாவில் உள்ள மனநல மருத்துவமனையில் இந்தத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. தீ விபத்து ஏற்பட்டபோது அவ்விடத்திலேயே 19 பேர் பலியாகியுள்ளனர். காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த இருவர் சிகிச்சை பலனின்றி பின்னர் உயிரிழந்துள்ளனர். மருத்துவ மனையில் மரப் பலகையினால் உருவாக்கப்பட்ட பெரும்பாலான பகுதிகள் எரிந்து விட்டது என்றுதகவல்கள்தெரிவிக்கின்றன.

## சிறார்களை வைத்து ஆபாசப் படம் சர்வதேச கும்பல் கைது

சிறுவர்களை வைத்து ஆபாசப் படங்களை எடுத்து விநியோகித்து வந்த 60 பேரை, 12 நாடுகளில் காவல்துறையினர் கைது செய்துள்ளனர். இதுகுறித்து மெக்சிக்கோ அரசு வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது, சிறுவர்களை வைத்து ஆபாசப்படங்கள் எடுத்து, அவற்றை இணையத்தளம் மூலம் சர்வதேசக் கும்பல் விற்பனை செய்து வந்தது. அந்தக் கும்பலுக்கு எதிரான சர்வதேச நடவடிக்கையின் ஒரு பகுதியாக, அமெரிக்கா, ஆர்ஜென்ரீனா, பிரேசில், சிலி, கொலம்பியா, கோஸ்டரிகா, ஸ்பெயின், கௌதமாலா, மெக்சிக்கோ, பராகுவே, உருகுவே, வெனிசூலா ஆகிய நாடுகளில் தேடுதல் வேட்டை நடத்தப்பட்டது. அந்த நாடுகளில் 97 இடங்களில்காவல்துறையினர் நிகழ்த்திய சோதனையில், 60 பேர் கைது செய்யப்பட்டனர். இந்த நடவடிக்கைக்கு, அமெரிக்கப் புலனாய்வு அமைப்பான எஃப்பிஐ. உதவி அளித்தது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மன்னரின் நாயை விமர்சித்தவருக்கு 37 ஆண்டு சிறை

தாய்லாந்தில் மன்னராக தற்போது பூமிபால் அதுல்யாதெச் என்பவர் இருந்து வருகிறார். அங்கு மன்னரை விமர்சிப்ப



வர்களுக்கு கடுமையான தண்டனை கொடுக்கும் வகையில் சட்டம் உள்ளது. இந்நிலையில் மன்னரின் நாயை கிண்டல் செய்ததற்காக ஒருவருக்கு தாய்லாந்து அரசு சிறை தண்டனை அளித்துள்ளது. தானாகொர்ன் சிரிபையூன் என்ற அந்த தொழிலாளி இணையத்தில் மன்னரின் நாய் குறித்து கிண்டலாக பதிவு செய்திருந்தார். அதற்காக தொழிலாளி சிரிபையூன் மீது தேசத்துரோக வழக்கு மற்றும் மன்னரை அவமதித்த குற்றச்சாட்டு என்று இரண்டு பிரிவுகளில் இராணுவ நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

அவருடைய இணையத்தள பதிவிற்காக 37 வருட சிறை தண்டனை விதித்து நீதிபதி உத்தரவிட்டுள்ளார். மன்னருடைய நாய் பற்றி என்ன விமர்சித்தார் என்பது குறித்து இராணுவ நீதிமன்றம் தெரிவிக்கவில்லை என்று தெரிவித்த தொழிலாளியின் வழக்கறிஞர், மன்னருக்காக இயற்றப்பட்ட சட்டம் இந்த அளவுக்கு விபரீதமாக பயன்படுத்தப்படும் என்று கற்பனை செய்து கூட பார்க்கவில்லை எனக் கூறியுள்ளார்.

அமெரிக்கர்களோ, அமெரிக்க நிறுவனங்களோ எந்தவொரு தொடர்பும் வைத்துக்கொள்ளக்கூடாது எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இதற்கிடையே வடகொரியா புதிய ஹைட்ரஜன் குண்டு ஒன்றை உருவாக்கி உள்ளதாக அந்த நாட்டின் ஆட்சியாளரான கிம் ஜாங் உன் தெரிவித்துள்ளார். சமீபத்தில் அந்த நாட்டின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இராணுவ தளம் ஒன்றுக்கு சென்று பார்வையிட்ட கிம் ஜாங் உன், வடகொரியா ஏற்கனவே வலிமை வாய்ந்த அணு ஆயுத நாடு. வடகொரியா தனது இறையாண்மையை காத்துக் கொள்வதற்கு அணுகுண்டையும், ஹைட்ரஜன் குண்டையும் வெடிக்க தயார் எனக் கூறினார். இதுகுறித்த தகவல்களை அந்த நாட்டின் அதிகாரப்பூர்வமான செய்தி நிறுவனம், கேசிஎன்ஏ. வெளியிட்டுள்ளது.

ஏற்கனவே வடகொரியா 2006 ,2009, மற்றும் 2013ம் ஆண்டுகளில் 3 முறை அணுகுண்டு சோதனைகளை நடத்தியுள்ளது. இப்போது ஹைட்ரஜன் குண்டை வெடிக்க வைப்பதற்கும் தயார் என கிம் ஜாங் உன் கூறி இருப்பது உலக நாடுகளை அதிர்ச்சி அடைய வைத்துள்ளது.

அணுகுண்டுகளை பொறுத்தமட்டில் அவை அணு பிளப்பு கொள்கையை அடிப்படையாகக் கொண்டவை. இதில் அணுவை பிளக்கிறபோது, அவை பெரும் ஆற்றலை வெளியிடும். ஹைட்ரஜன் குண்டுகள் தொடக்க நிலை பிளப்பு வெடித்தலில் இருந்து ஆற்றலைப் பயன்படுத்தி மிகவும் அதிக ஆற்றல் உள்ள அணு கருச்சேர்க்கை வெடித்தலை உருவாக்கும். இது அதிகசக்தி வாய்ந்தது என கூறப்படுகிறது. அமெரிக்காவையே தாக்கும் அளவுக்கு வல்லமை படைத்த அணு ஆயுதங்கள் தன்னிடம் இருப்பதாக ஏற்கனவே வடகொரியா கூறியுள்ள நிலையில், இப்போது ஹைட்ரஜன் குண்டு இருப்பதாக முதல் முறையாக உணர்த்தி இருப்பது உலக நாடுகள் இடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இந்நிலையில் கிம் ஜோங் உன் அறிவிப்பை மறுத்துள்ள அந்நாட்டு பாதுகாப்புத்துறை உயர் அதிகாரிகள், வடகொரியா அணுகுண்டு தயாரிப்பதற்கான தொழில்நுட்பத்தில் மேலும் கவனம் செலுத்தி வருகிறது. ஹைட்ரஜன் குண்டுகள் தயாரிப்பதர்கான முயற்சிகளில் ஈடுபடவில்லை என தெரிவித்துள்ளனர்.

## வெளிநாடுகளில் கறுப்புப் பணம் சீனா முதலிடம் !

வெளிநாடுகளில் கறுப்புப் பணத்தைப் பதுக்குவதில் சீனாவிற்கு முதல் இடம் கிடைத்துள்ளது. கறுப்பு பணம் தொடர்பான அறிக்கையை 'குளோபல் பைனான்சியல் இன்டகிரிட்டி' என்ற அமெரிக்க ஆய்வு நிறுவனம் அண்மையில் வெளியிட்டது. அமெரிக்காவின் வாஷிங்டன் நகரைச் சேர்ந்த இந்த அமைப்பு, எந்தெந்த நாடுகளில் இருந்து கறுப்புப் பணம் அதிக அளவு வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகிறது என்று 2004ம் ஆண்டு முதல் 2013ம் ஆண்டு வரை ஆய்வு நடத்தி அறிக்கை வெளியிட்டுள்ளது.

அதில் வெளிநாடுகளில் கறுப்புப் பணத்தை பதுக்குவதில் முதலிடத்தில் சீன நாட்டவர்களும், 2வது இடத்தில் ரஷ்ய நாட்டவர்களும், 3வது இடத்தில் மெக்சிகோ நாட்டவர்களும் இருப்பதாக அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சீனாவில்இருந்து ஆண்டுக்கு சராசரியாக 127 பில்லியன் ஈரோ கறுப்புப் பணமும், ரஷ்யாவில் இருந்து ஆண்டுக்கு சராசரியாக 95.2 பில்லியன் ஈரோ கறுப்புப் பணமும், மெக்சிக்கோவில் இருந்து ஆண்டுக்கு சராசரியாக 48.3 பில்லியன் ஈரோ கறுப்புப் பணமும் வெளிநாடுகளுக்குச் செல்கிறது.

இதேவேளை, இதில் இந்தியா 4வது இடத்தில் உள்ளது. இந்தியாவில் இருந்து ஆண்டுக்கு சராசரியாக 46.7 பில்லியன் ஈரோ கறுப்புப் பணமும் வெளிநாடுகளுக்குச் செல்கிறது. இது இந்திய வரவு – செலவு அறிக்கையில் இராணுவத்துக்கு ஒதுக்கப்படும் தொகையை விட இது பல மடங்கு கூடுதல் என இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# உலகில் மூத்த தம்பதிகளின் 90வது திருமண விழா!

உலகில், அதிக ஆண்டுகளாக வாழும் தம்பதியான இந்திய வம்சாவளி சீக்கிய ஜோடி, தங்களது 90வது திருமண ஆண்டு விழாவை பிரித்தானியாவில் மகிழ்ச்சியுடன் கொண்டாடினர். ஆங்கிலேயர்கள் இந்தியாவை ஆட்சி செய்தபோது, கரம் (20), கர்தரி சந்த் (13) தம்பதிக்கு 1925ம் ஆண்டு டிசம்பர் 11ல், சீக்கிய மரபுப்படி திருமணம் நடந்தது. அதன்பின், 40 ஆண்டுகள் கழித்து பிரித்தானியாவில் குடியேறிய தம்பதியரில், கரணுக்கு தற்போது 110 வயதும், கர்தரிக்கு 103 வயதும் ஆகிறது. சிறந்த ஆரோக்கியத்துடன் அவர்கள் உள்ளனர். இந்நிலையில், உற்றார், உறவினர்கள் முன்னிலையில் தங்களின் 90வது திருமண நாளை, இந்த தம்பதி கடந்த 11ம் திகதி கொண்டாடி மகிழ்ந்தனர்.



திருமணமாகி இத்தனை ஆண்டுகள் நீடித்து இருப்பது எங்களுக்கு கிடைத்த ஆசீர்வாதம். மகிழ்ச்சியின் அடிப்படைக்கு வாழ்க்கையும், திருமணமும் முக்கியமானதாக



அமைகிறது, என அப்போது தம்பதி தெரிவித்தனர். இத்தம்பதிக்கு 8 பிள்ளைகள் உள்ளன. தற்போது, 27 பேரன், பேத்தி, 23 கொள்ளுப்பேரன், பேத்திகள் என வாழ்க்கையை மகிழ்ச்சியாக வாழ்ந்து வருகின்றனர்.

"திருமணம் என்பதே ஆணும், பெண்ணும் சமரசம் செய்து கொண்டு வாழ்வதுதான். எனது பெற்றோர் அத்தகைய ஒரு மகிழ்ச்சிகரமான மணவாழ்க்கையைத்தான் நடத்தினார்கள். எனது தாயும், தந்தையும் எப்போதும் சண்டை போட்டதே கிடையாது. ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் அவர்கள் வாழ்ந்து வருகின்றனர். எனவே, எந்தச் சந்தர்ப்பத்திலும் கோபப்படாமல் இருந்ததால், மனச் சோர்வு இன்றி, சந்தோசமாக உள்ளனர். இதுதான் அவர்களின் மகிழ்ச்சியான மண வாழ்க்கை இரகசியம்" என அவர்களின் மகன்களில் ஒருவரான போல் கூறியுள்ளார்.

இதேவேளை, இந்தத் தம்பதிகள் தங்களது 100 வயதினை எட்டியபோது, பிரித்தானிய மகராணி அவர்களைப் பாராட்டி கடிதம் வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.

## சவூதி அரேபிய வரலாற்றில் புதிய திருப்பம்! உள்ளாட்சித் தேர்தலில் 20 பெண்கள் வெற்றி

சவூதி அரேபியாவில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் மொத்தம் 20 பெண் வேட்பாளர்கள் வெற்றி பெற்றதாக அந்த நாட்டின் பொதுத் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. சவூதியில் 284 உள்ளாட்சி அமைப்புகளுக்கு கடந்த 12ம் திகதி தேர்தல் நடைபெற்றது. முதல் முறையாகப் பெண்கள் அந்தத் தேர்தலில் பங்கேற்றனர். வாக்களித்ததுடன், உள்ளாட்சி அமைப்புகளின் சபைகளின் பதவிக்காக 979 பெண் வேட்பாளர்கள் போட்டியிட்டனர். ஆண் வேட்பாளர்களின் எண்ணிக்கை சுமார் 6,000 என்பது குறிப்பிடத்தக்கது.

அனைத்து இடங்களுக்கும் வாக்கு எண்ணிக்கை முடிவுற்ற நிலையில், 20 பெண் வேட்பாளர்கள் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. அந்நாட்டின் உள்ளாட்சி அமைப்புகளில் மொத்த இடங்கள் சுமார் 2,100 ஆகும்.



இந்த நிலையில், தற்போது தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பெண் பிரதிநிதிகள் எண்ணிக்கை சுமார் ஒரு சதவீதமாக உள்ளது.

சவூதியில் சிறுபான்மையினராக உள்ள ஷியா பிரிவினர் அதிகம் வசிக்கும் கிழக்கு மாகாணத்தில் 4 பெண்கள் வெற்றி பெற்றனர். சாலைகள் அமைப்பது, குழந்தைகளுக்கான காப்பகம், விளையாட்டரங்கம் அமைத்தல், நகர கழிவு அகற்றம் ஆகியவை பெண்களின் முக்கியத் தேர்தல் வாக்குறுதிகளாக இருந்தன.

முடியாட்சி நடைமுறையில் உள்ள அந்நாட்டில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு மட்டும் தேர்தல் நடைபெற்று வருகிறது. சில மாதங்களுக்கு முன்னர் காலமான சவூதி மன்னர் அப்துல்லா, உள்ளாட்சி அமைப்பகளுக்கான தேர்தலில் பெண்கள் போட்டியிடுவதற்கான அரச கட்டளையை 4 ஆண்டுகளுக்கு முன்பு வெளியிட்ட பிறகு நடைபெறும் முதல் உள்ளாட்சித் தேர்தல் இதுதான்.

சவூதி அரேபியாவின் மக்கள்தொகை ஏறக்குறைய 2.1 கோடியாகும். சுமார் 15 இலட்சம் பேர் வாக்காளர்களாகப் பதிவு செய்திருந்தனர் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்தது. இதில் சுமார் 1.19 இலட்சம் பேர் மட்டுமே பெண்கள். ஆண்களிடையே பெண் வேட்பாளர்கள் நேரடியாகப் பிரசாரம் செய்யக் கூடாது என்பது உள்ளிட்ட கடுமையான நிபந்தனைகளுடன் பெண் வேட்பாளர்கள் தேர்தல் களத்தில் இறங்கினர் என்பது குறிப்பிடத்தக்கது. பெண்களுக்குத் தனி வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டன. தேர்தல் மூலம் உள்ளாட்சி சபை உறுப்பினர்களாவது தவிர, மேலும் 1,050 உறுப்பினர்கள், உள்ளாட்சி விவகாரத் துறை அமைச்சகத்தால் நேரடியாக நியமிக்கப்படுகின்றனர். அந்த வகையில், அதிக அளவில் பெண்கள் நியமன உறுப்பினர்களாவதற்கு வாய்ப்பிருப்பதாகக் கூறப்படுகிறது.

## சர்வதேச பயங்கரவாதத்துக்கு எதிராக ஜப்பானில் புதிய துறை

சர்வதேச அளவில் பயங்கரவாத அச்சுறுத்தல்களிலிருந்து ஜப்பானியர்களைப் பாதுகாப்பதற்கான புதிய கட்டமைப்பை அந்நாட்டு அரசு தொடங்குகிறது. வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் அந்தக் கட்டமைப்பில், 40 அதிகாரிகள் நியமிக்கப்படவுள்ளனர். அவர்களில் 20 பேர் ஜப்பானிலும், 20 பேர் வெளிநாட்டுத் தூதரகங்களிலும் பணிபுரிவர். இந்த ஆண்டுத் தொடக்கத்தில், இஸ்லாமிய தேச (ஐ.எஸ்.) பயங்கரவாதிகளால் இரு ஜப்பானியர்கள் தலை துண்டித்துப் படுகொலை செய்யப்பட்டனர்.

அல்ஜீரியாவில் 2013ம் ஆண்டு நிகழ்த்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலில் 10 ஜப்பானியர்கள் உயிரிழந்தனர். பயங்கரவாதம் காரணமாக சர்வதேச அளவில் ஜப்பானியர்களுக்கு அச்சுறுத்தல் இருப்பதை இந்தச் சம்பவங்கள் காட்டுவதாகக் கூறப்படுகிறது. இந்த நிலையில், ஜப்பான் அரசு செய்தித் தொடர்பாளர்

யோஷிடே சுகா கூறியதாவது, சர்வதேச பயங்கரவாதத்தை எதிர்கொள்வதற்காக, புதிய இலாகாவை உருவாக்கியுள்ளோம். அந்த இலாகா, பயங்கரவாதம் குறித்த தகவல்களை சேகரித்து, ஆய்வு மேற்கொள்ளும். வெளிநாடுகளிலுள்ள ஜப்பானியர்களை பயங்கரவாதத் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பதே இந்தக் கட்டமைப்பு அமைக்கப்படுவதன் நோக்கம் ஆகும் என்றார் அவர்.

# சோதனைக் குழாய் மூலம் உலகின் முதல் நாய்க் குட்டிகள்!

உலகிலேயே முதல் முறையாக சோதனைக் குழாய் மூலம் கருத்தரிக்கப்பட்ட 7 நாய்க் குட்டிகள் அமெரிக்காவில் பிறந்துள்ளன. அமெரிக்க விஞ்ஞானிகள் இந்த சாதனையால், அரிய வகை நாய்களைப் பாதுகாப்பதற்கும், மனிதர்கள் மற்றும் விலங்கினங்களின் நோய்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கும் புதிய வழி கிடைத்துள்ளதாக நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். இதுகுறித்து அமெரிக்கா – விலிருந்து வெளியாகும் மருத்துவ அறிவியல் இதழில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: அமெரிக்காவின் கார்னெல் பல்கலைக்கழக கால்நடை மருத்துவத்துறையைச் சேர்ந்த



விஞ்ஞானிகளின் முயற்சியில், சோதனைக் குழாயில் கருத்தரிப்பு செய்யப்பட்ட 7 வெவ்வேறு இனம் மற்றும் கலப்பின நாய்க்குட்டிகள் கடந்த யூலை மாதம் பிறந்தன. நீண்டகாலமாவே, சோதனைக் குழாய் கருத்தரிப்பு முறையில் மனிதர்கள் குழந்தை பெற்று வந்தாலும், அதே முறையில் நாய்களை கருத்தரிக்கச் செய்யும் முயற்சி இதுவரை வெற்றி பெறவில்லை. பெண் நாய்களின் கருத்தரிக்கும் பருவம் மிகவும் மாறுபட்டது என்பதால் அவற்றின் சினை முட்டையை தனியாக எடுத்து, அதனைக் கருவுறச் செய்ய முடியாமல் இருந்து வந்தது. தற்போது, புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சோதனைக் குழாய் மூலம் நாய்க்குட்டிகளையும் பிறக்கச் செய்திருப்பதே அமெரிக்க விஞ்ஞானிகளின் சாதனையென அந்த அறிவியல் இதழில் கூறப்பட்டுள்ளது.

## உக்ரேன், ஸ்பெயின் பிரதமர்களுக்கு அடி உதை!

உக்ரேன் நாட்டின் நாடாளுமன்ற கூட்டம் கீவ் நகரில் நடந்தது. அதில் அரசின் ஆண்டறிக்கையை பிரதமர் அர்செனி யாட்செனியுக் (41) தாக்கல் செய்தார். அப்போது எதிர்க் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஓலே பர்னா என்பவர் திடீரென எழுந்து இடை மறித்து கேள்விகள் கேட்டார். அதற்கு பிரதமர் யட்சபெனிக் பதில் அளித்து கொண்டிருந்தார். அதை ஏற்க மறுத்த நாடாளுமன்ற உறுப்பினர் பர்னா பிரதமர் யட்செனிக் வைத்து படித்து கொண்டிருந்த அறிக்கையை பறித்து வீசினார். மேலும் பிரதமரின் சட்டையை பிடித்து இழுத்து தாக்கினார்.

இதனால் நாடாளுமன்றத்தில் பெரும் குழப்பம் ஏற்பட்டது. இதற்கிடையே பிரதமர் யட்செனிக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் விரைந்து வந்து பிரதமரை தாக்கியவரை கீழே தள்ள, கையில் கிடைத்த வற்றைக்கொண்டு அவரைத் தாக்கினர். சிறிது நேர அமளிக்கு பிறகு நிலைமை சீரடைந்தது.

2014ம் ஆண்டில் ரஷ்ய ஆதரவாளராக இருந்த விக்டர் யனுகோவிச் தலைமையில் இருந்த அரசு வீழ்ந்தது. அதை தொடர்ந்த பிரதமர் ஆர்செனி யட்செனிக் தலைமையிலான அரசு பதவியில் உள்ளது. இவர் ஐரோப்பிய ஒன்றிய ஆதரவாளர் ஆவார். இவர் பதவி விலக கோரி இப்பிரச்சினை ஏற்பட்டது.

இதேவேளை, ஸ்பெயின் நாட்டில் தேர்தல் பிரச்சாரத்தின் போது அந்நாட்டு பிரதமரின் முகத்தில் இளைஞர் ஒருவர் குத்தியுள்ளார். வரும் 20ம் திகதி ஸ்பெயினில் பொதுத் தேர்தல் நடைபெறுவதையோட்டி அரசியல் கட்சிகள் தீவிர தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர். அதன் ஒரு பகுதியாக கலிசியா நகரத்தில் அந்நாட்டு பிரதமர் மரியானோ ரஜோய் பிரச்சாரம் மேற்கொண்டார். அங்கிருந்த சிறிய தேவாலயத்திற்கு முன்பாக திரண்டிருந்த மக்கள் கூட்டத்தில் அவர் உரையாற்ற சென்றபோது பிரதமருடன் செல்பி எடுத்துக்கொள்ளவதாக கூறி அவரது அருகில் சென்ற இளைஞர் ஒருவன் யாரும் எதிர்பாராத வகையில் திடீரென பிரதமர் முகத்தில் ஓங்கி குத்தினார்.

இதில் அவரது முக்கு கண்ணாடி உடைந்து நொறுங்கியது. இந்தசம்பவத்தால் அந்தகூட்டமே திகைத்து நின்றது. எனினும் சுதாரித்த பாதுகாவலர்கள் பிரதமரை தாக்கிய இளைஞரை மடக்கி பிடித்து கைது செய்தனர். கைது செய்யப்பட்ட 17 வயது இளைஞன் பெயர் ஹேறன்ட்ரஸ்டெல் என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது. பிரதமரை தாக்கியது குறித்து தாம் மகிழ்ச்சி அடைந்ததாக அவர் கூறியுள்ளான். ஸ்பெயினில் வேலையில்லா திண்டாட்டம் அதிகரித்து வருவதால் இந்த முடிவை எடுத்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

# அமெரிக்க அனைத்துப் படைப்பிரிவிலும் பெண்களா?

## சிறப்பு அதிரடிப் படை எதிர்ப்பு

அமெரிக்க பாதுகாப்புப் படைகளின் அனைத்துப் பணிப் பிரிவுகளிலும் பெண்களை அனுமதிக்க அந்நாட்டு அரசு அண்மையில் எடுத்துள்ள முடிவுக்கு, அந்த நாட்டு சிறப்பு அதிரடிப் படைகளைச் சேர்ந்தவர்கள் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர். அமெரிக்காவில் டாங்கிகளை ஓடுவது, போர்முனையில் காலாட்படையினரை வழிநடத்துவது, விமானக் குண்டு வீச்சில் ஈடுபடுவது போன்ற கடுமையான பணிப் பிரிவுகளில் சேர பெண்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், இந்தத் தடைகளை விலக்கிக்கொள்ள முடிவு செய்திருப்பதாக பாதுகாப்புத் துறை அமைச்சர் ஆஷ்டன் கார்ட்டர் கடந்த வாரம் அறிவித்தார். அதிபர் ஒபாமாவும், இந்த முடிவு அமெரிக்க வரலாற்றில் ஒரு திருப்புமுனை என்று வருணித்திருந்தார்.

இந்நிலையில், 'ராண்ட் கோர்ப்பரேஷன்' என்ற ஆய்வு நிறுவனம் அமெரிக்க சிறப்பு அதிரடிப்படைகளைச் சேர்ந்த 7,600 பேரிடம் இதுகுறித்து இரகசிய கருத்துக் கணிப்பு நடத்தியது. அந்தக் கருத்துக் கணிப்பின் முடிவில், ஏறத்தாழ அதிரடிப்படையில் பணியாற்றும் அனைவருமே சிறப்பு படைப்பிரிவுகளில் பெண்கள் சேருவதை விரும்பவில்லை என்பது தெரியவந்துள்ளது.

அதிரடித் தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கேற்ற உடல் மற்றும் மன வலிமை பெண்களிடம் இல்லை என்பதே பெரும்பாலானோரின் கருத்தாக உள்ளது. அதிரடிப் படைகளில் பெண்களைச் சேர்ப்பதால் அந்தப் படைகளின் செயல்திறன் குறைவதோடு, தகுதி வாய்ந்த ஆண் படையினர் தங்கள் பணி வாய்ப்பை இழக்க நேரிடும் என



பலர் கூறியுள்ளனர். கருத்துக் கணிப்பில் பங்கேற்ற ஒருவர் அளித்துள்ள பதிலில், எனது நிறை 102 கிலோ. சண்டைக்குச் செல்லும்போது துப்பாக்கி மற்றும் உபகரணங்களின் நிறையுடன் சேர்த்து 127 கிலோவாக இருக்கும்.

சண்டையின்போது எனக்கு அடிபட்டால் 60 கிலோ நிறை கொண்ட ஒரு பெண்ணால் என்னைப் பாதுகாப்பான இடத்துக்குக் கொண்டு வர முடியாது. பெண்களின் சம உரிமைக்காக நான் சாகத்தான் வேண்டுமா? என்று கேள்வி எழுப்பியுள்ளார். மற்றொரு படையினர் அளித்துள்ள பதிலில், வேறு எங்கு வேண்டுமானாலும் ஆணுக்குப் பெண் சரி நிகர் சமானமாக இருந்துவிட்டுப் போகட்டும். ஆனால் தோட்டாக்கள் பாயும் யுத்த களத்தில் அந்த சித்தாந்தம் செல்லாது என்று குறிப்பிட்டுள்ளார்.

### 14 நாடுகளில் அமெரிக்கப் படையினர்

பயங்கரவாதத்துக்கு எதிரான போரில், உலகம் முழுவதும் 14 நாடுகளில் அமெரிக்கப் படையினர் நிறுத்தப்பட்டுள்ளதாக அந்நாட்டு அதிபர் பராக் ஒபாமா தெரிவித்தார். இதுகுறித்து அவர் நாடாளுமன்றத்திடம் கடந்த 11ம் திகதி சமர்ப்பித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, பயங்கரவாதத்துக்கு எதிராக அமெரிக்கா மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, அமெரிக்கப் பாதுகாப்புப் படையினர் உலகின் பல்வேறு நாடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். ஆப்கானிஸ்தான், ஈராக், சிரியா, துருக்கி, சோமாலியா, யேமன், ஜிபூட்டி, லிபியா, நைஜர், கமரூன், மத்திய ஆபிரிக்கக் குடியரசு, எகிப்து, ஜோர்டான், கொசோவோ ஆகிய நாடுகளில் அமெரிக்கப் பாதுகாப்புப் படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர்.

அந்த நாடுகளில் பயங்கரவாதிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ நடவடிக்கைகளுக்கு அவர்கள் உதவி வருகிறார்கள். ஆப்கானிஸ்தானில் 10,500 அமெரிக்கப் படையினர் அந்த நாட்டு இராணுவத்துக்குப் பயிற்சி, ஆலோசனைகள் உள்ளிட்ட உதவிகளை வழங்கி வருகின்றனர். ஈராக்கில் 3,550 படையினர்களும், சிரியாவில் சுமார் 50 படையினர்களும் உள்ளனர். இதுதவிர, பயங்கரவாதிகளுக்கு எதிரான வான்வழித் தாக்குதல் நிகழ்த்துவதற்காக துருக்கி உள்ளிட்ட நாடுகளில் அமெரிக்க படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜப்பான், தென்கொரி, ஜேர்மனி உட்பட்பலநாடுகளிலும் அமெரிக்கப்படையினர் நிரந்தரமாக நிலைகொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சீனாவில் கடும் நிலச்சரிவு கட்டடங்கள் இடிந்து பலர் மாயம்!

சீனாவின் ஷென்ஸன் நகரில் ஏற்பட்ட மண் சரிவில் சிக்கி 91ற்கும் மேற்பட்டோர் காணாமல் போயுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. தொழில் நகரான ஷென்ஸன்னில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலையில் பெய்த பலத்த மழையையடுத்து, அங்குள்ள மண் குவியல் சரிந்தது. விபத்து நடந்த தொழிற்பூங்காவில் கடந்த 2 ஆண்டுகளாக கட்டடங்கள் கட்டுவதற்காக தோண்டப்பட்ட மண் மலைபோல் அங்கு குவிக்கப்பட்டிருந்தது. அதுவே இந்த பேரனர்த்தத்திற்கு காரணமாகியுள்ளது. மண் சரிந்ததைத் தொடர்ந்து, 22 கட்டடங்கள் மண்ணுக்குள் புதைந்தன. மேலும், கட்டடங்களுக்கு அருகில் உள்ள எரிவாயு நிறுவனம் வெடித்து



சிதறியது. தொழிற்பூங்காவில்அமைந்துள்ள பல கட்டடங்களும், பல்வேறு குடியிருப்புக் கட்டடங்களும் மண்ணுக்குள் புதைந்தன. அவற்றில் பணியாளர்கள் தங்கியிருந்த இரு கட்டடங்கள் அடங்கும். மண் சரியத் தொடங்கும் போதே முன்னெச்சரிக்கையாக நூற்றுக்கணக்கானோர் அப்பகுதியிலிருந்து பாதுகாப்பாக வெளியேறினர். மண் சரிவால் இடிந்து விழுந்த கட்டடங்களிலிருந்து 14 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர். சிலர் காயத்துடன் மீட்கப்பட்டனர். மேலும், 91பேரைக் காணவில்லை என்று தகவல்கள் வெளியாகியுள்ளது. தீயணைப்புப் படையினர் உட்பட 1,500ற்கும் மேற்பட்டோர் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

சீனாவின் வடமேற்கு மாகாணமான கான்ஸவில் த 2010ம் ஆண்டு ஏற்பட்ட மோசமான நிலச்சரிவால் மலைப்பகுதியில் இருந்து ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி 1500க்கும் அதிகமான மக்கள் பலியானது குறிப்பிடத்தக்கது.

## உளவுத் தகவல் திரட்ட சீனாவிற்கு ஆலோசனை

தீவிரவாத அச்சுறுத்தல்களை சிறப்பான முறையில் கையாள வேண்டும் என்றால், சீன அரசு பல்வேறு துறைகளிடமிருந்தும் உளவுத்தகவல்களை திரட்டுகிற ஆற்றலை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் என்று சீன உள்நாட்டு பாதுகாப்பு துறை தலைவர் வலியுறுத்தியுள்ளார்.

## நேதாஜியின் இறுதி நாட்கள் இணையதளத்தில்

நேதாஜி சுபாஸ்சந்திரபோஸின் இறுதி நாட்கள் குறித்த ஆவண ஆதாரங்களை அளிக்கும் புதிய இணையதளம், இலண்டனில் தொடங்கப்பட்டது. பிரித்தானியாவைச் சேர்ந்தபத்திரிகையாளரும், போஸின் பேரனுமான ஆஷ்ஸ் ரே, தன் வசமுள்ள ஆவணங்களை வெளியிடும் வகையில், www.bosefiles.info என்ற அந்த இணையதளத்தைத் தொடங்கியுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது, கடந்த 25 ஆண்டுகளாக மேற்கொண்ட ஆய்வுகளின் அடிப்படையில், சுபாஸ் சந்திரபோஸக்கு உண்மையிலேயே என்ன நேர்ந்தது? என்பதை வெளிக்கொணரும் நோக்குடன், இந்த இணையதளம் தொடங்கப்பட்டுள்ளது என்றார். 1945ம் ஆண்டு, தாய்வானில் நிகழ்ந்த விமான விபத்தில் நேதாஜி இறந்ததாக நம்பப்படுகிறது. ஆனால், இதனை ஏற்காத நேதாஜியின் உறவினர்கள், அவரது இறப்பில் மர்மங்கள் இருப்பதாகக் கூறிவருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஐரோப்பிய நாடுகளை தாக்க ஐ.எஸ். திட்டம்

ஐரோப்பிய நாடுகளை தாக்க ஐஎஸ் தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளதாக, அந்த இயக்கத்தில் இருந்து தப்பி வந்த ஜேர்மனியை சேர்ந்த இளைஞர் ஒருவர் தெரிவித்துள்ளார். ஈராக், சிரியா ஆகிய நாடுகளில் ஆதிக்கம் செலுத்தி வரும் ஐஎஸ் தீவிரவாதிகள், உலகின் பல்வேறு நாடுகளில் கால்பதிக்க திட்டமிட்டுள்ளனர். இளைஞர்களை மூளை சலவை செய்து



தங்களது இயக்கத்தில் சேர்த்து வருகின்றனர். பொது இடங்களில் வெடிகுண்டுகள் வைப்பது, தங்களுக்கு எதிராக செயல்படுபவர்களை கடத்தி சென்று கொடூர தண்டனை கொடுப்பது போன்ற செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். அச்சுறுத்தலாக விளங்கி வரும் ஐஎஸ் தீவிரவாதிகளுக்கு எதிராக அமெரிக்கா, ஐரோப்பா உள்ளிட்ட நாடுகள் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றன. இந்நிலையில், ஐஎஸ் தீவிரவாதிகள் ஐரோப்பிய நாடுகளை தாக்க திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ஜேர்மனியை சேர்ந்த இளைஞர் ஒருவர் ஐஎஸ் தீவிரவாத அமைப்பில் இணைந்துள்ளார். அவர்களின் நடவடிக்கை பிடிக்காமல் அங்கிருந்து தப்பித்து வெளியேறி வந்துள்ளார்.

இளைஞரைக் கைது செய்துள்ள ஜேர்மன் காவல்துறையினர் அவரிடம் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

## ரஜனியின் நிலையில்....

சென்று கேள்வி எழுப்புமாறு கூறிய மகிந்த ராஜபக்ச, தன்னைப் பற்றிக் கூறிய விடயங்கள் குறித்து அது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேராவிடமே வினவ வேண்டும் என்றும் கூறினார்.

இதுஇவ்வாறிருக்க, கடந்த சிறீலங்கா ஜனாதிபதி தேர்தலின்போது மகிந்தவை வெற்றிபெற வைப்பதற்காக அப்போது மகிந்த அரசில் அமைச்சராக இருந்த டிலான் பெரேரா 14 கோடி ரூபா அரச திறைசேரிப் பணத்தை தேர்தல் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்தியதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தலத அத்துக்கோரலை நாடாளுமன்றத்தில் குற்றம்சாட்டியுள்ளார். இதில் 91 இலட்சம் ரூபா விளம்பரங்களுக்கும், 35 இலட்சம் ரூபா வெற்றி பெறுவதற்கான மத வழிபாட்டுச் சடங்குகளுக்கும் செலவிடப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## மத்தளம்....

அப்பெண் குச்சியை வாங்கிக் கொண்டு "இது அவனுக்கு போதுமானதில்லை, ஆனாலும் பார்க்கலாம், என்ன மந்திரம் நடக்குதுன்னு" என்று நினைத்துக்கொண்டு அவரிடம் விடைபெற்றார்.

நகரத்தில் தனது வேலைகளை முடித்துக் கொண்டு, திரும்ப வீட்டிற்கு வந்த அப்பெண், தன் மகனிடம் நடந்ததைக் கூறி அக்குச்சியை அவனிடம் தந்தார். அவனும் அம்மா தந்த பொருள் என்பதால் சந்தோசத்துடன் வாங்கிக்கொண்டு விளையாடப் புறப்பட்டான்.

அந்தக் குச்சியை தூக்கிப்போட்டு விளையாடியவாறே அவன் நடக்க, வழியில் தோசை சுட்டு விற்கும் ஒரு பெண்ணைக் கண்டான்.

அப்பெண் பச்சை (ஈரமான) விறகுகளை வைத்து அடுப்பைப் பற்ற வைத்துக் கொண்டிருந்தார். அடுப்பு எரியவில்லை, அக்கம் பக்கமெல்லாம் ஒரே புகை. புகையால் கண் எரிச்சல் ஏற்பட்டு, கண்ணீருடன் இருந்த அப்பெண்ணிடம் சிறுவன், "பெரியம்மா! ஏன் அழறீங்க?" என்று கேட்டான்.

"இல்ல ராசா...! விறகு ஈரமா இருக்கா, எரியவே மாட்டேங்குது. எத்தனை மணி நேரமா முயற்சி செய்றேன் தெரியுமா?" என்று வருத்தத்துடன் கூறினார்.

"கவலைப்படாதீங்க பெரியம்மா! இதோ இது மந்திரக் குச்சியாம். எங்க அம்மா சொன்னாங்க. இதை அடுப்புல வச்சிப் பாருங்க. நல்லா எரியும்னு நினைக்கிறேன்" என்றான்.

அக்குச்சியை அடுப்பில் வைத்ததும், அடுப்பு நன்றாக (தகதக என்று) எரிய ஆரம்பித்தது. மகிழ்ச்சியடைந்த அப்பெண் இரண்டு தோசைகளை சிறுவனுக்குப் பரிசாகத் தந்தார். அதைப் பெற்றுக்கொண்ட அவன் நடந்து சென்றுகொண்டே இருந்தான்.

போகும் வழியில் ஏதோ ஒரு குழந்தை அழும் சப்தம் கேட்டது.

அங்கே ஒரு பெண் பூ வேலைப்பாடு கொண்ட சிறிய, பெரிய பானைகளை விற்றுக் கொண்டிருந்தார். ஆனால் வாங்குபவர்கள் யாரும் இல்லை. அவரது குழந்தைதான் அழுது கொண்டிருந்தது.

"சித்தி, சித்தி... குழந்தை ஏன் அழுது"" என்று கேட்டான் சிறுவன்.

"அவனுக்கு பசிடா கண்ணா! சாப்பிடக் கொடுக்க எங்கிட்டே ஒண்ணுமே இல்லே" என்றார் அந்தப் பெண்.

"இந்தாங்க சித்தி... இந்த தோசையைக் கொடுங்க" என்று அன்புடன் கொடுத்தான் சிறுவன்.

தோசையை வாங்கிக் குழந்தைக்கு ஊட்டிய அப்பெண், பெரிய பானை ஒன்றை சிறுவனுக்குப் பரிசளித்தார். அதை வாங்கிக் கொண்டவன், மீண்டும் நடக்க ஆரம்பித்தான்.

வழியில் ஓர் ஆண், ஒரு பெண்ணைக் கடினமான வார்த்தைகளால் சப்தம் போட்டுத் திட்டிக் கொண்டிருந்தார்.

"என்ன சத்தம் மாமா?" என்று கேட்ட சிறுவனிடம், "இவ என் மனைவி, நான் சலவைத் தொழிலாளி. துணி துவைக்கிற பானையை இவ உடைச்சிட்டா. அதான் கோபத்தில கத்தினேன்" என்றார் அந்த மனிதர்.

"ஓ! கவலைப்படாதீங்க, இந்தப் பானையை எடுத்துக்கங்க" என்று தந்தான் சிறுவன்.

பானையை வாங்கிக்கொண்ட அவர் அவனுக்கு நீளமான ஓர் அங்கியைப் பரிசளித்தார். அதைப் பெற்றுக்கொண்டு சிறிது தூரம் நடந்திருப்பான்...

அங்கே ஓர் ஆற்றங்கரையில் ஒருவர் முழுவதும் நனைந்தவராய் நடுங்கிக் கொண்டிருந்தார். அவரது உடலில் உள்ளாடையைத் தவிர எதுவும் இல்லை. அருகில் சில குதிரைகள் நின்று கொண்டிருந்தன.

"ஐயா! ஏன் நடுங்கறீங்க. உங்களுக்கு என்ன ஆச்சு?"

"அதுவா, நான் ஒரு குதிரை வியாபாரி. என் குடும்பத்தைப் பார்க்க நான் சம்பாதித்த பணம், பொருள்கள் மற்றும் குதிரைகளோடு போய்க்கிட்டிருந்தேன். திருடங்க எல்லாத்தையும் பறித்துவிட்டு, என்னுடைய நல்ல உடைகளையும் கழட்டிக் கொண்டு, இந்த ஆத்துல தள்ளி விட்டுட்டுப் போயிட்டாங்க. எழுந்து பார்த்தா, குதிரைகள் மட்டும் இருக்குப்பா."

"இந்தாங்கய்யா! இந்த அங்கியைப் போட்டுக்கங்க. குளிரால நடுங்கறீங்களே!"

அந்த ஆடையைப் போட்டுக் கொண்டு, தன்னிடமிருந்த ஒரு குதிரையை அவனுக்குப் பரிசளித்தவராய் விடைபெற்றுச் சென்றார் அந்த வியாபாரி. சிறுவன் அக்குதிரையுடன் நடந்து சென்று கொண்டிருந்தான்.

வழியில் ஓரிடத்தில் கூட்டமாகச் சிலர் அமர்ந்திருந்தனர். மணப்பெண்ணும் மாப்பிள்ளையும் இருந்ததால் அங்கு திருமணம் நடப்பதாக நினைத்தான் சிறுவன். ஆனால் அங்கிருந்த எல்லோருமே வருத்தமாக இருப்பதாகத் தெரிந்தது. வாத்தியங்கள் இசைப்பவர்கள் இருந்தும் அந்த இடமே அமைதியாக இருந்தது.

அங்கிருந்த பெரியவரிடம் சிறுவன், "தாத்தா... ஏன் எல்லோரும் வருத்தமா இருக்கீங்க!" என்று கேட்டான்.

"மாப்பிள்ளை குதிரையில் ஏறி, ஊர்வலம் போகணும். குதிரையை அழைத்து வர்றதாகச் சொன்ன ஆள் இன்னும் வரலை. ரொம்ப நேரமாயிடுச்சி. அதுதான் வருத்தத்திற்குக் காரணம்" என்று சொன்னார், மாப்பிள்ளையின் தந்தையான அப்பெரியவர்.

"இந்தாங்க தாத்தா... இந்தக் குதிரையை வச்சிக்கங்க" என்றான் சிறுவன்.

இதைக் கேட்டதும் கல்யாணத்திற்கு வந்திருந்தவர்களுக்கு சந்தோசமடைந்துவிட்டது. மகிழ்ச்சியில் மாப்பிள்ளை அங்கிருந்த இசைக் கருவிகளிலிருந்து ஒரு மத்தளத்தை எடுத்து, அச்சிறுவனுக்குப் பரிசாக அளித்தார்.

அதை மிகவும் உற்சாகத்துடன் பெற்றுக்கொண்ட சிறுவன், ஓடோடி வந்து தனது தாயிடம் மந்திரக்கோல் செய்த மாயத்தைச் சொன்னான். தாய் ஆனந்தக் கண்ணீர் வடித்தார். சிறுவனின் இரக்க குணத்திற்குப் பரிசு கிடைத்துவிட்டதல்லவா?

உம்மு [illegible]
(நாடோடிக் கதை)

## மகளிர் படையணியின்...

பச்சை சேட், பச்சை ஜீன்ஸ் அதுதான் அவரது விருப்பமான உடையும், ராசியான உடையும் கூட. பச்சை உடை போட்டால் நிச்சயமாகத் தெரியும் அண்ணையைச் சந்திக்கப் போறா என்று. அண்ணையிடம் பேச்சு வாங்காத உடுப்போ என்று யாரும் கேட்க.

கொல் எனச் சிரித்தவர்களை கலைத்து குட்டும் விழும். காட்டில் சகல வேலைகள், முகாம் அமைத்தல், கொம்பாசில் நகர்த்தல், கம்பால்பயிற்சி என ஆளுமையுடன் வளர்ந்து வந்தோம். யாவற்றையும் திட்டமிட்டு சகல போராளிகளையும் விளக்கிக் கொண்டு, அவர்களது ஆலோசனைகளையும் கேட்கும் பண்பும், வேலைகளைப் பங்கிடும் நிர்வாகத் திறனும், மனிதர்களை கையாளும் திறமையும் மிக்க தலைவியாக வளர்ந்து வந்தவர். மற்றவர்கள் ஒத்துப்போகும் விருப்பை எம்மில்வளர்த்துச் சென்றவர். உழைத்து உழைத்து தேய்ந்த நிலவு ஒரேயடியாக மறையும் என்று யார் கண்டார். எமக்கெல்லாம் நையிற்றிங்கேலான அவர் நோயால் அவதியுற்றபோது துடித்துப் போனோம். அந்த மணலாற்றின் மடியில் புதையுண்டு போக அவர் விரும்பியும் அன்னை, தந்தை காண உடல் சுமந்து நெல்லியடி சென்றோம். ஊர் கூடி அழுதது. ஊர் கூடி வணங்கியது.

- புரட்சி

## இனப்படுகொலை இராணு....

விரைவில் அந்நாட்டுக்குச் செல்ல இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க, சிறீலங்காவிற்கு நிதியுதவி வழங்கவுள்ளதாக பிரித்தானியா உறுதியளித்துள்ள நிலையில், அது குறித்து பிரித்தானிய நாடாளுமன்றின் அனைத்துக் கட்சிக்குழு விளக்கம் கோரியுள்ளது. குறித்த நிதியானது சிறீலங்காவின் இராணுவ மீளமைப்புக்கு பயன்படுத்தவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், அது எவ்வாறு பயன்படுத்தப்படுமென விளக்குமாறு பிரித்தானிய பிரதி வெளியுறவு அமைச்சர் ஹூகோ ஸ்வைரிடம் கோரப்பட்டுள்ளது. சிறீலங்கா இராணுவம் மீது போர்க்குற்றம் சுமத்தப்பட்டுள்ள நிலையில், அதுகுறித்த விசாரணை இன்னும் சிறீலங்கா அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படவில்லையென தெரிவித்துள்ள அனைத்துக் கட்சிக் குழு, இவ்வாறான நிலையில் நிதியுதவி வழங்குவது குறித்து அதிருப்தியை வெளியிட்டுள்ளது. அண்மையில் பொதுநலவாய அரச தலைவர்களின் மாநாட்டில் சிறீலங்கா ஜனாதிபதி மைத்திரிபால சிறீசேன கலந்துகொண்டிருந்த சந்தர்ப்பத்தில், பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூனை சந்தித்தார். இதன்போது இலங்கைக்கு 6.6 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி வழங்குவதாக டேவிட் கமரூன் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையே, சிறீலங்கா இராணுவக் கட்டமைப்பில் மறுசீரமைப்பை கொண்டுவருவதற்கான பொறுப்பை பிரித்தானியா இராணுவ உயரதிகாரி ஒருவருக்கு அரசாங்கம் வழங்கியிருப்பதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. குறித்த இராணுவ உயரதிகாரி இந்தியா டில்லியிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்தில் கடமை புரிந்து வருபவர் என்றும் கூறப்பட்டுள்ளது. ஜெனீவாவில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைய இந்த மறுசீரமைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட விருப்பதாக அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் ஐ.நா. மனித உரிமைகள் அமைப்பின் கோரிக்கைக்கு செவிசாய்ப்பதுபோல், இது இனப்படுகொலையில் இருந்து இராணுவத்தைக் காப்பாற்றுவதற்கான ஒரு ஏமாற்று நடவடிக்கையெனக் கூறப்படுகின்றது.

## காணாமல்போன....

பாலச்சந்திரன் உள்ளிட்ட பல முக்கிய தளபதிகள் இராணுவத்திடம் சரணடைந்த பின்பே கொலை செய்யப்பட்டார்கள் என்ற உண்மையினை சாட்சியமளித்தவர்களும் தெரிவித்துள்ளனர்.

பருத்தித்துறை பிரதேச செலயத்தில் நடைபெற்ற விசாரணையின்போது ராதா வான் படையின் அன்பன் என்று இயக்கப்பெயர் கொண்ட மூ.சந்திரபோஸ் என்பவருடைய மனைவி தனது சாட்சியத்தில், தனது கணவர் 2009 ஆம் ஆண்டு மோ மாாதம் 19 ஆம் திகதி நாங்கள் எல்லோரும் இராணுவ கட்டுப்பாட்டு பகுதிக்குள் வந்தோம். அப்போது எனது அக்காவின் குடும்பம் எங்களுடன் சேர்ந்து வந்தது. அக்காவின் கணவரும் ராதா வான் படையினைச் சேர்ந்தவர். அவருக்கு விழியன் என்று இயக்கப்பெயரும் உண்டு.

நாங்கள் இரு குடும்பமும் இராணுவ கட்டுப்பாட்டிற்குள் வந்த போது எனது கணவருக்கு தெரிந்த மற்றும் அவருடைய படையணியைச் சேர்ந்த பலர் இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் தமது குடும்பங்களுடன் நின்றார்கள்.

அப்போது இராணுவம் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் ஒரு நாள் இணைந்திருந்தாலும் வந்து சரணடையுங்கள் உங்களுக்கு மன்னிப்பு உண்டு என்று அறிவித்தார்கள். இதன்படி அங்கிருந்தவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து இராணுவத்திடம் சரணடைந்



தார்கள். நான் பார்த்துக் கொண்டிருக்கும் போது 500ற்கும் மேற்பட்டவர்கள் இராணுவத்திடம் தாமாகச் சென்று சரணடைந்தார்கள்.

இவர்களில் புலிகளின் முக்கிய தளபதிகளான விதுசா, துர்க்கா, வேலவன், லோரன்ஸ், லீமா, சேரா போன்றவர்கள் சரணடைந்தார்கள் என்றார்.

இதே போன்று சு.பரமநாதன் என்பவருடைய மனைவி சாட்சியளிக்கையில், எனது கணவர் பூநகரி தளபதியாக இருந்தவர். அவருர் எங்களுடைய குடும்பத்துடன் சேர்ந்துதான் இராணுவ கட்டுப்பாட்டு பகுதிக்குள் வந்திருந்தார். அங்கு பல போராளிகள், தளபதிகள் இருந்தார்கள். அவர்கள் அனைவரும் வணபிதா பிரான்சிஸ் ஜோசப்புடன் சரணடைய முடிவெடுத்தார்கள்.

இதன்படி எழிலன், இராகுலன் மாஸ்ரர், குமாரவேல், ரூபன், தங்கன், மஜீத், இன்பன், இளம்பருதி, ராஜா மாஸ்ரர், வேலவன், சுதா, போண்டா ரூபன் ஆகிய தளபதிகள் ஒன்றாக சடணடைந்தனர். இவர்களில் பலர் கைக்குழந்தைகளுடன் குடும்பமாக சரணடைந்தார்கள் என்றும் சாட்சியமளித்தார்.

இதே போன்று தெல்லிப்பளை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற விசாரணையின் போது மார்க்கண்டு தம்பதியினர் ஜங்கரன் என்று அழைக்கப்படும் எனது மகன் கடாபியின் அனைத்துலக தொடர்பாடல் பிரிவில் புலியழகன் என்னும் பெயருடன் இருந்தார். இவர் இறுதி யுத்தத்தின் போது தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் இளைய மகன் பாலச்சந்திரனின் பாதுகாப்பாளராக இருந்துள்ளார். இருவரும் இராணுவத்திடம் சரணடைந்ததை எங்களுடைய உறவினர்கள் நேரில் கண்டுள்ளனர்.

ஆனால் பாலச்சந்திரன் சுட்டுக் கொலை செய்யப்பட்ட படங்கள் சனல்-4 வில் வெளியிடப்பட்டிருந்தது. பாலச்சந்திரனுடைய படங்கள் வெளியிடப்படும் போது சில இளைஞர்களும் உயிரிழந்து கிடப்பது போல் படங்கள் வெளியிடப்பட்டன. அதில் ஒருவராக என்னுடைய மகன் இருப்பாரோ என்று சந்தேகமாக உள்ளது என்று அத்தம்பதியினர் சாட்சியமளித்திருந்தனர்.

இதே போன்று தந்தை ஒருவர் சாட்சியளிக்கையில் தனது 18 வயது மகன் இரணைப்பாலையில் வைத்து காலில் காயப்பட்டிருந்தார். நடக்கு முடியாமல் அவதிப்பட்ட எனது மகனை இராணுவத்தினர் தாம் கொண்டு சென்று வைத்தியசாலையில் சேர்ப்பதாக கூறி கூட்டிச் சென்றனர்.

இதே போன்று அங்கிருந்த 50ற்கும் மேற்பட்ட சிறுவர்கள் உட்பட காயத்திற்கு உள்ளாகியிருந்தவர்கள் இராணுவம் வைத்தியசாலையில் சேர்ப்பதாக கூறி பேருந்து ஒன்றில் ஏற்றிச் சென்றது. இவ்வாறு வைத்தியசாலையில் சேர்ப்பதாக கூறி அழைத்துச் செல்லப்பட்ட ஒருவரும் இதுவரையில் வீடு திரும்பவில்லை என்றும் அந்த தந்தை தனது சாட்சியத்தில் குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறான சாட்சியங்கள் இறுதி யுத்தத்தின் போது என்ன நடைபெற்றது என்பதை வெளிப்படுத்தியுள்ளது. யுத்தத்தின் போது காயப்பட்டவர்கள், இராணுவத்திடம் சரணடைந்தவர்கள், கைது செய்யப்பட்டவர்கள், விடுதலைப் புலிகளின் தளபதிகள், அவர்களுடைய குடும்பங்கள் ஆகியோர் காணாமல் போகச் செய்யப்பட்டமைக்கான முழுப் பொறுப்பும் இராணுவத்திற்கே என்ற வகையிலான சாட்சியங்களே இங்கு அதிகளவில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்விசாரணையின் பதிவு செய்யப்பட்ட சாட்சியங்கள் தொடர்பில் தனித்தனி விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இவ்விசாரணைகளின் முடிவில் குற்றவாளிகள் யார் என்பது இனங்காணப்பட்டு அவர்களுக்கான தண்டனைகளும் சிறப்பு நீதிமன்றம் ஊடாக சிபார்சு செய்யப்படும் என்றும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் நடைபெற்ற விசாரணைகளின் பின் சாக்குப்போக்கான அறிக்கைகள் வெளியிடப்பட்டிருந்தது. ஆனால் இம்முறை விசாணைகளில் குற்றவாளிகளை தெளிவாக பெயர் விபரங்களுடன் இனங்காட்டி பதிவு செய்யப்பட்ட சாட்சியங்களை கொண்டு சாக்குப்போக்கான அறிக்கையினை வெளியிட முடியாத நிலை ஆணைக்குழுவிற்கு ஏற்பட்டுள்ளது.

இதனாலேயே தனித்தனி விசாரணை என்ற பெயரில் காலத்தினை இழுத்தடிக்கும் முயற்சியில் ஆணைக்குழு ஈடுபட்டுள்ளது என்பதே உண்மை.

J.K.S ALIMENTATION GENERALE
SPÉCIALITÉ AFRO - ASIATIQUE
Ria Western Union MoneyGram
இலங்கை இந்திய மளிகைப் பொருட்களை
உங்கள் Le Bourget இல்
மலிவாகவும் தரமாகவும்
எம்மிடம் பெற்றுக் கொள்ளுங்கள்
52, avenue Jean Jaures
93350 Le Bourget
RER B : Le Bourget
தினமும்
9h00 - 21h00
jks.alimentation@gmail.com

சங்கதி 24

ஆண்கள், பெண்கள், குழந்தைகளுக்கான
சிகையலங்கார நிலையம்.
COIFFURE VITHUSA
TÉL: 06 52 44 89 27
M° : Aubervilers 4 chemmins
Bus : 170,150,249,152
40, RUE HENRI BARBUSSE
93300 AUBERVILLERS

சகாதேவன் மொழிபெயர்ப்பு நிலையம்
நகர சபையில் திருமணம் செய்ய, நகர சபையில் திருமண அறிவிப்பு கொடுக்க, குடும்பத்தை ஸ்பொன்சர் செய்ய, வெளிநாட்டு அமைச்சு மூலம் ஸ்பான்சர் செய்ய, தேசிய பிரஜா உரிமை கோர, போலீசில் வாகனச்சாரதிப் பத்திரம் மாற்ற, போலீசில் வதிவிட உரிமைப் பத்திரம் (விசா) பெற, நீதிமன்றத்தில் பெயர் மாற்றம் செய்ய, ஒப்ரா மற்றும் கமிசனுக்கு விண்ணப்பிக்க
☛ எமது மொழிபெயர்ப்புக்கள் சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படும்.
☛ நேரில் வரமுடியாதவர்களுக்கு தபால் மூலம் மொழிபெயர்ப்புக்கள் அனுப்பி வைக்கப்படும்.
தொடர்பு கொள்ள
SAGADEVAN Pierre
26, rue Philippe de Girard,75010 Paris
Tél: 01 46 07 50 23 Mobile: 06 81 34 41 06
E.mail: saga_de_van@yahoo.fr

Ocean Indien
30 ஈரோவுக்கு மேல் பொருட்கள் வாங்கினால் 5% சிறப்புக்கழிவு
195, Rue du fbg St,Denis, 75010 Paris - FRANCE
Tél - 01 42 09 31 50 Fax - 01 42 09 31 60

பாலன்ஸ் சலூன்
தமிழர்களால்
நடத்தப்படும்
ஆண்கள்
அழகு நிலையம்
புதுப் பொலிவுடன் புதிய முகவரியில்
29 rue Philippe de Girard,
75010 Paris. M° La Chapelle
Tél: 06 63 01 75 80

Ragawa Tailor
அனைத்து விதமான ஆடைகளும்
உங்கள் வசதிக்கேற்ப
வடிவமைத்துக்
கொடுக்கப்படும்.
PANTALON/OURLET 5€
190 Rue Fbg St. Denis
75010 Paris
Tél.:01 40 35 14 77
Métro: Gare du Nord
32, RUE POPINCOURT
75011 Paris
Tél.:07.51.25.41.79
Métro: Saint Ambroise / Richard Lenoir / Voltaire

S.P TRADERS
உங்கள்
மளிகைத்தேவைகள் அனைத்தும்
ஒரே கூரையின் கீழ்!
197,Rue Faubourg Saint-Denis
Tél : 01 40 36 53 99 75010 PARIS
M° : Gare du Nord / La Chapelle

Baby Baloon
பேபி பலூன் டெக்கரேஷன்
Port : 06 13 06 20 29
Tél : 01 39 80 85 23

Drancy RERக்கு அருகாமையில், அனைத்து வகையான
மளிகைப் பொருட்களுக்கும் ஓர் புதிய மளிகை மாளிகை
SDS ALIMENTATION
11, Rue Morin,
93700 Drancy
Tél: 09 52 64 23 72

செல்லில் - உங்கள் அபிமான பேபியின்
புதிய உதயம்
அபி சலூன்
தொடருந்து நிலையத்தில் இருந்து 2 நிமிட நடை தூரம்
11 avenue Maréchal Foch
77500 Chelles
07 82 31 73 94
07 51 28 81 34

Aubervilliers Quatre chemins ல் ஒரு தமிழ்க்கடை
Anna Marché
அனைத்து மளிகைப்பொருட்களுக்கும்...
மொத்தமாக
கொள்வனவு
செய்வோருக்கு
விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்
V.I.P Sarl 4 rue Emest Prévost,
93300 Aubervillers. Tél. : 07 52 94 50 65

பரம் திருமண ஏற்பாட்டாளர்
பிரான்சு
திருமண பந்தத்தில் இருமனம் கலந்து இல்லற வாழ்க்கையில் இணைய இருக்கும் மணமகன், மணமகளை தெரிவுசெய்ய தொடர்புகளை அறிமுகம் செய்து கொள்கின்றோம்.
எம்முடன் தொடர்புகொள்ள:
12, rue Perdonnet, 75010 Paris
e-mail: parissparam@gmail.com
Tél.: 07 53 84 42 84
தொடர்பு கொள்ள வேண்டிய நேரம் தினமும் மாலை 5:00மணி முதல் 8:00 மணி வரை

RAMI COIFFURE
உங்கள் எண்ணம் போல் சிகை அலங்காரம் செய்து கொள்ள
Drancy RER தொடருந்து நிலையத்திற்கு அருகாமையில்
11-13 RUE MORIN, 93700 DRANCY
Port: 06 27 93 63 44

பாரீஸ் அறிவாலயம்
Paris Arivalayam
7, rue Perdonnet, 75010 Paris
Metro : La chapelle Tel: 01 44 72 03 34
இலங்கை இந்திய புலம் பெயர்ந்த தமிழ் எழுத்தாளர்களின் படைப்புக்கள், மேலும் நவீன தேடலுக்கான அனைத்து வெளியீடுகள் பாடசாலை அலுவலகத் தேவைக்கான உபகரணங்கள், சுயமுன்னேற்ற நூல்கள் அனைத்தும் ஒரே இடத்தில் வாங்கிட இன்றே செல்ல வேண்டிய இடம்.

சொகுசுப் பேருந்து சேவை / LOCATION D'AUTOCARS
LOURDES, ESPAGNE, PORTUGAL & PARTOUT EN EUROPE
எங்களிடம் 16 முதல் 77 இருக்கைகள் கொண்ட
சொகுசுப் பேருந்துகள் தமிழ் சாரதிகளுடன் வாடகைக்கு உண்டு
CITY EXPRESS
We Move the Businessclass
Tél: 0 651 651 729 - 06 95 95 63 73
www.cityexpress.fr / contact@cityexpress.fr / facebook: CityExpressParis



# BIJOUTERIE RIAN

## தங்கம் வாங்க விற்க

எமது நிறுவனம் பிரான்ஸ் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதால்
நீங்கள் விற்கும் அனைத்து நகைகளிற்குமான பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளலாம்.

பழைய நகைகளைப் புதுப்பித்துத் தங்கத் தண்ணீர் போட்டுக் கொடுக்கப்படும்.
தங்க நகைகள் திருத்திக் கொடுக்கப்படும்.

09 80 90 60 69

Metro - Gare de L 'est / Gare du Nord

5 rue de Chabrol
75010 Paris

LA SOCIÉTÉ EST DÉCLARÉE AU BUREAU DE GARANTIE DES DOUANES

Noisiel, Torcy, Lognes, Noisy Champs வாழ் மக்களுக்காக...

## நிலா மளிகை ஸ்தாபனம்



இலங்கை, இந்திய, ஆபிரிக்க மற்றும்
ஆசிய மளிகைப்பொருட்கள், மரக்கறி வகைகள்,
கடல் உணவு வகைகள், தொலைபேசி அட்டைகள்

8, Allée Boris Vian - 77186 Noisiel

Noisiel RER Mairie Annexe du Luzard,
Noisiel RERக்கு முன்பாக
Police Municipale, Hotel Hipotel Marne la vallée école, Manché
பாடசாலைகள் சந்தை ஆகியவற்றுக்கு அருகில்

Tel. : 09 51 89 69 80

Neuilly sur marne, Meaux, Torcy, Lagny
வாழ் மக்களின் வசதிக்கேற்ப Chelles மாநகரிலே

## EURO SAGEN

WESTERN UNION MONEY TRANSFER
Ria
MoneyGram money transfer
IMPORT & EXPORT

மளிகைப் பொருட்கள், மரக்கறி வகைகள்
மற்றும் கடலுணவு வகைகள்

62 av du Maréchal Foch, 77500 Chelles
Tél: 0984478750 - Port: 0667204000

நண்பர்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்

இலங்கை, இந்தியா, கனடா நாடுகளில் உள்ள தங்கள் உறவுகளுக்கு
பிரான்சில் இருந்தே மலிவுவிலையில் விமான டிக்கட்டுக்களைப் பெற்றிட இன்றே நாடுங்கள்

## PARADISE Travels

இந்தியாவில் 15 ஆண்டுகாலமாக
பயணிகளுக்கான போக்குவரத்து சேவையை
சிறந்தமுறையில் வழங்கிவருபவர்களின்
சேவை தற்போது பிரான்சிலும்

இந்தியா
இலங்கை,
சிங்கப்பூர், துபாய்
போன்ற நாடுகளுக்கான
விசா
பெற்றுத்தரப்படும்

அதிரடிவிலைக்கழிவு
சென்னை - 465€
கொழும்பு - 465€
ரொறன்ரோ - 580€
மொன்றியல் - 550€
சிங்கப்பூர் - 500€
மலேசியா - 490€
ஒஸ்லோ - 150€
பில்லுந்த் - 220€
கத்தானியா - 125€



48 Rue Louis Blanc
75010 Paris
Tél : 09 83 34 08 80
09 83 34 65 95

1, Chanda Sahib street
Pondicherry
Tél : 0413 - 2223381
Fax : 0413 - 2348442

Email - paradisetravel10@yahoo.fr

## ஒரே தடவையில் தீர்த்துக் கொள்ளுங்கள்!

உணவகங்கள் – கடைகள் – தொழிற்சாலைகள் போன்றவற்றில்



- எலிகள் - சுண்டெலிகள்
- கரப்பான் பூச்சிகள்
- தொல்லைகொடுக்கும் பூச்சிகள்

அனைத்திற்கும் சிறந்தவல்லுனர்கள் மூலம்
ஒரே தடவையில்
பயன்பெற்றிட நாடுங்கள்

DIAPHANECONCEPT
அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்
N° de certificat 10KX50000-4107

Tél.: 01 60 07 34 29

14 Rue Charles V,
75004 Paris.

சுதா / விமல் : 06 34 18 80 04